يَاَيُّهَا النَّاسُ قَدْ جَاۤءَكُمْ بُرْهَانٌ مِّنْ رَّبِّكُمْ وَاَنْزَلْنَا اِلَيْكُمْ نُوْرًا مُّبِيْنًا

# ஜோதியின் அகமியம் - نور الحقائق

*ஆசிரியர்:* **அல்-ஹாஜ், அல்-ஹாபிழ். F.M.இப்றாஹிம் ரப்பானி ஆலிம் ரஹிமஹுல்லாஹ்**

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ وَاِمَامِ الْمُتَّقِيْنَ وَخَاتَمِ النَّبِيِّيْنَ مُحَمَّدٍ وَّ آلِهٖ وَاَصْحَابِهٖ وَذُرِّيَّاتِهٖ وَاَهْلِ بَيْتِهٖ اَجْمَعِيْنَ

## ஜோதியின் அகமியம்

**"லா இலாஹ இல்லல்லாஹ்"** என்னும் ஏகத்துவத்திற்குரிய திருமந்திரத்தை கொண்டு ஆரிபீன்களாகிய ஞானவான்களின் உள்ளங்களை இலங்கச் செய்தவனும், சகல லோகங்களுக்கும் ஆதார - ஆதேயங்களாக இருப்பவனும், துவக்கங்களுக்கெல்லாம் துவக்கமானவனும், முடிவுகளுக்கெல்லாம் முவற்றவனும், எக்காலமும் தனது எல்லா அஸ்மா ஸிபாத்துக்களென்னும் குணப்பண்புகளென்னும் பெயர்களை தனதாகக் கொண்டுள்ள சர்வ பரிபூரணமானவனான **அல்லாஹ்** என்னும் மெய்ப்பொருளுக்கே அனைத்துப் புகழும் அர்ப்பணமாவதாக.

இறுதிமுடிவு என்னும் முக்திப் பேறானது இம்மை, மறுமையெனும் இருஉலகின் ஆசைகளையும் அறவே அழித்தவர்களுக்காகும். அடுத்து ஸலாத்தெனும் கருணையும் ஸலாமெனும் ஈடேற்றமும் சிருஷ்டிகர்த்தாவுக்கு சிருஷ்டி வேறு என்னும் துவிதக் கொள்கையை அழித்து வஹ்தத்துல் உஜூது என்னும் ஏகத்துவப் பொக்கிஷமாகிய திருமந்திரத்தை மனு, ஜின் ஆகிய இரு ஜீவராசிகளின் உள்ளங்களிலும் பிரகாசிக்கச் செய்து மெய்பொருளாகிய இறைவனில் இணைவதற்கு கருணைபுரியும் பொருட்டு இறைவனால் தனக்கு வேற்றுமையின்றி தனது நுணுக்கத்தின் காருண்யத்தைக் கொண்டு தனது ஸிர்ராகிய வெட்டவெளி என்னும் தாத்து முத்லக்கிலிருந்து மகாகாரணம், காரணம், சூட்சுமம் என்னும் உலகங்களாக தோற்றமாகி தனக்குத்தானே **"ரஸூல்"** என்னும் கிரீடத்தை அணிந்துக் கொண்டு தனது தோற்றங்களான சகல லோகத்தாருக்கும் அருள் மகாஜோதியாய் அனுப்பப்பட்ட சம்பூரண உதயமாகிய **"மழ்ஹருல் அதம்மு"** ஸர்வரே தோ ஆலம், ஸர்காரே மதீனா, முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திவ்விய சமூகத்தின் மீதும், பரிசுத்தமும் பயபக்தியும் மலிந்து விளங்கும் அவர்களது குடும்பத்தார்கள் மீதும், அவர்களது தோழர்களனைவர்கள் மீதும் சதாகாலமும் சுரந்துப் பொழிவதாக. ஆமீன். இனி மெய்ப்பொருளைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட இப்பிரபஞ்சமும் இதிலுள்ள தாவர

வர்க்கமும், ஜீவ வர்க்கமும் கண்டிப்பாக ஒரு காரணத்தை கொண்டே தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை சிந்திப்போர் புரிந்து கொள்வர். அதேநேரம் அவைகள் என்ன காரணத்திற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ளனவோ அதற்குரிய காரியங்களில் ஈடுபட்டால் மட்டுமே அவைகள் தோற்றுவிக்கப்பட்டதற்குரிய நோக்கம் நிறைவேறியதாக சொல்ல முடியும். அவ்வாறு இல்லையேல் அவைகளின் உற்பத்தி வீணென்றுதான் கருதப்படும். இதேபோன்றே மனிதபடைப்பின் உற்பத்திக்கும் இதுவே காரணமாகும்.

ஆம். ஒருவன் ஒரு வீட்டை கட்ட நினைத்தால் அதனுடைய நோக்கம் அவன் அதில் குடியிருப்பதாகும்.அவ்வாறின்றி அவ்வீட்டில் அவன் குடியேறாது அப்படியே விட்டுவைத்து முடிவில் அது பாழடைந்து போனால் அதை கட்டியது வீணென்றுதான் கூறுவோம். எனவே சர்வ படைப்புக்களிலும் மகத்தான படைப்பாக விளங்கும் மனிதனை தோற்றுவித்ததிலும் ஒரு காரணம் கண்டிப்பாக இருந்தேயாக வேண்டும். அது இதுதான் என்பதை வேதம் மற்றும் நபிமொழியைக் கொண்டு ஆய்ந்தறிந்து அதில் பூரணமடையக் கூடிய வழியை விளக்கிக் காட்டுவதே இந்நூலின் நோக்கமாகும். ஆதலால் அதை குறித்து ஆய்வு செய்வதற்குரிய விஷயத்தை இப்போது நாம் பார்ப்போம்.

يَاأَيُّهَا النَّاسُ اعْبُدُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ وَالَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ الَّذِي جَعَلَ لَكُمُ الْأَرْضَ فِرَاشًا وَالسَّمَاءَ بِنَاءً وَأَنْزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجَ بِهِ مِنَ الثَّمَرَاتِ رِزْقًا لَكُمْ فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَنْدَادًا وَأَنْتُمْ تَعْلَمُونَ

**“மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன் இருந்தோரையும் படைத்த உங்களின் ரட்சகனை அஞ்சுபவர்களாக இருக்கும்பொருட்டு அவனை ஓர்மைப்படுத்தி வணங்குங்கள். அவன் எப்படிப்பட்டவன் எனில், உங்களுக்கு பூமியை விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் ஆக்கி அந்த வானத்திலிருந்து மழையை இறக்கி அதன்காரணமாக பூமியில் உண்ணக்கூடிய பொருட்களை ஆகாரங்களாக வெளிப்படுத்தித் தந்தானே அப்படிப்பட்டவன். ஆதலால் இவையனைத்தையும் தெரிந்துள்ள நீங்கள் இறைவனுக்கு வேற்றுமை கற்பிக்க வேண்டாம்“** என்பதாக அவனது வேதத்தில் கூறுகிறான். இவ்வசனத்தில் “**வேற்றுமை**“ என்னும் வாக்கியத்திற்கு தப்ஸீர் ரூஹுல் பயான் என்னும் நூலில், “**இறைவனல்லாததை காணுவதாயிருக்கும்**“ எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் வேதத்தில்,...

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونَ

**“மனிதர்களையும் பூதகணங்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை“** என்றும் இறைவன் வேதத்தில் கூறுகிறான்.

ஆதலால் இவற்றையெல்லாம் நாம் ஆய்ந்தறியாமல் இவ்வுலகின் சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே ஒவ்வொரு நாளும் நமக்குள் ஓடிக் கொண்டுள்ள 21600 சுவாசங்களையும்

வீணாக்கி மிருகங்களை போன்று செத்திறந்து போவது மனிதனின் உன்னதமான உன்னதமான உயர்நிலைக்கு முற்றிலும் முரணாகும்.

ஏனெனில் மனித தேகமானது மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்னும் பௌதீகப் பொருட்களைக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டிருப்பதால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அவைகள் தத்தம் தமது இனத்தை நோக்கி திரும்பக் கூடியதாகவும், அதேநேரம் மனிதன் என்னும் மகா பரிசுத்தப்பொருள் மட்டும் அழியாத, அழியமுடியாத நித்திய நிலையினை கொண்ட ஒன்றாகவும் இருக்கிறதென்பதை மனிதர்களாகிய நாம் இன்னும் புரிந்து கொள்ளாமலேயே இருக்கிறோம். இதற்குக் காரணம்,...

كُلُّ شَيْءٍ هَالِكٌ اِلَّا وَجْهَهُ

**“இறைவனுடைய தன்மயமாகிய தாத்தைத் தவிர மற்றவையனைத்தும் அழிந்து போகும்“** என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். மேலும் இந்த வசனத்திற்கு ஷைகு முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் என்பார்....

**“ஒவ்வொரு பொருளின் தன்மயத்தை தவிர முகையித் என்னும் கண்டித்தலாகிய அனைத்து வஸ்துக்களும் அழிந்து போகும்“**

என்பதாக விளக்கம் தருகின்றனர். ஏனெனில் ஒவ்வொரு பொருளுக்குமுரிய உள்ளமை தோற்றமும் எதார்த்தத்தில் வெட்டவெளிக்குரிய தோற்றமாகவே உள்ளது. இந்நிலையில் இதனுடைய கருத்தை நாம் சற்று ஆழமாகக் கவனிப்போமாயின் எந்தெந்த பொருட்கள் கண்டித்தலானவைகளாக இருக்கின்றனவோ அவையனைத்தும் தத்தம்தமது இனத்தை நோக்கி திரும்பி விடுமென்றும். இதில் “**ரூஹ்**“ என்னும் ஆன்மாவுடைய எதார்த்தமானது. அது மெய்ப்பொருளடைய தன்மயத்தைச் சேர்ந்த ஒன்றாக இருப்பதால் மனித ஆன்மாவானது அழிந்துபோகாத நித்தியப் பொருளாக இருக்கிறதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவரை நாம் குறிப்பிட்டுக் காட்டிய ஆதாரங்களை கொண்டு இறைவனை நாம் அவனது தன்மயம் மற்றும் குணாதிசியங்களுடைய நிலைகளைக் கொண்டு அறிந்து காண்பான். காட்சி. காட்சிப் பொருள் என்னும் வேற்றுமை இன்றி ஏகத்துவத்தில் பூரணமடையும் வெட்டவெளியாகிய தாத்து முத்லக்கில் ஐக்கியம் அடைவதற்காகவே இப்பிரபஞ்சத்தில் வந்து நாம் பிறந்திருக்கிறோம் என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் இறைவனை அறிவதற்குரிய வழி என்பது மனிதன் தன்னை அறிவதாகவே இருப்பதால் ஒவ்வொருவரும் தான் யார்? என்பதை ஆய்ந்தறிந்து தனது பூர்வீகமாகிய வெட்டவெளியிலிருந்து ஒவ்வொரு மன்ஸில்களென்னும் ஸ்தானங்கள் வழியாக இறங்கி வந்து ஆலமுந்நாஸூத் என்னும் இந்த ஸ்தூல திரேகத்தை எடுத்து வந்துள்ள வரலாற்றை அறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**மனிதன் தன்னை அறிதல்**

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ

**"தன்னை அறிந்தவரே தனது ரட்சகனை அறிந்தார்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். ஆதலால் நம்மை நாம் அறிய வேண்டியது அவசியமாகும். காரணம் தன்னை அறிந்தால்தான் தனது ரட்சகனாகிய இறைவனை அறிந்து ஈடேற்றம் பெற முடியும். விஷயம் இவ்வாறிருந்தும் நம்மை நாம் ஆய்ந்தறியாது நமக்கு வெளித்தோற்றத்திலுள்ள இதர விஷயங்களை அறிவதிலேயே சதா முயன்று கொண்டிருக்கிறோம்.

அதாவது. இதற்குமுன் நாம் பார்த்திராத ஒரு பொருளைக் கண்டால் அதை ஆச்சரியத்தோடு பார்ப்பதுடன். அது யாரால் செய்யப்பட்டிருக்கும்? எதற்காக செய்யப்பட்டிருக்கும்? என்பதைத்தான் மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள நாம் முயலுகிறோம். இதுபோன்றே வானத்தையும். பூமியையும் அதிலுள்ள நூதனங்களை எல்லாம் தெரிந்து கொண்டிருப்பதாகவும் நாம் சொல்லிக் கொள்கிறோம். இதையெல்லாம் தெரிந்துள்ளதாகக் கூறும் நாம் நம்மை எவ்வாறு தெரிந்துள்ளோம் என்பதை குறித்து யோசிப்போமாயின் ஒன்றுமே புலப்படாமல் அறிவு மலைத்துப்போய் ஸ்தம்பித்து விடுகிறது. ஒருவேளை இவ்விஷயத்தில் சிலர் தெரிந்திருப்பதாகக் கூறுவதுண்டு. அவ்வாறு கூறுபவர் தம்மை எவ்வாறு தெரிந்துள்ளாரெனில். தமது கை. கால். முகம் போன்ற வெளிப்படையான உறுக்களை தெரிந்திருப்பார். இதேபோல அந்தரங்கமான விஷயங்களைப் பற்றி எவ்வாறு தெரிந்துள்ளாரெனில். பசி வந்தால் உண்ணுவது. கோபம் வந்தால் திட்டுவது. காமம் வந்தால் உறவு கொள்வது. உறக்கம் வந்தால் தூங்குவது போன்றவைகளை தான் தெரிந்து வைத்திருப்பார்.

இவ்விஷயத்தில் இவரைப் போலவே மிருக வர்க்கங்களும், பறவைகளும், ஊர்ந்து திரியும் பிராணிகளும் கூட தம்மை தெரிந்துதான் வைத்துள்ளன. இவ்வாறு தெரிந்து கொள்ளுதல் என்பது இறைவனை அறிவதற்கு திறவுகோலாகாது.

மாறாக நமக்குள் உள்ள "**நாம்**" என்பது என்ன பொருள்? நாம் என்னும் அப்பொருள் எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? எங்கே போகும்? நம்முடைய நற்பதவி எது? அது எதில் இருக்கிறது? இவ்வாறே நம்முடைய துர்பதவி எது? அது எதில் இருக்கிறது? இவ்வாறே நம்மிடமுள்ள குணங்களில் சில மிருகங்களின் குணமாகவும், சில சாத்தானுடைய குணமாகவும், சில வானவர்களின் குணமாகவும் இருக்கிறதே! இவைகளில் நமக்குச் சொந்தமான குணம் எது? நமது எதார்த்தமான குணத்தோடு இக்குணங்களெல்லாம் நம்மிடம் எப்படி வந்து சேர்ந்தது? என்பதையெல்லாம் ஆய்ந்து அறியாதவரை நம்மால் நமக்குரிய நற்பதவியை நாம் தேடிப் பெற்றுக் கொள்ளுதல் என்பது ஒருபோதும் சாத்தியமாகாது. இன்னும் இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,....

**கல்லாத கல்வியெல்லாங் கற்றுமுயர் ஞானக்கலை**

**இல்லார்க்கு மின்பநிலை யேதோ நிராமயமே!**

எனக் கூறுகின்றனர். எனவே நம்மை நாம் அறியவேண்டிய முறை எவ்வாறெனில், நம்மை இரண்டு பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதிலொன்று: தேகமாகும். அதாவது வெளிரங்கமான கூடு. இது மண், தண்ணீர், காற்று, நெருப்பு எனப்படும் பௌதீகப் பொருட்களால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது வெளிக்கண்களை கொண்டு காணும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இப்பௌதீகங்கள் ஒவ்வொன்றுக்கும் நமது தேகத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானமும் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

அதாவது மண்ணுக்குரிய வீடாக "**பல்குத்தி**"யையும், அது வெளிப்படுவதற்குரிய வாசலாக "**வாயை**"யும், அதனுடைய நிறம் "**மஞ்சளாக**"வும், அதன் சுவை "**இலைப்பா**"கவும், அதன் குணம் "**வறட்சி**"யாகவும், அதற்குரிய வானவராக "**ஜிப்ரயீல்**" அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்து நீருக்குரிய வீடாக "**ஈரலை**"யும், அது வெளிப்படுவதற்குரிய வாசலாக "**கண்க**"ளையும், அதனுடைய நிறம் "**சிவப்பா**"கவும், அதன் சுவை "**இனிப்பா**"கவும், அதன் குணம் "**குளிர்ச்சி**"யாகவும், அதற்குரிய வானவராக "**மீக்காயீல்**" அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்றே காற்றுக்குரிய வீடாக "**நுரையீர**"லையும், அது வெளிப்படுவதற்குரிய வாசலாக "**நாசி**"யையும், அதனுடைய நிறம் "**பச்சை**"யாகவும், அதன் சுவை "**புளிப்பா**"கவும், அதன் குணம் "**சதுப்பா**"கவும், அதற்குரிய வானவராக "**இஸ்றாயீல்**" அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மனித தேகமாக அமைந்துள்ள மேற்காணும் இந்நான்கு பௌதீகப் பொருட்களும் ஒன்றையொன்று மிகைக்காது சரியாக ஒத்திருக்கும் வரை மனிதன் ஆரோக்கியமாக இருப்பான். இந்நிலையில் உணவு மற்றும் பானம் போன்றவற்றை கொண்டு அவைகளில் ஒன்று மற்றொன்றை மிகக்குமாயின் தேகத்தில் பாதகம் ஏற்பட்டு வாத, பித்த, சிலேத்தும நாடிகளின் ஓட்டத்தில் வித்தியாசம் ஏற்படும். இதில் மருத்துவர்கள் இந்த சூட்சுமங்களை தெரிந்து கொள்வதால் தான் நோய்களென்று அதனைக் கூறி அவைகளுக்கு பரிகாரமும் செய்து வருகின்றனர்.

அதேநேரம் நல்லோர்களான ஞானவான்கள் தங்களின் நாவால் ஓதி ஊதுவதைக் கொண்டும், தமது கருணைக்குரிய பார்வையால் பார்ப்பதை கொண்டும் மனிதர்களை பீடித்துள்ள நோய்கள் நீங்குவதற்குரிய காரணம் என்னவெனில், அவர்கள் நூரானிய்யத் என்னும் ஜோதியின் தரப்பை சார்ந்து நிற்பதாலும், மனித தேகத்தின் நான்கு புலன்களுக்கும் ஜோதியே மூலாதரமாக இருப்பதாலும், தங்களின் எஜமானாகிய ஜோதிக்கு முன்னால் அவைகள் தமது எந்தவொரு சேஷ்டையையும் வெளிப்படுத்துவதற்குரிய சக்தியின்றி எல்லாப் புலன்களும் அடங்கி விடுவதேயாகும்.

மற்றொன்று: அந்தரங்கமான பொருளாகும். அதை "**ஸிர்ரு**" என்றும், "**ரூஹு**" என்றும், "**கல்பு**" என்றும், "**நப்ஸ்**" என்றும் கூறப்படுகிறது. இப்படி நான்கு பெயர்களைக் கொண்டு இப்பொருள் அழைக்கப்பட்டாலும் எதார்த்தத்தில் பொருள் ஒன்றேயன்றி நான்கல்ல. இதை அகக்கண்ணால் மட்டுமே காண முடியும். மேலும் இந்த ரகசியப் பொருளாகிய ஜோதி என்னும் "**நூர்**" தான் மனிதனுக்குள் உறைந்துள்ள "**நாம்**" என்பதாகும். இதற்குரிய வீடாக "**தாமரைக்காயு**"ம், இது வெளிப்படுவதற்குரிய வாசலாக "**ஆகாய**"மும், இதனுடைய நிறம் "**நீல**"மாகவும், இதற்கு நபிகள் நாயகம் "**முஹம்மத்**" ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எஜமானாகவும் இருக்கின்றனர். மனித தேகத்திலுள்ள மற்ற புலன்களெல்லாம் இதற்கு ஊழியர்களாக அமைத்துத் தரப்பட்டுள்ளன. இறைவனை அறிவதுதான் இதனுடைய எதார்த்தமான குணமாகும். எனவே மனிதன் இதை அறிந்து கொள்வதன் மூலம் இறைவனை அறிவதற்கு இது திறவுகோலாக அமைகின்றது. காரணம் இது மதிப்பிட முடியாத ஆதாரப் பொருளாகவும், இதனுடைய எதாஸ்தானம் என்பது இறைவனுடைய திருச்சமூகமாகவும் இருக்கின்றது.

மேற்கண்ட விளக்கங்களை கொண்டு மனிதனுடைய இருப்பானது அவது வெளிரங்கக் கூடாகிய தேகத்தைக் கொண்டு நிலைத்திருப்பதல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் தேகம் என்பது பிணமாகும். நாம் நமது இரு கண்களையும் மூடிக் கொண்டு நமது தேகத்தையும் நம்மை சுற்றியுள்ள வானம் பூமி போன்ற அனைத்தையும் மறந்து நம்மை நாம் நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் அப்போதும் நாம் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். ஒருவர் இதனை ஆழ்ந்து சிந்திப்பாராயின் மறுமை என்பதற்குரிய ரகசியம் என்னவென்பதை தெரிந்து கொள்வார். இவ்வாறே நாம் நமது தேகத்தை விட்டு நீங்கி விட்டாலும் கூட அப்போதும் அழியாது நிலைத்திருப்போம் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

**குர்ஆனின் மீது விசுவாசம்**

நம்மில் பெரும்பாலோர் இறைவன் மூலம் அருட்கொடையாக அனுப்பப்பட்ட வேதமாகிய குர்ஆனை விசுவாசித்தல் என்பதற்கு எப்படிப்பட்ட கருத்தைக் கொண்டுள்ளனர் எனில், குர்ஆன் என்பது 6666 வசனங்களையும், 114 அத்தியாயங்களையும், 77,934 வாக்கியங்களையும், 10,25,000 எழுத்துக்களையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரு வேதம் என்பதாக எண்ணிக் கொண்டு அதை ராகம்போட்டு வாசிப்பதும், வாசைன பொருட்களைக் கொண்டு அதை மணமாக்கி வைப்பதுமே போதுமெனத் தீர்மானித்துள்ளனர்.

இதனை எதற்கு ஒப்பிடாலாமெனில், ஒரு அரசன் ஒருவனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அதில் ஆணையிட்டுள்ளவாறு செயல்படவேண்டுமென்றும், இல்லையேல் அரசு தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவன் அக்கடிதத்தை வாங்கி அதில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை மட்டும் ராகம்போட்டு படித்துவிட்டு அதனுடைய அர்த்தம் இதுதான் என்பதை புரிந்து கொள்ளாமல் அரசனிடமிருந்து வந்துள்ள கடிதம் என்பதற்காக அதை வாசைன திரவியங்களால் மணமேற்றி பெட்டியில் பூட்டி வைத்துவிட்டு தனது காரியத்தில் அவன் ஈடுபட்டிருந்தான்.

இந்நிலையில் தவணைக்குரிய காலம் முடிந்து அரசாணை வந்தபோது அதைக் கண்ட அவன், அரசரின் கடிதத்தை நான் எத்தனை மரியாதையோடு ராகம்போட்டு படித்தேன். அதுமட்டுமா? அதற்கு மணம்பூசி பத்திரமாக பெட்டியில் வைத்து பூட்டியும் வைத்தேனே! இதற்காகவா எனக்குத் தண்டனை? இது நியாயமா? எனக் கேட்கும் மடையனின் செயலுக்கே இதை நாம் ஒப்புநோக்க வேண்டியுள்ளது.

குர்ஆனின் கருத்தை விளங்கிக் கொள்வதில் இவ்வாறு பேதமையை கையாளுபவன், ஏதாவதொரு தந்தியோ அல்லது கடிதமோ அவனுக்கு வந்தால் கூறப்பட்டுள்ள விஷயத்தை அவனால் படிக்க முடியாவிட்டாலும் கூட படிக்கத் தெரிந்தவர்களிடம் கொண்டுபோய் கொடுத்து அதில் கூறப்பட்டுள்ள விஷயத்தை கேட்டுத் தெரிந்து கொண்டு அதில் கூறப்பட்டுள்ளவாறு செய்து முடிக்கிறானே! ஒரு மனிதனிடமிருந்து வந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளவாறு தான் செயல்படாவிட்டால் தனக்கு கஷ்டமும் நஷ்டமும் வந்து சேரும் என்பதை உணர்ந்து கொள்பவன் குர்ஆனுடைய விஷயத்தில் மட்டும் இப்படிப்பட்ட பேதமையை கையாளுவது விந்தையல்லவா!

எனவே குர்ஆனை விசுவாசித்தல் என்பதற்குரிய கருத்தானது, அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களை கற்றறிந்து அதற்கேற்றவாறு செயல்படுவதாகும் என்பதால் ஒவ்வொருவரும் அவ்வாறு கற்றறிந்து செயல்பட்டு தமது விசுவாசத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களின் சந்ததிகளுக்கும் குர்ஆனை ஓதவும், அதனுடைய அர்த்தங்களை விளங்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறின்றி என் பிள்ளையும் குர்ஆனை கற்றிருக்கிறான் என்னும் பெருமைக்காக குர்ஆனை அரபி மொழியில் ஓதுவதற்கு மட்டும் கற்றுக் கொடுப்பது குங்குமம் சுமந்த கழுதையின் கதைக்கே ஒப்பாக முடியும்.

ஆம். அவ்வாறு தெரிந்து கொள்ளாவிடில் தமது வாழ்க்கையில் நேர்வழியை தெரிந்து விசுவாசத்தை பாதுகாத்துக் கொள்ளல் என்பது அசாத்தியமாகிப் போய்விடும். இதற்கு பெற்றோர்களும் பாதுகாவலர்களும்தான் காரணவாதிகளாகும். மேலும் தமது பிள்ளைகளின் மீது அன்பு கொண்டுள்ள பெற்றோர்கள் அவர்களுக்காக சொத்தையும் நிலபுலன்களையும் சேர்த்து வைத்துவிட்டுச் செல்வதைவிட அவர்கள் குர்ஆனை ஓதவும்இ அதனுடைய அர்த்தத்தை புரிந்து கொள்ளவும் கற்றுக் கொடுப்பதே மகத்தான உதவியாகும். காரணம் இவ்வுலக இன்பதுன்பங்கள் என்பவை சொற்ப காலத்திற்குள் அழிந்து போய்விடும். ஆனால் மறுமையின் இன்பமோ எக்காலமும் அழியாத ஒன்றாக இருப்பதால் உலக வாழ்க்கைக்குரிய முயற்சியை விட மறுமைக்குரிய முயற்சியே அறிவார்த்தமான ஒன்றாகும்.

**ஸுலூக்**

மழ்ஹருல் அஜாயிப் ஷாஹெ மர்தான் ஹழ்ரத் ஸையிதினா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், யாரஸூலல்லாஹ்! இறைவனை பெற்றுக் கொள்வதற்கும், அவனில் இணைவதற்கும், அவனை சமீபிப்பதற்குமுரிய எளிதான வழி எது என்று கேட்க, அதற்கு அருமை நபியவர்கள்: எல்லா

நேரங்களிலும் இறைவனை தியானிப்பதை பழக்கப்படுத்திக் கொள்ளும் என்றனர். அதுகேட்ட ஹழ்ரத் அலியவர்கள்: எல்லோரும் தான் இறைவனை தியானிக்கிறார்களே! என்று சொல்ல, அதற்கு அருமை நபியவர்கள், அலியே! அல்லாஹ் எனக் கூறும் ஒருவன் இப்பூமியில் இருக்கும் காலமெல்லாம் இப்பூமி அழிவை சந்திக்காது என்றனர்.

அதன்பின் ஹழ்ரத் அலியவர்கள் அருமை நபியவர்களை நோக்கி, யாரஸூலல்லாஹ்! நான் எப்படி தியானிக்க வேண்டும்? என்று கேட்க, அதற்கு அருமை நபியவர்கள், அலியே! உமது இரு கண்களையும் மூடிக் கொண்டு நான் மூன்றுமுறை சொல்வதைக் கேட்டு நீரும் அவ்வாறே மூன்று முறை என்காதில் கேட்கும்வண்ணம் சொல்லும் என்றனர். அதன்பின் அருமை நபியவர்கள் ஹழ்ரத் அலியவர்களுக்கு "**லா இலாஹ இல்லல்லாஹ்**" என்பதற்குரிய தியானத்தை சொல்லிக் கொடுத்தனர். இதுதான் அருமை நபியவர்கள் ஹழ்ரத் அலியவர்களுக்கு கொடுத்த முரீதாயிற்று. இதைப் பற்றி...

لَقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُو اللَّهَ وَالْيَوْمَ الْآخِرَ وَذَكَرَ اللَّهَ كَثِيرًا

"**இறைவனையும் இறுதிநாளையும் ஆதரவு வைத்து இறைவனை அதிகமதிகம் தியானிப்போருக்கு இறைத்தூதராகிய ரஸூலிடத்திலே அழகான முன்மாதிரி இருக்கின்றது**" என்பதாக இறைவன் அவனது வேதத்தில் கூறுகிறான்.

இந்த வசனத்தில் அருமை நபியவர்களை பின்பற்றி நடத்தல் என்பதன் கருத்து, அவர்களை எல்லா விஷயங்களிலும் பின்பற்றி நடப்பதாகும். அவர்கள் மார்க்கத்திற்காக எத்தனை பாடுபட்டார்கள் என்பதையும், அதன் காரணமாக அவர்களுடைய விரோதிகள் அவர்களை எத்தனை துன்பங்களுக்கு இலக்காக்கினார்கள் என்பதையும், அவற்றையெல்லாம் நபியவர்கள் எவ்வாறு பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள் என்பதையும் அறிந்து அதுபோன்ற சந்தர்ப்பங்களில் நமக்கு நேரும் கஷ்டங்களையும், துன்பங்களையும் நாமும் பொறுமையோடு சகிக்க பழகிக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி மற்ற வணக்க வழிபாடுகளின் விஷயத்தில் மட்டும் நபியவர்களை பின்பற்றிக் கொண்டு இதர விஷயங்களில் அவர்களை நாம் பின்பற்றாது இருந்தால் நபியவர்களை நாம் எல்லா விஷயங்களிலும் பின்பற்றியவர்களாக மாட்டோம். இதனால் தான் இறைநேசர்களை சில அறிவீனர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உட்படுத்திய போதெல்லாம் அவர்கள் அதனை பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

இனி "**தியானம்**" என்பதன் கருத்து யாதெனில், **லா இலாஹ இல்லல்லாஹ்** என்னும் திருமந்திரத்தை நாவால் மொழிவதோடு உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களும் வந்து அணுகாதவாறு இறைவனை முறாகபா செய்வ(தியானிப்ப)தாகும். தியானிப்பவர் துவக்கத்தில் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை அத்தனை எளிதாக அகற்ற முடியாது. இருந்தாலும் நாவைக் கொண்டு தியானிப்பதை அதிகப்படுத்தி வந்தால் உள்ளம் நாவுக்கு ஆதாரமாக இருப்பதால் அச்சக்தி காலப்போக்கில் உறைந்து அதனால் "**ஹுழூர்**" (இறை சமீபம்) உண்டாகி அந்த எண்ணங்கள் அழிந்து போகும். அப்போது உள்ளத்தில் தொடர்ந்து தியானம் மட்டுமே

நடந்து கொண்டிருக்கும். அத்தகைய நிலையை அடைந்து விட்டால் தியானிப்பவர், தான் என்னும் உணர்வை விட்டும் நீங்கி இறைவனில் அழிந்து தியானிப்பவரும், தியானிக்கப்பட்டவரும், தியானமும் ஒன்றாகி விடும். ஆதலால் மேற்காணும் முறைப்படி தியானித்து கல்வத்திலாகிக் கொள்ள வேண்டும்.

இனி "**கல்வத்**" என்பது இருவகைப்படும். ஒன்று: மனிதர்களை விட்டும் தனித்திருத்தல். மற்றொன்று: வேற்றுமை என்னும் ஊசாட்டங்கள் உள்ளத்தில் வந்து அலைமோதாமல் ஏகத்துவத்திற்குரிய திருமந்திரத்தி(கலிமாவி)ன் கருத்தில் நிலைத்திருத்தல். இவ்விரு வகை கல்வத்தை கொண்டும் நாடப்பட்டக் கருத்து யாதெனில், பார்வையை கொண்டும், கேள்வியைக் கொண்டும், வாடையைக் கொண்டும், ஸ்பரிச உணர்வைக் கொண்டும் ஏற்படுகின்ற ஊசாட்டங்கள் உள்ளத்தில் வந்தணுகாதவாறு இருக்கும்வண்ணம் ஒரு இடத்தில் தனித்திருப்பதாகும். அவ்வாறு தனித்திருப்பதை கொண்டு பத்து வகையான பிரயோஜனங்கள் ஏற்படும்.

1. நாவைக் கொண்டு ஏற்படும் பாவங்களை விட்டும் பாதுகாக்கும்.
2. பார்வையை கொண்டு ஏற்படும் பாவங்களை விட்டும் பாதுகாக்கும்.
3. உள்ளத்தால் ஏற்படும் பாவங்களை விட்டும் பாதுகாக்கும்.
4. உலகப்பற்றை விட்டும் உள்ளம் தூய்மை பெறும்.
5. தீமைகள் வந்து அணுகாதவாறு பாதுகாக்கும்.
6. வணக்கத்தில் அதிகமான ஈடுபாடு ஏற்படும்.
7. வணக்கத்திலுள்ள இன்பத்தை அனுபவிக்கும் நிலை உருவாகும்.
8. உள்ளமும் தேகமும் அமைதி பெறும்.
9. தனக்கும் தனது மார்க்கத்திற்கும் தீமை நேராமல் பாதுகாக்கும்.
10. ஆராய்ச்சியை கொண்டு ரகசியங்கள் வெளிப்படும். இதனாலேயே...

وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ إِلَىٰ مَا مَتَّعْنَا بِهِ

"**நாம் உலக அலங்காரங்களை ஏற்படுத்தி உள்ளோமே அதன் பக்கமாக உமது இரு கண்களையும் பிரயோகிக்க வேண்டாம்**" என்பதாக இறைவன் தனது வேதத்தில் எச்சரிக்கை செய்கிறான்.

அடுத்து தொழுகையை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டியமுறை எவ்வாறெனில். இறைவனுடைய சமூகத்தில் நம்மை சமீபமாக்கிக் கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்வதற்காக நம்மீது கடமையாக்கப்பட்ட ஐவேளை தொழுகைகளையும், சுன்னத்தான. நபிலான தொழுகைகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வரவேண்டும். ஏனெனில் தொழுகையானது உள்ளத்தில் ஓர்மை நிலையை ஏற்படுத்தி உள்ளம் தூய்மையடைவதற்கு அனுகூலமான வணக்கமாகவும், கணக்கில்லாத பிரயோஜனங்கள் நிறைந்ததாகவும் உள்ளது. இதனாலேயே....

وَالَّذِيْنَ هُمْ عَلٰى صَلٰوتِهِمْ يُحَافِظُوْنَ اُولٰٓئِكَ هُمُ الْوَارِثُوْنَ الَّذِيْنَ يَرِثُوْنَ الْفِرْدَوْسَ هُمْ فِيْهَا خَالِدُوْنَ

**"தொழுகையில் பேணுதலாக இருக்கிறார்களே அவர்கள் சுவர்க்கத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வாரிசுகளாகவும். சதாகாலமும் அதிலேயே நிலைத்திருப்பவர்களாகவும் இருக்கின்றனர்"** என்பதாக இறைவன் அவனது வேதத்திலும்....

اَفْضَلُ الْعِبَادَاتِ الصَّلٰوةُ لِاَوَّلِ وَقْتِهَا

**"வணக்கங்கள் அனைத்திலும் மிகச்சிறந்த வணக்கமானது அதற்குரிய நேரம் துவங்கியதும் தொழுவதாகும்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூறுகின்றனர். ஆதலால் தொழுகையை தொடர்ந்து நிறைவேற்றி வர வேண்டும்.

இனி "**ஸகாத்**" கொடுக்க வேண்டிய முறை எவ்வாறெனில். நமது இதயத்தில் குடி கொண்டுள்ள கஞ்சத்தனத்தை நீக்கி இதயம் தூய்மையாவதை பழக்கப்படுத்திக் கொள்வதற்காக நம்மீது கடமையாக்கப்பட்ட ஸகாத்தை நாம் முறையாகக் கொடுத்து வருவதோடு, சுன்னத்தான தான தர்மங்களையும் செய்துவர வேண்டும். இதனாலேயே....

وَاَنْفِقُوْا مِمَّا رَزَقْنَاكُمْ مِنْ قَبْلِ اَنْ يَّاْتِيَ اَحَدَكُمُ الْمَوْتُ فَيَقُوْلَ رَبِّ لَوْلَا اَخَّرْتَنِيْ اِلٰى اَجَلٍ قَرِيْبٍ فَاَصَّدَّقَ وَاَكُنْ مِّنَ الصَّالِحِيْنَ

**"உங்களில் ஒருவனுக்கு மரணம் வந்து அவன், ரட்சகா! என்னை இன்னும் சிறிது காலம் விட்டுவை. நான் தர்மம் செய்து நல்லடியார்களின் கூட்டத்தில் சேர்ந்து கொள்கிறேனென அவன் கூறுமுன் உங்களுக்கு நாம் தந்துள்ள செல்வத்திலிருந்து இறைப்பாதையில் செலவு செய்து கொள்ளுங்கள்"** என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான்.

அடுத்து "**நோன்பு**" என்பதன் கருத்து, நம்மிடம் உணவின் மீதுள்ள மோகம், போக இச்சை போன்றவைகளை அடக்கி அவற்றை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்வதற்காக நம்மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. மேலும் பர்ளான நோன்போடு சுன்னத்தானஇ நபிலான நோன்புகளையும் நாம் தொடர்ந்து நோற்றுவர வேண்டும்.

ஏனெனில் நோன்பு வைப்பதானது மனஇச்சைகளை அடக்கி ஆன்ம சக்தியை அதிகப்படுத்திக் கொள்வதற்கும் தேகம் ஆரோக்கியமாக இருப்பதற்கம் அனுகூலமாக இருக்கின்றது. இதனாலேயே,...

كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

**"நீங்கள் பயபக்தியாளர்களாக ஆகும்பொருட்டு உங்களுக்கு முன்னிருந்தோர் மீது நோன்பை கடமையாக ஆக்கியது போன்று உங்கள் மீதும் கடமையாக ஆக்கப்பட்டுள்ளது"**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இனி ஹஜ் என்பது என்னவெனில் ,மனிதன் நற்பதவியில் பூரணநிலையை அடைவதற்காக அவன்மீது கடமையாக்கப்பட்ட ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். இதைப் பற்றி இறைவன் தனது வேதத்தில்...

وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلًا

**"மனிதர்களில் சக்தி பெற்றவர்கள் இறைவனுக்காக பைத்துல்லாஹ்வாகிய க∴பாவுக்குச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றுவது அவர்கள் மீது கடமையாகும்"** எனக் கூறுகிறான்.

**ஹலால் ஹராம் என்பதன் கருத்து**

இஸ்லாமிய மார்க்கத்தில் எந்தெந்த காரியங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதோ அவையனைத்தும் மனித தேகத்திற்கும் ஆன்மாவுக்கும் முக்தியை தரக்கூடியதாகவம், எந்தெந்த காரியங்கள் தடை செய்யப்பட்டுள்ளதோ அவையனைத்தும் ஆன்மாவுக்கும் தேகத்திற்கும் நாசத்தை வரவழைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.

எவ்வாறெனில், நற்குணத்தை எடுத்து வணக்கங்களை செயல்படுத்தி வருவதும், அனுமதிக்கப்பட்ட உணவை அனுமதிக்கப்பட்ட வழியில் தேடி உண்பதும், ஜனங்களுக்கு உதவி ஒத்தாசை போன்றவற்றை செய்வதுமான இவைகளெல்லாம் ஆன்மாவுக்கும் தேகத்திற்கும் முக்தியைக் கொடுக்கக் கூடியவைகளாகும். இதுபோன்றே தீயகுணத்தை எடுத்து மோசம் செய்வதும், பொறாமை கொள்வதும்இ பொய் பேசுவதும், புறம் பேசுவதும், உறவாடிக் கெடுப்பதும், கஞ்சத்தனம் செய்வதும் போன்ற செயல்களெல்லாம் ஆன்மசக்தியைக் குறைத்து உள்ளத்தை இருளடையச் செய்வதாகும். இவ்வாறே தடை செய்யப்பட்ட வழியில் பொருள்தேடி உண்பதும், மது அருந்துவதும், விபச்சாரம் செய்வதும், தேகத்தை நோய்க்கு உள்ளாக்கி தோற்றத்தை அவலட்சணப்படுத்தி மனிதர்கள் இகழுமாறு செய்யக்கூடியதாக இருக்கின்றன. இந்நிலையில் இதனை யார் புரிந்து கொள்கிறாரோ அவர் ஒரு போதும் தடைசெய்யப்பட்ட காரியங்களில் ஈடுபடவே மாட்டார் என்பது திண்ணம்.

**வணக்கத்தின் அந்தரங்கம்**

இறைவன் மனிதர்கள் மீது நோன்பு வைப்பதை கடமையாக ஆக்கியதன் நோக்கம், உணவின் மீதுள்ள விருப்பம், போகஇச்சை போன்றவைகளை குறைக்க வேண்டும் என்பதேயாகும். விஷயங்கள் இவ்வாறிருக்க நாம் ரமழான் மாதத்தில் பகல் முழுவதும் பட்டினியாக இருந்தாலும் இரவானதும் உணவை பலமடங்காக அதிகப்படுத்திக் கொள்வதால் உண்ணுவதன் மூலம் மனஇச்சையை ஒன்றுக்கு பத்தாக வளர்ப்பதோடு, இப்படி செய்வதைத்தான் நோன்பு என்பதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அத்துடன் ரமழான் மாதத்தில் சாத்தானுக்கு விலங்கிடப்பட்டிருக்கும் என்றும், அப்போது சாத்தானுடைய சேஷ்டைகள் எதுவும் நடைபெறாது என்றும் உலமாக்களால் சொல்லப்படுவதையும் நம்மில் அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம்.

இதனுடைய கருத்து, ரமலானில் மன இச்சைகளுக்கு இடம் கொடுக்காமல் உணவு, பானம், போகம் போன்றவைகளை கட்டுப்படுத்தி வைத்திருப்பதேயாகும். மேலும் நோன்பு நோற்றுள்ள நிலையில் உண்ணவோ, குடிக்கவோ முடியாதிருப்பதால் அதிகமாக கோபமும் அடைகிறோம். இதன் காரணமாக மாற்று சமுதாயத்தை சார்ந்தவர்கள் சிறப்புக்குரிய ரமலான் மாதத்தை முஸ்லிம்களுக்கு வெறிபிடிக்கும் மாதெமென்று கேலி செய்யவும் இதன் மூலம் நாம் வழிவகுத்துவிட்டோம்.

இவ்வாறே மக்காவில் கஃபாவுக்குப் போய் பர்ழான ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு வந்தவர்களில் சிலர், தமது பெயரோடு ஹாஜி என்னும் பட்டப்பெயரையும் சேர்த்து கையொப்பமிட்டு வருவதை நாம் பார்க்கலாம். அவ்வாறு செய்வதில் அவர்கள் புகழை விரும்புவார்களாயின் அது ஷரீஅத்துடைய கட்டளைக்கு மாற்றமாகவே முடியும். காரணம் புகழுக்கு ஆசைப்படுவது ஹராமாகும்.

இதுபோன்றே ஸகாத் கொடுக்கக் கடமைப்பட்ட செல்வந்தர்கள் தமக்குரிய கடமையை சரியாக செய்து வருவார்களாயின் இஸ்லாமியர்களில் பிச்சை எடுப்போரை காண்பதே அரிதாகி விடும். ஒருவர் கொடுக்க வேண்டிய ஸகாத்துக்குரிய தொகையை, உதாரணமாக நூறு ரூபாயை கடனில்லாத நூறு நபர்களிடம் நபர் ஒன்றுக்கு ஓருரூபாய் வீதம் பங்கிட்டுக் கொடுப்பதை விட கடனில் கஷடப்படும் ஒரு முஸ்லிமிடம் கொடுத்து அவரை அத்துன்பத்திலிருந்து விடுவிப்பதே மிகவும் உத்தமமாகும்.

இவ்வாறே சிலர் தொழுகைக்குப் போகும்போது, சிலசமயம் தமது நண்பர்களிடம், இதோ இரண்டு நிமிடத்தில் தொழுதுவிட்டு வந்து விடுகிறேன் எனக் கூறிவிட்டுச் செல்வதோடு அவ்வாறே இரண்டு நிமிடத்தில் தொழுது விட்டு வருவதையும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட தொழுகையில் உள்ளத்திற்கு நிம்மதி என்பது எப்படி கிடைக்கும்?

இன்னும் சிலர் ரமலான் மாதத்தில் மட்டும் நோன்புடன் தொழுகையையும் சேர்த்துத் தொழுவதும், ரமலான் மாதம் முடிந்து ஷவ்வால் மாதத்திற்குரிய பிறையை பார்த்ததும் நோன்போடு தொழுகையையும் சேர்த்து பயணம் அனுப்பி விடுவதையும் பார்க்கிறோம். இவர்கள் இப்படிச் செய்வதற்குக் காரணம், ரமலான் மாதத்தில் வணங்கப்படும் வணக்கத்திற்கு அதிகமான நன்மைகள் கிடைக்கும் என்பதாக உலமாக்கள் சொல்வதை கேட்டு அதிக

நன்மைகள் கிடைக்கும் சமயங்களில் மட்டும் வணங்கி அதிகமான நன்மையை தேடிக் கொண்டால் அது அந்த ஆண்டு முழுமைக்கும் போதுமானதாக இருக்குமென அவர்கள் எண்ணிக் கொண்டதேயாகும்.

இனி நமது செயல்பாடுகளையும் வணக்கங்களையும் கவனிப்போமாயின் இறைவனால் ஏவப்பட்ட காரியங்களில் சிலவற்றை மட்டும் நாம் செயல்படுத்திக் கொண்டு, அவனால் தடை செய்யப்பட்டவைகளில் பலவற்றை செய்து வருவதாகவே தெரிய வருவதால் நமது வணக்கங்கள் அனைத்தும் சிறு பிள்ளையிட்ட வெள்ளாமை என்னும் பழமொழிக்கு ஒப்பாகவே போய் கொண்டிருக்கின்றன. இதனாலேயே தக்கலை பீர் முஹம்மத் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**உள்ளெழுத்தை ஓதறியா மூடரே ஊமைகண்ட**

**வெள்ளெழுத்தை போல விளம்புகிறீர் -வெள்ளெழுத்தை**

**மாற்றிப் பிடிக்க வகையறியா மாந்தர்செய**

**லாற்றிற் கரைத்த புளியாம்.**

எனக் கூறுகின்றனர். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், வணக்கத்தின் அந்தரங்கத்தை உணர்ந்து செயல்படாத காரணத்தாலும், கடமையாக ஆக்கப்பட்டுள்ளதே என்ற நிர்பந்தத்திற்காகவும் வேண்டா வெறுப்பாக வணங்குகிறோம். இதனால் நாம் வணங்கும் வணக்கத்தில் எவ்விதமான இன்பத்தையும் நம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அத்துடன் நம்மிடமுள்ள தீய குணங்களும் நம்மை விட்டு அகலாமல் அப்படியே இருந்து கொண்டுள்ளன. மேலும் ஒருவர் அனுமதிக்கப்பட்ட முறையிலோ அல்லது விலக்கப்பட்ட முறையிலோ ஒரு காட்சியை காண்பதற்கும், ஒரு பொருளை உண்பதற்கும், ஒரு பானத்தை அருந்துவதற்கும், சம்போகம் செய்தற்குமுரிய காரணம், அவைகளில் தான் அனுபவிக்கும் இன்பத்தை தனது உள்ளம் பிரத்தியட்சமாக உணர்ந்திருப்பதேயாகும். இதுபோன்றே வணக்கத்தின் அந்தரங்கத்தை உணர்ந்து அதில் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்கக்கூடிய நிலைக்கு உள்ளம் வந்து விடுமாயின் அதன்பின் புலன்களென்னும் உணர்வுகளால் ஏற்படும் இன்பத்தின் பக்கம் அதிகமாக பிரவேசிக்க வழியில்லாது போய்விடும். ஆதலால் இவ்வாறு அறியாமல் வணங்கப்படும் வணக்கங்களனைத்தும் மார்க்கத்தின் சட்டத்துடைய வாளை தட்டுமேயன்றி அதனால் எந்தப் பிரயோஜனமும் கிடைக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதனாலேயே....

فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ الَّذِيْنَ هُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنَ الَّذِيْنَ هُمْ يُرَاۤءُوْنَ وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ

**“மறுமையின் மிகக் கொடுமையான வேதனையானது தொழுகையை மறந்தவர்களாக தொழுவோருக்கும், மனிதர்கள் புகழ வேண்டும் என்பதற்காக தொழுவோருக்கும், ஸகாத்தை கொடுக்காது விலகிக் கொண்டோருக்குமாயிருக்கும்“** என்றும்,.

قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ هُمْ فِيْ صَلَاتِهِمْ خَاشِعُوْنَ

**"தொழுகையில் உள்ளச்சமுடையோராய் தொழுகிறார்களே அத்தகைய விசுவாசிகளே வெற்றியாளர்கள்"** என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இவ்வாறு அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

لَا صَلٰوةَ اِلَّا بِحُضُوْرِ الْقَلْبِ

**"உள்ளம் ஆஜரானாலே ஒழிய தொழுகை என்பது தொழுகை ஆகாது"** என்றும் கூறுகின்றனர்.

இனி தொழுகையில் பல்வேறு எண்ணங்கள் உள்ளத்தில் வந்து அலைமோதாமல் தடுத்துக் கொள்வதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. அதில் ஒரு வழியானது, நாம் ஒரு நீதிபதியின் முன்னால் நின்று நமது தேவைகளை அவரிடம் எடுத்துக் கூறி அவரிடமிருந்து அவற்றைப் பெற்றுகு கொள்ள நாடும்போது நமது வார்த்தைகளில் எந்தத் தவறும் நேர்ந்து விடாதவாறு எத்தனை கவனத்தோடு பேசுகிறோம். இதுபோன்றே ஒரு செல்வந்தரிடம் கடன் கேட்டுச் சென்றால் எத்தனை மரியாதையோடும், கனிவோடும் அவரிடம் கடன் கேட்கிறோம். இதில் அதிகமான கஷ்டநிலையில் நாம் இருந்தால் அவரிடம் கடன் கேட்கும்போதே நம்மையும் அறியாமல் நாம் அழுது விடுவதுமுண்டு.

இதுபோன்றே தொழுகையில் ஓதப்படும் குர்ஆனுடைய ஒவ்வொரு வாக்கியத்திலும் மனதை செலுத்தி உள்ளச்சத்தோடு ஓதிவர வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் சில சந்தர்ப்பங்களில் நமது பாவங்களை நாம் நினைத்து உள்ளம் உருகி நமது கண்களிலிருந்து கண்ணீர் வடியும் பாக்கியத்தை பெற்றுக் கொள்வதோடு உள்ளமும் இதர விஷயங்களின் பக்கமாக செல்லாமல் ஒரு நிலைப்படும். தொழுது முடித்தபின் இப்படிப்பட்ட நிலையில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் கண்டிப்பாக இறைவனால் ஏற்றுக் கொள்ளவும் படும். இதனாலேயே,...

اَنِيْنُ الْمُذْنِبِيْنَ اَحَبُّ اِلَيَّ مِنْ زَجَلِ الْمُسَبِّحِيْنَ.

**"பாவிகளுடைய அழுகையின் முனகலானது தஸ்பீஹ் செய்வோரின் ஓசையை விட எனக்கு மிகவும் பிரியமானதாகும்"** என்பதாக இறைவன் ஹதீதே குத்ஸியில் கூறுகிறான்.

இன்னொரு வழி. தக்பீர் கட்டியது முதல் ஸலாம் கொடுக்கும் வரை **"காப கௌஸைனி"** என்னும் புருவத்துடைய மத்தியப் பகுதியில் பார்த்தவாறே தொழுது முடிக்க வேண்டும். இப்படிப் பார்த்தல் துவக்கத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் தொடர்ந்து முயன்று வந்தால் சில நாட்களில் பழக்கத்திற்கு வந்துவிடும். அப்போது ஆனந்தம் உண்டாகும். இதுபோன்றே தியானம் செய்யும்போதும், ஆலோசனை செய்யும் போதும் அப்பார்வையை பழக்கப்படுத்தி வந்தால் உள்ளம் ஒருநிலைப்பட வழி ஏற்படும். தொழுகையில் ஸுஜூதுக்குரிய ஸ்தானத்தைப்

பார்க்க வேண்டும் என கூறப்பட்டிருப்பதன் கருத்து இதுதான். இதனை சிலர் புரிந்து கொள்ளாது ஸுஜூது செய்யும் முஸல்லாவையும்இ அதிலுள்ள தோற்றங்களையும் பார்த்து அதிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். மேற்கண்ட காபகௌஸைனி என்னும் ஸ்தானத்தைக் குறித்து ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துலர் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**முக மூளிக்கிடையா மூக்கு நுனிக்கட் கிடைக்கீ**

**ழாடுந் திருநடனத் தாட்டம் நிராமயமே!**

**என்றும், தக்கலை பீர் முஹம்மத் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,**

**முகத்துக் கண்ணை முறுக்கித் திருத்தியே**

**யகத்துக் கண்ணை யறுத்துப் பிளந்தபின்**

**வகுத்த ஜோதி மணிவிளக் குன்னுள்ளே**

**தொகுத்துப் பார்க்க சுகம்பெற்றாய் நெஞ்சமே!**

என்றும் கூறுகின்றனர். மேலும் இந்த ஸ்தானத்தை குறித்து "**பார்வையின் பரம ரகசியம்**" என்னும் தலைப்பில் கூறப்பட்டிருக்கும் விஷயத்தை அங்கே பார்த்துக் கொள்க. இனி அந்தரங்கத்தை உணராது வெளித்தோற்றத்தில் மட்டும் முஸ்லிமாக இருப்போரை குறித்து காமில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,...

اَلَيْسَ الْمُؤْمِنُوْنَ يَجْتَمِعُوْنَ فِى الْمَسْجِدِ وَيَقُوْلُوْنَ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَيُصَلُّوْنَ وَيَصُوْمُوْنَ وَمَا فِيْهِمْ مُسْلِمُوْنَ

"(வெளித்தோற்றத்தில்) **விசுவாசிகள் பள்ளிவாசல்களில் ஒன்றுதிரள்வோராகவும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுவோராகவும் தொழுவோராகவும் நோன்பு நோற்போராகவும் இருக்கவில்லையா? அவர்களில் (உண்மையான) முஸ்லிம்கள் இல்லாதிருக்கும் நிலையில்**" எனக் கூறுகின்றனர். இவ்வாறே குத்புல் அக்தாப் ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,...

رَاَيْتُ رَبِّيْ فَسَأَلْتَهُ يَارَبِّ اَيُّ صَلٰوةٍ اَقْرَبُ اِلَيْكَ قَالَ الْحَقُّ سُبْحَانَهُ وَتَعَالٰى اَلصَّلٰوةُ الَّذِيْ لَيْسَ فِيْهَا سِوَائِيْ مِنَ الْجَنَّةِ اَوِالنَّارِ

وَالْمُصَلِّيْ غَائِبٌ عَنْهَا

**"நான் இறைவனை கண்டு அவனிடம், இறைவா! உன்னை மிகவும் சமீபிக்கச் செய்யும் நிறைவான தொழுகை எது? என்று கேட்க, அதற்கு இறைவன், தொழுபவர் அத்தொழுகையை விட்டும் தன்னை மறந்தவராக நான் இல்லாத சுவர்க்கம் நரகம் என்பவை எந்தத் தொழுகையில் இல்லையோ அந்தத் தொழுகையாகும் என்று கூறினான்"**

மேலும் ஆரிபீன்கள் என்னும் ஞானவான்கள்,....

اَلصَّلٰوةُ نِسْيَانُ مَا سِوَى اللهِ وَالْمُصَلِّ غَائِبٌ عَنْهَا

**தொழுகை என்பது தொழுபவர் அதை விட்டும் மறந்தவராக இருக்கும் நிலையில் அல்லாஹ் அல்லாததை மறந்து போவதாயிருக்கும்**“ என்றும்,....

مَنْ صَلّٰى صَلٰوةً طَوِيْلَةً فِى الْمَسْجِدِ بِالْعَمَامَةِ وَالْقَمِيْصِ فِيْ مُنَاظِرَةِ الْخَلَائِقِ وَمَا كَانَ فِيْ قَلْبِهٖ مِنْ نَارِ الْمَحَبَّةِ اِلَى الْمَحْبُوْبِ فَهُوَ مَحْجُوْبٌ مِّنَ الصَّلٰوةِ

**“ஒருவர் அவரது மஹ்பூப் என்னும் ஹக்களவில் வைக்கின்ற முஹப்பத் என்னும் நெருப்பு அவரது உள்ளத்தை கவ்விப் பிடிக்காத நிலையில் மனிதர்களின் பார்வையில்** (மட்டும்) **சட்டை தலைப்பாகை அணிந்தவராக நீளமாய் தொழுவாராயின் அந்தரங்கத்தில் அவர் தொழுகையை விட்டும் திரையிடப்பட்டவராகவே இருப்பார்**“

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும் இதை குறித்து ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

عَبَدْنَا الْهَوٰى اَيَّامَ جَهْلٍ وَّاِنَّنَا    لَفِيْ غَمْرَةٍ مِنْ سُكْرِنَا فِيْ شَرَابِهٖ

وَعِشْنَا زَمَانًا نَعْبُدُ الْحَقَّ لِلْهَوٰى    مِنَ الْجَنَّةِ الْعُلْيَا وَحُسْنِ ثَوَابِهٖ

فَلَمَّا تَجَلّٰى نُوْرُهٗ فِيْ قُلُوْبِنَا    عَبَدْنَا رَجَاءً لِّلِّقَا وَخِطَابِهٖ

**“மனோ இச்சை என்னும் பானத்தை அருந்தியதால் நிச்சயமாக நாம் போதையில் மூழ்கி இருந்ததால் அறிவில்லாத காலத்தில் அவ்விச்சையை வணங்கக் கூடியவர்களாக இருந்தோம். இதுபோன்றே சிலகாலம் வரை சுவர்க்கத்திற்காகவும், இறைவனால் தரப்படும் கூலிக்காகவும் அவனை வணங்குவோராக இருந்தோம். பின்னர் இறைவனின் ஜோதி நமது உள்ளத்தில் உதயமானபோது அவனுடைய தரிசனையை மட்டும் ஆதரவு வைத்தவர்களாக வணங்கினோம்**“ என்றும் கூறுகின்றனர்.

எனவே இனியாவது வணக்கத்தின் அந்தரங்கத்தை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இம்மனிதப் பிறவியை எடுக்க நமது தாயின் வயிற்றில் நாம் சுமார் 280 நாட்கள் வரை கல்வத்திலிருக்க வேண்டியிருந்தது. அவ்வாறு இருந்திருக்காவிட்டால் நம்மால் இம்மனிதப் பிறவியை எடுத்திருக்க முடியாது போயிருக்கும். இவ்வாறே இம்மனிதப் பிறவி முக்தியடைவதற்கும் இறக்குமுன் வணக்கத்தின் அந்தரங்கத்தை உணர்ந்து செயலாற்றி

ஒரு காமிலான ஷெய்கிடத்தில் பைஅத்துப் பெற்று கல்வத்திலாகிக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். சர்வலோக இரட்சகராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிரா என்னும் மலைக்குப்போய் வணங்கி வந்தார்களெனக் கூறப்பட்டிருப்பதும் இந்த கல்வத்தை குறித்துதான் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனி இறைவனுக்குரிய தகுதியான குணங்கள் இருபதையும் அவனுக்கு ஒவ்வாத குணங்கள் இருபதையும் நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும். அவையாவன,...

| **தகுதியான குணங்கள்** | **ஒவ்வாத குணங்கள்** |
|---|---|
| உள்ளமை | இல்லாமை |
| பூர்வீகம் | புதிது |
| தரிபாடு | அழிவு |
| புதிதுக்கு | மாற்றம் ஒப்பு |
| தானாக நிலைத்திருத்தல் | தேவையானது |
| ஒருவன் என்பது | இணை |
| ஜீவியம் | மரணம் |
| அறிவு | மடமை |
| நாட்டம் | நாட்டமின்மை |
| தத்துவம் | இயலாமை |
| கேள்வி | செவிடு |
| பார்வை | குருடு |
| பேச்சு | ஊமை |
| ஜீவனுள்ளவன் | மரணித்தவன் |
| அறிவுள்ளவன் | மடையன் |
| நாட்டமுள்ளவன் | நாட்டமில்லாதவன் |
| தத்துவமுள்ளவன் | இயலாதவன் |
| செவியுறுபவன் | செவிடன் |

www.sufimanzil.org

பார்ப்பவன் குருடன்

பேசுபவன் ஊமையன்

என்பவைகளாகும். இதில் கவனிக்க வேண்டியவிசயம் யாதெனில், இறைவனுக்கு ஒவ்வாத குணங்கள் எனக் கூறப்பட்டிருப்பது, அவனது தாத்தென்னும் தன்மயத்திற்குரிய தரப்பிலேயே அன்றி குணங்களின் தரப்பிலல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்தை பார்க்கும்போது "**மெய்ப்பொருள்**" என்ற தன்மையும், "**படைப்பு**" என்ற தன்மையும் **"தாத்து முத்லக்"** காகிய வெட்டவெளிக்கே உரியதாக இருப்பதால் என்க.

**இஸ்லாமியர்களில் சிலர் சமூகத்திற்கு இழிவைத் தேடுகின்றனர்**

நமக்கு மத்தியில் கலிமா சொல்லி ,நோன்பு நோற்று, ஸகாத்தை கொடுத்து, ஹஜ்ஜையும் நிறைவேற்றி இஸ்லாமிய மார்க்கச் சட்டப்படி செயல்பட்டு வருவதாகக் கூறிக் கொள்வோரில் சிலர், பொய் பேசுவதையும், புறம்பேசுவதையும், அனாதைகளின் பொருட்களை அடித்துத் திண்பதையும், வட்டி வாங்குவதையும், வாக்கு மாறுவதையும், நம்பிக்கை துரோகம் செய்வதையும், பாரபட்சமாக தீர்ப்பளிப்பதையும், அன்னியப்பெண்களை தவறான எண்ணம் கொண்டு பார்ப்பதையும், மற்றவர்களை கேவலப்படுத்தி பேசுவதை விட்டும் நீங்கியதாகத் தெரியவில்லை. இதுபோன்றே இன்னும் சிலர் சாராயம்இ கஞ்சா, அபின் போன்ற லாகிரி வஸ்துக்களை ரகசியமாகவும், பகிரங்கமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். அதேநேரம் மார்க்கச் சட்டத்தில் இவைகளெல்லாம் தடை செய்யப்பட்ட ஒன்றுதான் என்பதையும் இவர்கள் தெரிந்தும் வைத்துள்ளனர். இதேபோல பன்றியின் இறைச்சியும் மார்க்கச்சட்டத்தில் தடைசெய்யப்பட்ட ஒன்றுதான் என்பதையும் இவர்கள் தெரிந்துதானே வைத்துள்ளனர்.

ஆனால் இந்த விசயத்தில் மட்டும் இவர்கள் மார்க்கத்துடைய சட்டங்களை முறையாகக் கடைபிடிப்பவர்களை போல தங்களின் நாவால் பன்றி எனக் கூறுவதற்குக் கூட வெட்கப்பட்டுக் கொண்டு நாலுகால் என்றும், மேற்படியான் என்றும் கூறுகின்றனர். இத்தகைய பேணுதலுக்குக் காரணம் உண்மையில் மார்க்கச்சட்டமாகவே இருக்குமாயின் கள், சாராயம் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதிலும் மார்க்கச்சட்டத்தைக் கடைபிடித்திருப்பார்கள். விசயம் அவ்வாறு இல்லையாதலால் பன்றியின் இறைச்சியை இவர்கள் உண்ணாது விட்டு வைத்திருப்பதற்கு காரணம் அது துர்நாற்றத்தை அம்சமாகக் கொண்ட மலத்தை தின்பதுதானேயன்றி வேறல்ல என்றுதான் கூற வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட செயல்பாடுகளின் காரணமாக இவர்கள் தம்மை நாசமாக்கிக் கொண்டதோடு மாற்று சமூகத்தார் மத்தியில் இஸ்லாமிய மார்க்கத்தை குறித்து இழிவாகப் பேசுவதற்கும் இது வழி வகுத்துவிட்டது. லாகிரி வஸ்துக்களை பயன்படுத்தக் கூடாது என்றும், பன்றியின் இறைச்சியை உண்ணக் கூடாது என்றும் மார்க்கம் தடைசெய்திருப்பதற்குக் காரணம், லாகிரி வஸ்துக்கள் மனிதனுடைய புத்தியை கெடுத்து தடுமாற்றத்திற்கு உள்ளாக்கி அவனை பல்வேறு தீமையான காரியங்களின் பக்கமாக ஈடுபடுத்தி முடிவில் அவனை ஒன்றுமில்லாமலாக்கி

விடும். இதுபோன்றே பன்றியில் இருவகை தீய குணங்கள் உள்ளன. அதிலொன்று: ஒரு ஆண்பன்றி பெண் பன்றியோடு உறவு கொள்ளும்போது மற்ற பன்றிகளெல்லாம் அதை சுற்றி நின்று வேடிக்கை பார்த்து ரசிக்கும். மற்றொன்று: பன்றி கஞ்சத்தனத்தில் மிகக் கடுமையான நிலையினைக் கொண்ட ஓர் பிராணியாகும். அதாவது, அதனுடைய தாய்ப்பால் மருந்துக்காகவோ அல்லது வேறு தேவைக்காகவோ அவசியப்பட்டால் அதை அதனுடைய மார்பிலிருந்து கறந்து எடுக்கவே முடியாது. மாறாக அதனுடைய குட்டியை தாயிடம் பால் குடிக்க வைத்து அதன்பின் அக்குட்டியை பிடித்து அறுத்து அதனுடைய இறைப்பையிலிருந்துதான் பாலை எடுக்க வேண்டும். இந்நிலையில் மனிதன் அதனுடைய இறைச்சியை சாப்பிட்டால் அவனுக்குள் அத்தீய குணங்கள் ஏற்பட்டு விடும். அதனால்தான் லாகிரி வஸ்துக்களும் பன்றி இறைச்சியும் இஸ்லாமிய சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் இதுகுறித்து இன்னும் கொஞ்சம் ஆழமாக நாம் சிந்திப்போமாயின் ஒரு விசயம் நமக்கு புலனாகிறது. அதாவது, நமது முன்னோர்களான தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு தங்களின் தாய்ப்பாலையே கொடுத்து வந்தனர். ஆனால் இன்றுள்ள தாய்மார்களோ தங்களின் குழந்தைகளுக்கு மிருகங்களின் பாலை கொடுத்து வருவதால் அக்குழந்தைகளுக்குள் மிருகக் குணம் மிகைத்து அதை செயல்வடிவத்திலும் அவைகள் இப்போது காட்டி வருகின்றன. இவ்வாறு இவர்கள் செய்வதற்குக் காரணம், தங்களின் தேகம் கட்டுவிட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காகவே எனத் தெரியவருகிறது. தாங்கள் அருமையாய் வளர்த்தத தமது குழந்தைகளில் மிருகக்குணம் மிகைத்து அக்குழந்தைகள் தேகம் மட்டும் கட்டுவிடாமல் இருக்க வேண்டுமென இவர்கள் யோசிக்கின்றனர். என்னவொரு விபரீதம் பாருங்கள்!

முன்பெல்லாம் குழந்தைகள் தமது பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடப்போராக இருந்தனர். ஆனால் இப்போதுள்ள குழந்தைகளுக்கு பெற்றோர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நமது தாய்மார்கள் மேற்காணும் காரணங்களையெல்லாம் சிந்தித்துப் பார்த்து இனியாவது தமது முன்னோர்களுடைய நடைமுறையைப் பின்பற்றி தமது குழந்தைகளுக்குள் மிருக்கங்குணங்கள் வந்து நுழைந்து விடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் ஒரு அறிஞர், **“மனிதன் மிருகங்களை போல ஆகாயத்தில் பறப்பதற்கும், மீன்களைப் போல நீரில் நீந்துவதற்கும் கற்றுக் கொண்டான். ஆனால் மனிதனாக மனிதப் பண்போடு நடப்பதற்கு மட்டும் கற்றுக் கொள்ளவில்லை“** என்று கூறினார்.

மேலும் மார்க்கபக்தியும் பேணுதலுமுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தமது செயல்பாடுகளை திருத்தி அமைத்துக் கொள்வதோடு மற்ற சகோதரர்களும் தீய காரியங்களை விட்டும் நீங்கி நேர்வழியில் நடப்பதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு இஸ்லாமிய மார்க்கத்தின் கௌரவத்தை காப்பாற்ற வேண்டியது அவசியமாகும். இவ்விஷயத்தில் முழுப்பொறுப்பும் மார்க்கச் சட்டங்களை போதிக்கும் உலமாக்களையும் சமுதாயத் தலைவர்களையுமே சாரும்.

காரணம் இவர்கள்தான் ஜனங்களுக்கு இஸ்லாமிய மார்க்கத்தின் ஏவல் விலக்கல்களை எடுத்துக் கூறவும், அதற்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்யவும் சக்தி படைத்தவர்களாக இருக்கின்றனர். ஆதலால் இப்படிப்பட்டட வழிகேட்டில் இருப்போரை சாத்வீகமான முறையில் திருத்த முயல வேண்டும். அதற்கு அவர்கள் கட்டுப்படாவிட்டால் அவர்களை எவ்வித நன்மை தீமைக்குரிய விசேஷங்களிலும் கலந்து கொள்ளாவண்ணம் பகிஷ்கரிக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் நேர்வழிக்கு வருவதற்குரிய சூழ்நிலையை அது ஏற்படுத்தும் என்பதோடு அடுத்து வரும் சந்ததிகளிலும் இக்கொடிய செயல்பரவாமல் இருப்பதற்குரிய தடையையும் அது ஏற்படுத்தும்.

**உலமாக்கள் - முஸ்லிம் தலைவர்களின் கடமைகள்**

உலமாக்களில் பெரும்பாலோர் ஜனங்களுக்கு நல்லுபதேசம் செய்து கொண்டுதானிருக்கின்றனர். இருப்பினும் அவர்களில் சிலர் நல்லுபதேசம் செய்த மறுநாளே பணம் வசூலிப்பதற்கென்று வந்து விடுவதால் இக்காரியம் உலமாக்களின் தகுதியை குறைத்து விடுவதோடு சில செல்வந்தர்கள் இவ்வாறு நல்லுபதேசம் செய்யப்படும் கூட்டங்களுக்கு செல்லாது இருப்பதற்கும் காரணமாக அமைந்து விடுகிறது. ஆனால் அவ்வாறு உபதேசம் செய்யக்கூடிய உலமாக்களில் சிலர் தமது மனைவி மக்களை பொன்காய்த்த மரம்போல ஜோடிப்பதற்காகவே அன்றி உண்மையில் ஜீவனாம்சத்திற்கு வழியின்றி கஷ்டப்படுவோருக்கு செல்வந்தர்கள் ரகசியமாக பொருளுதவி ஏதேனும் செய்து வருவார்களாயின் இப்படிப்பட்ட தகுதிக்குறைவு ஏற்படாது. மேலும் இது ஜனங்கள் அறிவை தேடி நேர்வழியில் நடக்கவும் உதவியாக இருக்கும்.

**முகஸ்துதி**

முகஸ்துதி என்பது தனதுத நண்பர்களில் ஒருவரை பார்த்து விட்டால் போதும். உடனே, உங்களை பார்க்க வேண்டுமென்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக தாங்களே வந்து விட்டீர்களென்று ஒப்புக்குச் சொல்வது போன்ற வார்த்தைகளுக்கு முகஸ்துதி எனக் கூறப்படுகிறது.

இதனுடைய கருத்தை நாம் சற்று ஆழமாகக் கவனிப்போமாயின் இது நயவஞ்சகத்தன்மை என்றுதான் கூற வேண்டியுள்ளது. ஏனெனில் நாம் ஒருவரை சந்தித்தல் என்பது, அவருடைய தேகத்தை பார்ப்பதாகவே இருப்பதால் அடுத்தவரின் தேகத்தை பார்க்க ஆசைப்படும் நாம் நமது தேகத்தை பார்க்க அதைவிட பலமடங்கு ஆசைப்படுவதுதான் பொருத்தமாகும். அப்படி இருந்தும் நமதுதோற்றம் இன்னதென்பதை நாம் அறியாமலும், அதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் இல்லாதிருந்து வருகிறோம். இனி எப்போதாவது நமது தோற்றத்தை கண்ணாடியில் பார்த்தாலும் அப்போதாவது நாம் நம்மீது ஆசைப்பட்டு நமது சுயத்தோற்றம் என்னவென்பதை பார்க்கும் ஆசைகூட நமக்கு இல்லாதிருப்பதால், இந்நிலையில் நாம் அடுத்தவரின் தோற்றத்தை பார்க்க ஆசை கொண்டிருப்பதாகக் கூறுவது அவரிடமிருந்து ஏதாவதொரு

பிரயோஜனத்தை எதிர்பார்க்கும் முகஸ்துதியே அன்றி வேறல்லவாதலால் இதை நயவஞ்சகத்தன்மை என்றுதான் கூற வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட குணங்களை விட்டும் நீங்கி தனித்த ஓரிடத்தில் அமர்ந்து நமது அசல் தோற்றத்தை நமது நினைவைக் கொண்டு உருவாக்கி அதை பார்த்து வருவதை பழக்கப்படுத்தி வருவோமாயின்இ அதனால் கணக்கில்லாத பிரயோஜனங்களை எல்லாம் நாம் பெற்றுக் கொள்ளலாம். இதனுடைய ரகசியம் இன்னதென்பதை இங்கே விளக்குதல் இதைப் பற்றிய அறிவில்லாதோருக்கு திகைப்பை ஏற்படுத்துமாதலால் இதை விளக்காது மறைக்க வேண்டியுள்ளது. மேலும் இதன் ரகசியத்தை அவரவர் தமது ஷைகுமார்களிடம் கேட்டுக் கொள்வதே நலம். ஏனெனில்...

وَافْشَاءُ سِرِّ الرُّبُوْبِيَّةِ كُفْرٌ

**“தெய்வத்துவத்தின் ரகசியத்தை பகிரங்கப்படுத்துதல் குப்ராகும்.“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

**பொய்யும் புறமும்**

நம்மிலே பெரும்பாலோரிடம் பொய்பேசும் தீயபழக்கம் என்பது தங்குதடையின்றி சரளமாக நடைபெற்று வருவதை நாம் பார்க்கலாம். அப்படிப் பேசுவோரை அவரைப்போன்றே பொய் பேசுபவர்இ அவரை சாமார்த்தியசாலி என்றும் கெட்டிக்காரர் என்றும் புகழ்வதையும் நாம் பார்க்கலாம். இவ்வாறான வழிகேட்டுக்குக் காரணம், இஸ்லாமிய மார்க்கத்தின் அந்தரங்கக் கருத்தை இவர்கள் உணர்ந்து கொள்ளாதிருப்பதே எனில் மிகையாகாது.

ஏனெனில் அவ்வாறு உணர்ந்திருந்தால் தான் யாரிடம் பொய் பேசுகிறோமோ அவருடைய வெளிரங்கம் அதை தெரிந்து கொள்ளாவிட்டாலும், பொய்பேசுகிற அப்பொய்யை கேட்கிற இருவரின் தேகத்தையும் எந்தப் பொருள் கருவியாக வைத்து செயல்பட்டுக் கொண்டுள்ளதோ அந்த **“நூரே முஹம்மதீ“** எனும் மெய்ப்பொருள் அதை தெரிந்து தானிருக்கிறது என்னும் பேருண்மையை அவர் உணர்ந்து கொண்டிருப்பார்.

மேலும் பொய்தான் பெரும்பாலான பாவங்களுக்கே வித்தாக இருக்கிறது. அதனால் நேரிடும் ஆபத்துக்களுக்கு ஒரு அளவேயில்லை. ஒருவர் குறைந்தபட்சம் நாற்பது நாட்களுக்காவது எக்காரணத்தை கொண்டும் பொய்பேசாது இருப்பாராயின் அவர் தமக்குள் சில அற்புதமாக சக்திகள் தோன்றுவதை அறிந்து கொள்வார். இதையே அவர் தொடர்ந்து கடைபிடித்து வருவாராயின் அவருடைய காரியங்களனைத்தும் வெற்றிகுரியதாகவே மாறிவிடும். இன்னும் இதன்காரணமாக அவரது நாவுக்கு ஒரு சக்தியும் உண்டாகிவிடும். இத்தகைய நிலையினை அவர் பெறும்போது அந்நாவிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளனைத்தும் பலிக்கும் தகுதியையும் பெற்றுவிடும். இதனாலேயே,....

اَلْكِذْبُ يَأْكُلُ الْإِيْمَانُ كَمَا تَأْكُلُ النَّارُ الْحَطَبُ

**"நெருப்பு விறகை தின்பது போன்று பொய் இறை நம்பிக்கையை தின்று விடும்"** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவில்கின்றனர்.

அடுத்து **"புறம் பேசுதல்"** என்பது, தமது நண்பர்களிடம் பேசும்போது, யாரையாவது குறை சொல்வதாகும். அத்துடன் காலத்தையும் குறை சொல்வதோடு அதை நிந்திக்கவும் செய்கிறோம். இதன் காரணமாக நமக்கு நாமே நாசத்தை வரவழைத்துக் கொள்ளவும் செய்கிறோம் என்பதை நாம் விளங்கிக் கொண்டாலன்றி இத்தீய பழக்கங்களை விட்டும் நம்மால் நீங்கவே முடியாது.

மேலும் நாம் மற்றவரை பற்றி குறை சொல்லுமுன் அக்குறை நம்மிடம் இருக்கிறதா என்பதை நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் அநேகமாக இருப்பதாகவே தோன்றும். பின்னும் ஜனங்களிடம் பேசும்போது நமது சாமார்த்தியங்களையும் அதற்காக எப்போதோ நமக்கு பூமாலை சூட்டிய கதைகளையும் நாம் பேசுவதுண்டு. அதேநேரம் மற்றவர்களுக்கு நாம் செய்த தீமைகளை குறித்தோ, பல இடங்களில் அவமானப்பட்ட கதைகளையோ சொல்லாமல் மறைத்துக் கொள்கிறோம்.

இதுபோன்றே யாராவது நம்முடைய நாற்றங்களில் ஒன்றை சொல்லிவிட்டால் போதும். உடனே ஆத்திரமடைந்து அவரிடம் சண்டைபோடத் துவங்கி விடுகிறோம். இத்தனை ரோஷமுள்ள நாம் மற்றவர்களின் குறைகளை பேசக் கூடாதென ஏன் தெரிந்து கொள்ளவில்லை. வெளியில் போகிற சனியனை ஏணி வைத்து வீட்டுக்குள் அழைத்த கதையாக மற்றவர்களை பற்றி புறம்பேசி நமது பாவமூட்டையை நாமே பளுவுள்ளதாக ஆக்கிக் கொள்கிறோம்.

அதேநேரம் தொலைநோக்குச் சிந்தனை கொண்ட ஆராய்ச்சியாளர்களும், ஞானவான்களும் மனிதனுடைய ஒவ்வொரு வார்த்தையும் ஒரு உருவத்தை எடுப்பதாகக் கூறுகின்றனர். இதற்கு கிராமபோன் மற்றும் டேப் ரெக்கார்டுகளே போதிய ஆதாரமாகுமென்று சொல்லலாம். அவர்கள் கூறுவதைப் போன்று ஒவ்வொரு வார்த்தையும் ஒரு உருவத்தை எடுக்கக் கூடியவகையில் அமைந்துள்ளதால் தான் மனித வார்த்தைகளை கிராமபோன் மற்றும் டேப்ரிகார்டுகளில் பதிவு செய்து அதன்பின் அதை நாம் திரும்பத் திரும்ப கேட்கவும் முடிகிறது.

இவ்வாறே டெலிபோனை எடுத்துக் கொண்டால், ஒரு குழாயை நமது வாய்க்கு அருகிலும், மற்றொரு குழாயை காதிலும் வைத்துக் கொண்டு பேசவும் கேட்கவும் செய்கிறோம். அந்த சப்தம் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருப்போரின் காதில் சென்றும் விழுகிறது. இதற்கிடையே இவ்விருவரையும் இணைப்பது ஒரு சிறு கம்பியே அன்றி வேறு எதுவுமேயில்லை. இவ்வாறே ரேடியோவை எடுத்துக் கொண்டால் பல ஆயிரம் மைல்களுக்கப்பால் பேசப்படும் விஷயங்களை அந்தக் கம்பியின் தொடர்பு கூட இல்லாமல் கேட்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இதைக் கொண்டும் மனித நாவிலிருந்தும்

வெளிப்படும் சப்தங்கள் ஒரு உருவத்தை எடுக்கக் கூடியவை தான் என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே மனிதனுடைய ஒவ்வொரு பேச்சும், பார்வையும், கேள்வியும், செயலும், இத்தனை ஏன்! நினைப்புக் கூட ஒரு உருவத்தை எடுக்கிறதென்றும், அதன்பின் மனிதன் மரணமடைந்தால் அந்த உருவங்களெல்லாம் அவன்மீது உரைகளாக மாட்டப்பட்டு அவை அவைகளுக்குரிய பலாபலன்களை அனுபவித்து ஒவ்வொரு உரையையும் பாம்பு தனது சட்டையை கழற்றுவது போல அவன் கழற்றியாக வேண்டுமென்றும் ஞானவான்களில் சிலர் கூறுவது கூட உண்மைதான்.

மேலும் ஒருவனுடைய குறையை பற்றி அவனுக்கு முன்னால் ஒருவன் பேசாதிருப்பதற்குக் காரணம், அவன் தன்னை அடிப்பானென்ற அச்சமேயன்றி வேறல்ல என்றுதான் சொல்ல வேண்டும். அதேநேரம் ஒருவனை நாம் நமது உள்ளத்தால் திட்டுவோமாயின் அவன் அதை தெரிந்து கொள்ள முடியாதாகையால் அதற்காக நாம் தண்டிக்கப்பட மாட்டோமென எண்ணிக் கொண்டிருக்கிறோம். இது மிகப்பெரும் தவறாகும் என்பதற்கு இந்த அத்தியாயத்தின் முதல் பக்கத்தில் கூறப்பட்டுள்ள விளக்கமே போதிய ஆதாரமாகும்.

மேலும் நாம் நம்முடைய ஒவ்வொரு செயலையும் திருத்தியமைத்துக் கொள்ள வேண்டுமென இஸ்லாத்தில் கட்டளையிடப்பட்டிருப்பதற்குக் காரணம், உள்ளம் தூய்மையடைய வேண்டும் என்பதற்காகவே அன்றி வேறல்லவாதலால் ஒருவனை வெளிப்படையாக குறைபேசுவதை மட்டும் விட்டுவிட்டால் போதாது. மாறாக எல்லா நிலைகளிலும் இதனை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எனவே உள்ளத்தால் ஒருவனை நிந்திப்பதையும் அவனைப் பற்றி தவறாக எண்ணுவதையும் நாம் விட்டுவிடவேண்டும். காரணம் உள்ளம் தூய்மையாக இருந்தால்தான் அதில் இறைவனுடைய தோற்றம் வெளியாகி அதனை தரிசிக்க முடியும்.

ஆதலால் தமது இறப்புக்கு முன் யார் இத்தரிசனையை பெற்றுக் கொள்கிறாரோ அவரே வெற்றியடைந்த பாக்கியசாலியாவார். இதனாலேயே,...

وَلَا يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا

**“உங்களில் சிலர் சிலரைக் குறித்து புறம் பேச வேண்டாம்“** என இறைவன் தனதுவேதத்தில் கூறுகிறான். அடுத்து,...

اَلْغِيْبَةُ اَشَدُّ مِنَ الزِّنَا

**“புறம் பேசுதல் விபச்சாரத்தை விடக் கொடியது“** என்றும்

لَا تَسُبُّوا الدَّهْرَ فَاِنَّ الدَّهْرَ هُوَ اللّٰه

**"காலத்தை நீங்கள் ஏசாதீர்கள். திடனாக காலமாகிறது மெய் பொருளாகும்."** (அதாவது காலத்தைக் கொண்டு வெளிப்படுபவை அனைத்தும் அவனது தோற்றமாகவே இருக்கிறது) என்றும்.......

اَلْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُوْنَ مِنْ لِسَانِهٖ وَيَدِهٖ وَالْمُؤْمِنُ مَنْ اَمِنَهُ النَّاسَ

**"முஸ்லிம் எனப்படுபவர் யாரெனில், யாருடைய நாவையும், கையையும் விட்டு ஜனங்கள் ஈடேற்றமாகி விட்டார்களோ அவராகும். இதுபோன்றே முஃமின் எனப்படுபவர் யாரெனில், யாரை விட்டும் ஜனங்கள் அச்சமற்று விட்டார்களோ அவராகும்"** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

ஆதலால் மேற்கண்ட ஆதாரங்களை கொண்டு புறம் பேசுதல் என்பது எத்தனை மாபாதகச் செயல் என்பதையும், இவ்வாறே காலத்தை ஏசினால் அது எந்த மெய்ப்பொருளில் போய் சேருகிறது என்பதையும் ஒரு முஸ்லிம் தனது மார்க்கத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், தங்களின் உள்ளம் தூய்மையடைய வேண்டுமென விரும்புவோர் இதைக் கொண்டு கண்டிப்பாகத் தெரிந்து கொள்வார்.

**மேல்ஜாதியும் கீழ்ஜாதியும்**

மனித வர்க்கமனைத்தும் ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் மற்றும் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததிகளாக இருக்க அவர்களில் மேல்ஜாதி என்றும் கீழ்ஜாதி என்றும் பிரிந்ததற்குக் காரணமென்ன? என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை வெள்ளை அல்லது சிகப்பு நிறத்தோலுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள் மேல்ஜாதி என்றும், கருப்பு நிறத்தோலுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள் கீழ்ஜாதி என்றும் பிரிந்தார்களோ என நாம் யோசித்துப் பார்த்தால் விஷயம் அவ்வாறல்ல என்றே தெரிய வருகிறது.

ஏனெனில் சிகப்பு நிறத்தோலுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து கருப்பு நிறமுள்ள குழந்தைகள் பிறப்பதும், கருப்பு நிறத்தோலுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து சிவப்பு நிறமுள்ள குழந்தைகள் பிறப்பதும் சாதாரணமாகக் காணப்படுவதால் மேல் ஜாதிக்கும், கீழ்ஜாதிக்கும் இது காரணமல்ல என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். ஒருவேளை செல்வம் இதற்குக் காரணமாக இருக்குமோ என்று யோசித்தால் இதுவும் சரியல்ல என்றே தோன்றுகிறது. ஏனெனில் சிலர் சிலகாலம் வரை செல்வந்தராக இருப்பதும், சில காலத்திற்குப் பின் அவர் ஏழையாகிப் போவதும் சகஜமாக இருப்பதால் செல்வம் வந்தபோது மேல்ஜாதி என்றும், அது போனபின் கீழ்ஜாதி என்றும் கூறுவது பொருத்தமற்ற ஒன்றாகும்.

ஒருவேளை செய்யும் தொழிலைக் கொண்டு இவ்வாறு ஏற்பட்டிருக்குமா? என்று யோசித்தால் இதுவும் சரியல்ல என்றே தோன்றுகிறது. ஏனெனில் சிலகாலம் வரை துணிவியாபாரம் செய்து வந்த ஒருவர், பின்னர் ஏழையாகி கருவாடு விற்கலாம். ஒருவேளை தெற்கத்தியர்

வடக்கத்தியர் என சில பகுதியிலுள்ளோர் சில பகுதியை சேர்ந்தோரை கூறுவதுதான் இதற்குக் காரணமாக இருக்குமோ எனில் இதுவும் தவறென்றே தெரிகிறது. ஏனெனில் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு எனக் கூறப்படும் இந்நான்கு திசைகளும் கண்டித்தலாகிய இப்பூமியின் குறிப்புக்காக சொல்லப்படும் வாக்கியங்களாகும்.

மேலும் சிலர்சிலரைக் குறித்து சொல்லிக் கொள்ளும் திசைகளின் குறிப்பில், தெற்கும், வடக்கும், கிழக்கும், மேற்கும் எந்த இடத்திற்கு தெற்கென்றும், வடக்கென்றும், கிழக்கென்றும், மேற்கென்றும் கூறப்படுகிறது என்பது நமக்குப் புலப்படவில்லை. ஒருக்கால் நாம் பிறந்த ஊருக்கு தெற்கேயுள்ள ஊரை சேர்ந்தவரை தெற்கத்தியர் என்றும், வடக்கேயுள்ள ஊரை சேர்ந்தவரை வடக்கத்தியர் என்றும் சொல்லக் கூடிய வாக்கியமாக இருக்குமோ எனில் இதுவும் தவறென்றே முடியும்.

ஏனெனில் நமது ஊருக்கு தெற்கேயுள்ள ஊரை சேர்ந்தவரை நாம் தெற்கத்தியர் என்று சொன்னால், அவருடைய ஊருக்கு தெற்கேயுள்ள ஊரை சேர்ந்தவரை அவர் வடக்கத்தியர் என்றுதான் அழைப்பார். இதன் காரணமாக ஒரு பகுதியில் உள்ளவர் இன்னொரு பகுதியில் உள்ளவரை மேல்ஜாதி என்றோ கீழ்ஜாதி என்றோ சொல்ல வழியில்லையாதலால் தெற்கத்தியர் என்றும், வடக்கத்தியர் என்றும் ஒருவரை ஒருவர் இழிவாக மதித்துக் கூறும் இந்த வாக்கியம் வெறும் வெற்று வார்த்தையென்றே தெரிய வருகிறது.

அவ்வாறாயின் மனிதர்கள் மேல்ஜாதி என்றும், கீழ்ஜாதி என்றும் பிரிந்ததற்கு காரணம் என்னதான் என நாம் யோசித்துப் பார்ப்போமாயின் இவ்வாறு பிரிந்ததற்குக் காரணம் ஷரீஅத்துதான் என நமக்குத் தெரியவருகிறது. அதெப்படி என்றால்இ தவறான உறவின் மூலம் பிறந்த ஒருவன் கீழ்ஜாதி என்றழைக்கப்படுகிறான். இதனாலேயே அவனையும் அவனுடைய சந்ததிகளையும் கீழ்ஜாதி எனக்கூறி ஒதுக்கப்படுகிறது. இவ்வாறு கூறியதற்கு காரணம் அவன் மார்க்கச் சட்டத்திற்கு மாற்றமாக நடந்து கொண்டதேயன்றி வேறல்லவாதலால் உண்மையான கருத்தை நோக்கும்போது எவன் மார்க்கச்சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கிறானோ அவனே மேல்ஜாதிக்காரன் என்றும், எவன் மார்க்கச் சட்டத்திற்கு மாற்றமாக நடக்கிறானோ அவன்தான் கீழ்ஜாதிக்காரன் என்றும் தெரிய வருகிறது. இதனாலேயே இறைவன்....

إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللهِ أَتْقَاكُمْ

**“திடனாக இறைவனிடம் உங்களில் அதிகமான சிறப்புக்குரியவர் இறைவனை மிகவும் அஞ்சி நடக்கும் பயபக்தியாளர்களே!“** என்றும், அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்........

أَنَا جَدُّ كُلِّ تَقِيٍّ وَلَوْ كَانَ عَبْدًا حَبَشِيًّا

**"நான் பயபக்தியாளர் அனைவருக்கும் பாட்டனாக இருக்கிறேன். அவர் ஹபஷி(நீக்ரோக்)களிலுள்ள அடிமையாக இருந்தாலும் சரியே!"** என்றும், இமாமுல் ஆரிபீன் ஸையிதினா ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,...

اَنَّ اللهُ تَعَالٰى خَلَقَ الْجَنَّةَ لِمَنْ اَطَاعَ وَلَوْكَانَ عَبْدًا حَبَشِيًّا وَّخَلَقَ النَّارَ لِمَنْ عَصٰى وَلَوْكَانَ شَرِيْفًا قُرَيْشِيًّا

**"இறைவன் சுவர்க்கத்தை படைத்தான். யார் அவனுக்காக வழிப்பட்டு நடக்கிறானோ அவனுக்காக, அவன் ஹபஷிகளிலுள்ள அடியாக இருந்தாலும் சரியே! இதுபோன்றே அவன் நரகத்தை படைத்தான். யார் அவனுக்கு மாறு செய்கிறானோ அவனுக்காக. அவன் குறைஷிகளை சேர்ந்த ஷரீபாக இருந்தாலும் சரியே!"**

என்றும் கூறுகின்றனர். ஆதலால் ஒருவர் இஸ்லாமிய மார்க்கத்தின் ஏவல். விலக்கல்களை பேணி நடக்காது அதற்கு மாற்றமாக நடப்பாராயின் அவர் தமது அர்த்தமற்ற வம்சப் பெருமையை கொண்டு ஒருபோதும் வெற்றி பெறமாட்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**குடும்ப வாழ்க்கை**

அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாராகிய நாம் நபியவர்களை முறையாகப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியமாகும். ஆதலால் நபியவர்கள் தங்களில் வாழ்வில் உணவு, உடை, இடம், வணக்கம் போன்றவைகளை எல்லாம் எவ்வாறு கடைபிடித்து வந்தார்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டு நாம் ஆய்ந்தறிந்து அதன்படி செயல்பட்டு வரவேண்டும். மேலும் நபியவர்களின் மகத்தான குணங்களை நாம் தெரிந்து கொள்வதற்காக அவர்களுடைய வாழ்விலிருந்து சில சம்பவங்களை உங்களின் மேலான பார்வைக்கு நாம் தருகிறோம்.

அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை தமது தோழர்களோடு ஒரு இடத்தில் அமர்ந்திருந்தபோது, ஒரு மூதாட்டி சில பேரீத்தங்கனிகளை கொண்டுவந்து அன்பளிப்பாக நபியவர்களிடம் வழங்கினார். அவைகளை நபியவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்று வழக்கம்போல் முதலில் மற்றவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்காமல் தாங்களே முதலில் ஒருகனியை எடுத்து சாப்பிட்டார்கள். பிறகு இன்னொரு கனியையும் எடுத்து சாப்பிட்டார்கள். அதன்பின் இன்னொரு கனியையும் எடுத்து சாப்பிட்டார்கள். இப்படியே எல்லா கனிகளையும் நபியவர்களே சாப்பிட்டு விட்டார்கள். இதைக் கண்ட அம்மூதாட்டி மிகவும் சந்தோசமடைந்தவராக தமது இல்லத்திற்கு திரும்பிச் சென்றார்.

அதேநேரம் நபியவர்கள் இப்படி வழக்கத்திற்கு மாறாக நடந்து கொண்டதைக் கண்ட தோழர்கள் நபியவர்களை நோக்கி, 'யாரஸூலல்லாஹ்! இன்று தாங்கள் வழக்கத்திற்கு மாறாக நடந்து கொண்டதற்குரிய காரணமென்ன? என்று கேட்க, அதற்கு நபியவர்கள், அம்மூதாட்டி என்மீதுள்ள

பிரியத்தால் அக்கனிகளை கொண்டு வந்து என்னிடம் தந்ததால் நானும் அவரை சந்தோஷப்படுத்தும் பொருட்டு முதலில் அக்கனிகளிலிருந்து ஒன்றை எடுத்து சாப்பிட்டேன். அது மிகவும் புளிப்பாக இருந்ததால் இன்னொன்றை எடுத்து சாப்பிட்டேன். அதுவும் புளிப்பாக இருந்தது. இந்நிலைகளில் அக்கனிகளை உங்களுக்குத்நது நீங்களும் அதை சாப்பிட்டு அதனுடைய புளிப்பின் காரணமாக நீங்கள் உங்கள் முகத்தை சுளிப்பதை அம்மூதாட்டி பார்த்து விட்டால் எங்கே அவரது உள்ளம் சங்கடப்படுமோ என எண்ணியே எல்லா கனிகளையும் நானே சாப்பிட்டு விட்டேனெ'ன்று கூறினார்கள்.

இதுபோன்று வேறொரு சமயம், ஒருவர் சில பேரீத்தங்கனிகளை காணிக்கையாகக் கொண்டுவந்து நபியவர்களிடம் தந்தபோது, அதை எடுத்து தோழர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்குமாறு ஹழ்ரத் அலியவர்களிடம் நபியவர்கள் கூறினார்கள். ஹழ்ரத் அலியவர்களும் அக்கனிகளை எடுத்துப் பார்க்க, அக்கனிகள் எல்லோருக்கும் போதுமானதாக இல்லாதிருப்பதாக கண்டு, 'யாரஸூலல்லாஹ்! இக்கனிகளை நான் இறைவன் பங்கிடுவது போன்று பங்கிடவா? அல்லது தாங்கள் பங்கிடுவது போன்று பங்கிடவா?' என்று கேட்க, அதுகேட்ட நபியவர்கள், இறைவன் பங்கிடுவதுபோன்று பங்கிடுங்கள் என்றனர். அருமை நபியவர்களின் ஆணைக்கேற்ப ஹழ்ரத் அலியவர்கள் அக்கனிகைள பங்கிட்டுக் கொடுத்ததில் சிலருக்கு கிடைத்து சிலருக்குக் கிடைக்காமல் போனது. இச்சம்பவத்தின் மூலம் இறைவன் தன்னடியார்களுக்கு எப்படியெல்லாம் பங்கீடு செய்கிறான் என்பதை விளங்கிக் கொள்ளும் நாம் ஆச்சரியப்படுவதோடுஇ ஆனந்தமும் அடைகிறோம்.

விஷயம் இவ்வாறிருக்க, நம்மிப் பெரும்பாலோர் இதையெல்லாம் கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்காது தமது மனோ இச்சைகளுக்கு ஆட்பட்டு ஆடம்பரமான வாழ்க்கை என்னும் மோகத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அத்துடன் தமது பிள்ளைகளுக்கும் ஆடம்பரமாக மணமுடிக்க வேண்டுமென எண்ணி காலத்தை கடத்தியதன் மூலம் அவர்களையும் வேதனைக்கு ஆளாக்கி வருகின்றனர்.

மேலும் சில குடும்பங்களில் பெண்களை விவாகம் செய்து கொடுப்பதென்றால் அப்பெண்ணுக்கு சீதனமாக வீடு, தங்கம் மற்றும் வெள்ளி நகைகளும் கைக்கூலியாகக் கொடுப்பதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களும், சீர்வரிசை சாமான்களும் கொடுத்தால்தான் கௌரவம் என்றும் எண்ணிக் கொண்டிருப்பதால் வசதி படைத்த சில செல்வந்தர்களை தவிர ஏழைகளாக இருப்போர் தமது பெண்களை விவாகம் செய்து கொடுக்க வழியின்றி பெண்களை பெற்றவர்களும் அப்பெண்களும் இன்று ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டுள்ளனர். ஆனால் மணப்பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய மஹர் தொகையை மட்டும் மணமகன் நிகாஹ் ரிஜிஸ்டரில் கடனாக எழுதி வைக்கிறார். இதை குறித்து அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்......

مَنْ تَزَوَّجَ اِمْرَأَةً عَلٰى صَدَاقٍ وَهُوَ لَا يَنْوِيْ اَدَائَهُ فَهُوَ زَانٍ وَمَنْ اَدَانَ دَيْنًا وَهُوَ لَا يَنْوِيْ قَضَائَهُ فَهُوَ سَارِقٌ

www.sufimanzil.org

**“மஹரின் பேரில் ஒரு பெண்ணை மணமுடித்து அதை கொடுக்க வேண்டுமென்னும் எண்ணம் இல்லாதவன் விபச்சாரம் செய்தவனாவான். இதுபோன்றே திருப்பிக் கொடுக்கும் எண்ணம் கொள்ளாது கடன் வாங்குபவன் திருடனாவான்“** என்றும் கூறுகின்றனர்.

எனவே இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளால் இன்று வசதியில்லாத எத்தனை ஏழைக் குடும்பங்கள் என்னென்ன கதிக்கு ஆளாகியுள்ளது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அந்த ஏழைப்பெண்களில் சில பேதைகள் தமது குடும்பபத்தை காப்பாற்றுவதற்காக சில வாலிபர்களின் கைகளில் சிக்கி சீரழிந்து சின்னாபின்னமாகிப் போவதையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம்.

இந்த இளைஞர்கள் ஒரு அபலையை விபச்சாரியாக்க முயலும் அதேநேரம், இன்னொருவன் தனது சகோதரியை இதே போன்றதொரு கதிக்கு ஆளாக்க முற்பட்டால் அப்போது அவனுடைய உள்ளம் என்ன பாடுபடும் என்பதை அவன் யோசித்துப் பார்ப்பானாயின் அவனுக்கு நல்லறிவு பிறந்து விடும்.

ஆதலால் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் ஆடம்பரமான வாழ்க்கை என்னும் மாயையை விட்டுவிட்டு தனது சொந்த பந்துக்களிலுள்ள வசதியற்ற ஏழை பெண்களின் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்குள் எரிந்து கொண்டுள்ள நெருப்பை அணைக்கும் விஷயத்தில் கருணை காட்டுவார்களாயின் இஸ்லாமிய சமூகம் நிம்மதியான வாழ்வைப் பெற்று விருத்தியடையும்.

மேலும் விவாக விசயத்தில் குடும்ப அம்சத்தின் (குஃப்வு) முறைப்படி ஒரு ஆணுக்கு பிரியமான பெண்ணையும்இ ஒரு பெண்ணுக்கு பொருத்தமான ஆணையும் பார்த்து விவாகம் செய்து வைத்தல் என்பதுதான் ஈஜாப் கபூலாகும். அவ்வாறு கவனித்து முடித்து வைத்தால்தான் அவர்களின் குடும்ப வாழ்க்கையும் சந்தோஷமாக அமையும். அவ்வாறின்றி மணமக்களின் விருப்பத்திற்கு மாறாக பெற்றோர்களோ அல்லது போஷகர்களோ தமது விருப்பத்திற்கு தக்கவாறு மணமுடித்து வைப்பார்களாயின் மணமகன் தனது இஷ்டம்போல் வேசியை தேடிக் கொண்டு செல்வான். மணமகளோ தனது தலைவிதியை நொந்து கொண்டு மனமொடிந்து போய் ஆனபடி ஆகட்டுமென்று ஊர் சுற்றத் தலைப்பட்டு முடிவில் அக்குடும்பமே சிதறி சின்னாபின்னமாகி போய்விடும்.

இப்படிப்பட்ட விபரீதங்களெல்லாம் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே விவாகம் செய்துகொள்ள விரும்புவோர் தாமே நேரில் பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் இரு உள்ளமும் பொருந்திப் போய்விட்டால் அதன்பின் எந்தத் தீங்கும் ஏற்பட வழி இருக்காதல்லவா?

இன்னும் சில பெற்றோர் தாங்கள் அருமையாய் வளர்த்த பெண்ணை அறுபது எழுபது வயதுக்காரனுக்கு தமது வறுமையைக் காரணம் காட்டி விவாசம் செய்து வைத்து விடுகின்றனர். அத்துடன் அக்கிழச் செல்வந்தர்களும் தமது தேகத்தின் நிலையை கொஞ்சம்கூட எண்ணி பார்க்காமல் காலங்கெட்ட காலத்தில் இப்படிப்பட்ட விபரீதங்களுக்கு எல்லாம் இடம்கொடுத்து விடுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு மனிதனுடைய வயதுக்கு

ஏற்றார்போல் அவர்களின் தேகமும் மாற்றமடையும் என்பதை கூட ஏனோ புரிந்து கொள்வதில்லை.

பாருங்கள்! பதினாறு வயதிலுள்ள தேக ஆரோக்கியமும், சக்தியும், வீரியமும் இருபத்தாறு வயதில் இருக்காது. இதுபோன்றே முப்பத்தாறு, நாற்பத்தாறு, ஐம்பத்தாறு வயதில் அந்தந்த வயதுக்கேற்றவாறு சக்தியும், வீரியமும் குறைந்து கொண்டே வரும். இதையறியாது நாடி தளர்ந்து போன நிலையில் தனது மனைவியை ஏறிட்டுக் கூட பார்க்க முடியாமல், இறுதியில் தாது புஷ்டிக்கு லேகியத்தை தேடுகின்றனர். அதன் காரணமாக அத்தி பூத்தாற்போல் எப்போதாவது அவர்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு காரியம் நடது விட்டால் ஒக்கச் சிரித்தால் வெட்கமில்லை என்பதற்கேற்ப தலைகால் புரியாமல் ஆடத்துவங்கி விடுகின்றனர்.

இதைகாணும் பெண்ணுடைய பெற்றோர்களோ பரவாயில்லை. மாப்பிள்ளை விஷயடுள்ள ஆள்தானென்று நம்பியும் விடுகின்றனர். ஆனால் வருடங்கள் பல கடந்தும் தங்களின் ஆஸ்தியை ஆதீனம் கொள்வதற்கு தமது பெண்ணின் வயிற்றில் ஒரு புழு பூச்சிகூட விழவில்லையே என எண்ணி வேதனையால் பெருமூச்சு விடுகின்றனர். அதேநேரம் அப்பெண்ணோ இல்லறச் சுகத்தை அனுபவிக்க வழியில்லையே என வெம்பி வேதனையால் மனம் புழுங்கி சிலபோது மானக்கேட்டுக்கும் ஆளாகி விடுவதுண்டு.

மேலும் இக்காலத்தில் பெண்கள் தொலைக்காட்சியில் காட்டப்படும் சீரியல் மற்றும் சினிமா படங்களை பார்ப்பதும் அவர்கள் வழிகேட்டின் சிகரத்தை எட்டிப் பிடிப்பதற்குக் காரணமாகி விட்டது. இதனால் ஏற்படும் நரகவேதனை இவ்வளவுதான் என்பதை கணக்கிட்டுச் சொல்ல முடியாது. எனவே ஆண்களும் பெண்களும் தம்முடையவும், தமது குடும்பத்துடையவும் மானத்தை காப்பாற்றிக் கொள்வதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவ்வாறே இன்னும் சில பெற்றோர் தமது பெண்களுக்கு அவர்களின் துவக்க காலத்திலேயே ஆடை மற்றும் ஆபரணங்களின் ஆசையை அளவுக்கதிகமாகவே அவர்களின் உள்ளத்தில் உருவேற்றி விட்டு விடுவதால், ஒரு பெண்ணின் கணவன் அவளுடைய விருப்பத்திற்கு ஏற்றார்போல் பொருளீட்ட சக்தியற்றவனாக இருந்தால் அவள் அவனை கொஞ்சம்கூட மதிக்காமல் போவதோடு அவனுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் என்பது அசாத்தியமான ஒன்றாகி விடுகிறது. இதனால் அவன் நிம்மதி இழந்து திருடியாவது தனது மனைவியை திருப்திப்படுத்த வேண்டுமென எண்ணி தவறான வழியில் நடக்க முற்பட்டு விடுகிறான். இதன்காரணமாக அவனும் அவனது குடும்பத்தாரும் உண்ணக்கூடிய உணவும் தடைசெய்யபட்டதாக ஆகிப்போய் அதில் தரிக்கும் குழந்தைகள் பாவத்தின் பிண்டங்களாக ஜனித்து வெளியே வந்து முழு சந்ததியும் தூய்மையற்றுப் போய்விடுகிறது.

எவ்வாறெனில் ஒருவன் இன்னொருவனுக்கு சொந்தமான தோட்டத்திலிருந்த பழத்தை அவனுடைய அனுமதியின்றி பறித்து தின்று விடுவானாயின், அப்பழத்தின் சத்து இவனது தேகத்தில் கலந்து இரத்தத்தில் இரேகித்துப் போய்விடுகிறது. இதை இவ்வுலகிலோ அல்லது மறுஉலகிலோ ஏதாவது ஒருவகையில் நோய்கள் போன்றவற்றை அனுபவிப்பதை கொண்டோ

அல்லது பொருளை கொடுத்தோ அல்லது அவனுக்கு அடிமைப்பட்டு ஊழியம் செய்வதைக் கொண்டோ தீர்க்கும்வரை இவன் அப்பாவத்திலிருந்து தப்ப முடியாது.

அவ்வாறின்றி அந்த இரத்தம் அவனுடைய சந்ததிகளின் பிண்டத்திலும் கலந்து விட்டால் அவர்களும் இவனுடைய பாவத்திற்கு பாத்தியஸ்தர்களாகி விடுவர். இதனால்தான் மார்க்கம் அனுமதிக்கும் வழியில் பொருளைத்தேடி வாழ்க்கை நடத்த வேண்டுமென மார்க்கத்தில் கட்டளையிடப்பட்டுள்ளது. இந்த ரகசியத்தை உணர்ந்து கொள்ளாததால்தான் சில குடும்பங்களில் தீயகுணமும், தீயநடத்தையும் காட்டுத்தீயைப் போல பரவிக் கொண்டிருக்கிறது.

பாருங்கள்! சர்வலோக இரட்சகராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பல திருமணங்களை செய்திருந்தனர். அப்படியிருந்தும் அவர்கள் ஒருவினாடி நேரம்கூட இறைவனுடைய நினைவை விட்டும் நீங்கியிருக்கவில்லை. இதனாலேயே.......

حُبِّبَ اِلَيَّ مِنْ دُنْيَاكُمْ ثَلَاثٌ اَلنِّسَآءُ وَالطِّيْبُ وَقُرَّةُ عَيْنِيْ فِى الصَّلٰوةِ

**“உங்களுடைய உலகத்தில் மூன்று பொருட்கள் எனக்குப் பிரியமானவைகளாக ஆக்கித்தரப்பட்டுள்ளன. அவை (ஹலாலான) பெண்ணும், நறுமணமும், தொழுகையின் கண் குளிர்ச்சியுமாகும்“** என்பதாக ஏந்தல்நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நபிமொழியை நாம் சற்று ஆழமாகக் கவனிப்போமாயின், ஆதம் என்னும் தொகுப்பிலிருந்து பிரிந்த ஜுஸ்யிய்யாவான ஹவ்வா என்னும் பெண் வடிவத்தை ஆதமில் மீண்டும் இணைப்பதற்காகத்தான் பெண்ணை இஸ்லாம் ஆணுக்கு ஹலாலாக ஆக்கித் தந்துள்ளது. (இதைத்தான் “**அக்மலுஷ் ஷுஹூது**“ எனச் சொல்லப்படுகிறது) அடுத்து நறுமணம் என்பது பொருட்களின் ஹகீகத்தாகிய எதார்த்தமாக இருப்பது எதுவோ அந்த அரூபத்தில் இணைதல் என்பதாகும். இவ்வாறே தொழுகையின் கண் குளிர்ச்சி என்பது காப கௌஸைனி எனப்படும் மிஃராஜுடைய ஸ்தானத்தில் மெய்ப்பொருளின் பேரழகை தரிசித்து அதில் இணைவதாகும்.

இதை நாம் இந்த இடத்தில் விளக்கமாக பேசுவதற்குக் காரணம், ஒவ்வொருவரும் தமது ஷெய்குமார்களிடம் இதனுடைய ரகசியத்தை கேட்டுத்தெரிந்து அதை செயல்படுத்த வேண்டும் என்பதேயாகும். ஆகையால் அருமை நபியவர்கள் பிரியப்பட்டது உண்மையில் இறைவனேயன்றி வேறு எதையுமல்ல என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் மணமுடிப்பவர் அதில் கடைபிடிக்க வேண்டிய முறைகளை செம்மையாக அறிந்து அதன்படி நடந்துவர வேண்டியதும் அவசியமாகும். அவ்வாறின்றி வெறுமனே தேக சுகத்திற்காக மனம்போன போக்கில் நடந்தால் மண்ணுக்குப் போகும் தினத்தன்று வேதனையில் சிக்கித் தவிக்க வேண்டி வந்துவிடும். இதனாலேயே............

يَأْتِيْ عَلَى النَّاسِ زَمَانٌ لَا يُنَالُ فِيْهِ الْمَعِيْشَةُ اِلَّا بِالْمَعْصِيَةِ فَاِذَا كَانَ ذَالِكَ الزَّمَانُ حَلَّتِ الْعَزُوْبَةُ

**"மனிதர்கள் மீது ஒருகாலம் வரும். அக்காலத்தில் பாவ சம்பந்தமின்றி ஆகாரம் தேடமுடியாது. அப்படிப்பட்ட ஓர்காலம் வந்துவிடுமாயின் அப்போது மணமுடித்துக் கொள்ளாதிருப்பது கூடும்"** என்றும்.......

اِذَا اَتَى عَلَى اُمَّتِيْ مِائَةٌ وَّثَمَانُوْنَ سَنَةٌ فَقَدْ حَلَّتْ لَهُمُ الْعَزُوْبَةُ وَالتَّرَهُّبُ عَلَى رُؤُوْسِ الْجِبَالِ

"எனது உம்மத்துக்களின் மீது நூற்றி எண்பதாவது ஆண்டு வந்துவிடுமாயின் அப்போது அவர்கள் திருமணமின்றி பிரம்மச்சாரிகளாக இருப்பதும், மலைகளில் போய் தங்கியிருந்து துறவிகளாக வாழுவதும் கூடும்"

என்பதாக ஏந்தல்நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.(இங்கே 180வது ஆண்டு என்பதற்கு ஹிஜ்ரி ஆண்டு என்பது கருத்தாகும்) மேலும் ஞானவான்கள்......

اَفَتُ الْعِلْمِ بَيْنَ الْفَخْذَيْنِ

**"அறிவுக்கு ஆபத்து இரு தொடைகளுக்கும் மத்தியில் உள்ளது"** என்றும் கூறியுள்ளனர். ஆதலால் யார் தமது சரீர இச்சையை அடக்கியாளும் திறமையுள்ளோராகவும், மணமுடிப்பதால் தமது மறுமைக்குரிய வாழ்க்கை நாசமாகிவிடும் என்றும் கருதுகிறாரோ அவர் திருமணமின்றி பிரம்மச்சாரியாக இருப்பது கூடும் என்பதை மேற்கண்ட நபிமொழிகளை கொண்டு நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் எவரேனும் தமது பழைய நிலையைவிட்டும் வெளிவராது பிடிவாதமாக இருப்பாராயின் அவர் அறிவாளர்களின் பார்வையில் முடிவற்ற மூடரென்றே தீர்மானிக்கப்படுவார்.

**சில குடும்பங்களிலுள்ள மூட நம்பிக்கை**

நமது சமூகத்திலுள்ள சில குடும்பங்களில் இறைநம்பிக்கை மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தின் நடைமுறை எந்த அளவுக்கு சிதைந்து போயுள்ளது என்பது பற்றி இந்த இடத்தில் கொஞ்சம் போல் விளக்குவது அவசியமென்று நினைக்கிறோம். அதாவது............

ஒரு குடும்பத்தில் யாராவது இறந்து போனால் அவருக்கு கத்தம் பாத்திஹா ஓதும் வழக்கம் நம்மிடையே உள்ளது. அதற்கேற்ப ஒரு குடும்பத்தில் பாத்திஹா ஓதவேண்டிய சந்தர்ப்பம் வந்தபோதுஇ அதற்காக உணவுகள் தயாரிக்கப்பட்டு பாத்திஹா ஓதுபவர் யாஸீன் சூறாவுடைய நூலை எடுத்துக் கொண்டு வந்து ஓதத் துவங்கினார்.

அப்போது அவ்வீட்டிலிருந்த பெண், இங்கே வைத்து பாத்திஹா ஓத வேண்டாம். பக்கத்து வீட்டிற்குப் போய் ஓதுங்களென்று சொல்ல, அதற்வர்: ஏன் என்று கேட்க, அந்தப் பெண்: இந்த வீட்டில் திருமணம் நடந்து இன்னும் ஒருவருடம் கூட பூர்த்தியாகவில்லை. ஆதலால் மங்களகாரியத்திற்கு மணவறை வைத்த வீட்டில் ஒருவருடம் பூர்த்தியாவதற்கு முன் அர்வாஹுகளின் பெயரால் கத்தம் பாத்திஹா போன்றவைகளை எல்லாம் ஓதக்கூடாதென்று கூறினார்.

அதைக்கேட்ட அவர்: இந்த வீட்டில் குர்ஆன் இருந்தால் அதையும் அப்புறப்படுத்தி விடுங்களென்று சொல்ல, அதற்கந்த பெண்: ஏன் இவ்வாறு சொல்கிறீர்? என்று கேட்க, அதற்கவர்: இல்லையில்லை! குர்ஆனிலும் யாஸீன் சூறா இருப்பதால் அது உங்களின் கொள்கைக்கு மாற்றமாகுமே என்பதற்காக அப்படிச் சொன்னேனென அப்பெண்ணின் தவறை திருத்தும் நோக்கத்தில் கூறினார். அதுகேட்ட அப்பெண், பதில் சொல்ல வழியறியாது கோபத்தோடு: இப்படியெல்லாம் பேசவேண்டாம். நான் சொல்வதை மட்டும் செய்தால் போதுமென்று கூறினார்.

அதன்பின் பக்கத்து வீட்டில் வைத்து கத்தம் பாத்திஹா ஓதப்பட்டு உணவுமட்டும் மணவறை வைத்த வீட்டில் வைத்து பரிமாறப்பட்டது. இப்படியெல்லாம் மிகுந்த பயபக்தியோடு செய்யப்பட்டும் அதெல்லாம் ஒன்றுக்குமே பயன்படாமல் சுமார் இரு வருடங்களுக்குள்ளேயே மணவறை வைத்த வீட்டில் வைத்து திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் திடீரென்று இறந்து போனார். அப்பெண் இறந்து நாற்பதாவது நாள் வந்தபோது வழக்கம்போல மஸ்ஜிதில் ஜும்ஆவுடைய தொழுகைக்குப் பின் கத்தம் பாத்திஹா ஓதி ஜனங்களுக்கு பங்கீடு செய்வதற்காக மிட்டாய்களும், வாழைப்பழங்களும் கொண்டு வந்து வைக்கப்பட, ஒருவர் அப்பழங்களையெல்லாம் சீப்புக்களிலிருந்து தனியாக உதிர்த்து எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சில பழங்களின் காம்புகள் பெயர்ந்து விடவே, அதைக் கண்ட பக்கத்திலிருந்த பெண் ஒருவர் திடுக்கிட்டுப் போனவராக, தம்பி! இதென்ன காரியம் செய்துவிட்டீர்? என பரபரப்போடு கேட்டார்.

அதைக்கேட்ட அவர் ஒன்றும் தோன்றாதவராக என்ன விஷயம் என்று கேட்க, அதற்கந்தப் பெண்: நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? நாளை மறுமைநாளன்று மனிதர்களெல்லாம் சூரியனுடைய வெப்பம் தாங்காது அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது இந்த மிட்டாய்களெல்லாம் குடைகளாகவும் வாழைப்பழங்களெல்லாம் குச்சிகளாகவும் இருக்கும் என்பதாக சில பெரியோர்கள் கூறியுள்ளனர். விஷயம் இவ்வாறிருக்க நீங்கள் பழத்தின் காம்புகளையெல்லாம் பெயர்த்தெறிந்து விட்டதாக அக்குடைகளுக்கு கைப்பிடி இல்லாமலல்லவா போய்விடும் என மிகுந்த கவலையோடு கூறினார்.

அதைக் கேட்ட பழம் உதிர்த்தவர் அப்பெண்ணை பார்த்து: ஏதோ தவறாக நடந்து விட்டது மன்னித்துக் கொள்ளுங்களென்று சமாதானமாக சொல்வதைப் போன்று சிரித்துக் கொண்டே கூறினார். இப்படியெல்லாம் நாம் சொல்வதற்குக் காரணம், சில குடும்பங்களில் மார்க்க சம்பந்தமாக நம்பிக்கை என்பது எந்த அளவுக்கு சிதைந்து போயுள்ளது என்பதை எடுத்துக்காட்ட

வேண்டுமென்னும் நோக்கமேயன்றி மற்றபடி யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காக அல்ல.

பாருங்கள்! சீனதேசத்தை சேர்ந்த விக்ரஹ ஆராதனைக்காரர்கள் தமது குடும்பத்தை சேர்ந்த எவரேனும் இறந்து போய்விட்டால் அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது எந்தெந்த பொருட்களைக் கொண்டு சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்களோ அந்த உருவங்களை போலவே வண்டி, குதிரை, கார், கப்பல், வீடு, தோட்டம் ,பெண் போன்ற உருவங்களை மூங்கில் சட்டம், பேப்பர் போன்ற பொருட்களை கொண்டு செய்து அவைகளின் மீது மந்திரங்களை ஓதி பூஜை செய்து அதன்பின் அவைகளை நெருப்பிலிட்டு சாம்பலாக்கி விடுவது வழக்கம்.

இப்படிச் செய்வதால், அவைகளெல்லாம் மேலுலகுக்குச் சென்று உருவெடுத்து, அவர் உலகில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததைப் போலவே அவைகளை கொண்டு அங்கேயும் சுகத்தை அனுபவிப்பாரென்று நம்புகின்றனர். இதையெல்லாம் மூடத்தனமென்று கேலி செய்யும் நாம் நமது செயல்பாடுகளையும் நம்பிக்கையையும் திருத்திக் கொள்ளாதிருப்பது ஆச்சரியமே! இதனால்தான் இறைவன் வேதத்தில்........

وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِينَ يَعْمَلُونَ السَّيِّئَاتِ حَتَّىٰ إِذَا حَضَرَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ إِنِّي تُبْتُ الْآنَ

**“அவர்களில் ஒருவனுக்கு மரணம் வரும்வரை பாவம் செய்து கொண்டிருந்து (பின்னர் அது வந்தபோது) இப்போது நான் பாவமன்னிப்புக் கோருகிறேன் எனக் கூறுவோனுக்கு பாவமன்னிப்பு இல்லை“** என்றும்...........

مَنْ كَانَ فِي هَٰذِهِ أَعْمَىٰ فَهُوَ فِي الْآخِرَةِ أَعْمَىٰ وَأَضَلُّ سَبِيلًا

**“யார் இவ்வுலகில் (அகக்) குருடனாக (ஹக்கை தரிசிக்காதவனாக) இருந்தானோ அவன் இறுதிநாளிலும் குருடனே. மேலும் அவனுடைய பாதை மிகவும் கெட்டதாகும்“.**

என்றும் கூறுகின்றான். ஆதலால் நாம் இறப்பை சந்திக்குமுன் இறைலிகா என்னும் இறை சந்திப்பை பெற்று முக்தியடைய முயல வேண்டும்.

இனி இறந்தோருக்காக கத்தம் பாத்திஹா போன்றவைகளை செய்வதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பது நமது கருத்தல்ல. அதேநேரம் பாத்திஹா ஓதி அவ்விறந்தவரின் பாவமன்னிப்புக்காக பிரார்த்தனை செய்வோரில் யாருடைய உள்ளம் அவ்விறந்தவரால் துன்புறுத்தப்பட்டிருக்குமோ அக்குற்றத்தை மட்டும் அவர் மன்னித்தால் அதற்காக அவர் அனுபவிக்கும் வேதனையை விட்டும் நிவர்த்தி பெறலாம். மற்றபடி இன்னொருவருக்குச் செய்த பாவத்திற்காக அவர் அனுபவிக்கும் வேதனையை விட்டும் துன்புறுத்தப்பட்டவர் மன்னிக்காதவரை அவரால் தப்ப முடியாது.

இதுபோன்றே உணவு, பானம், துணிகள் போன்ற பொருட்களை தர்மமாக அவ்விறந்தவருடைய பெயரால் கொடுப்பதில் அவருக்கு அவ்விஷயங்களிலுள்ள இச்சைகளை தற்காலிகமாக நிவர்த்தி செய்யலாம். ஆனால் எந்த ஆன்மாவின் இச்சை போக இன்பத்தை தேடுவதாக இருக்கிறதோ அதை சமாதனப்படுத்த ஏழை பெண்களை விவாகம் செய்து கொடுப்பதே அதற்குரிய சிறந்த வழியாகும். மேலும் மேற்காணும் நடைமுறைகளை செய்து வருவதை கொண்டுகூட இறை நம்பிக்கையை விட்டும் வழிகேட்டில் இறந்து போனவரால் முக்தியடைய முடியும் என்பதற்கு குர்ஆனிலோ அல்லது நபிமொழியிலோ எந்த ஆதாரமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**இறப்பை மறந்த தீய நடத்தை அறியாமையே!**

يَاَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا لَاتُلْهِكُمْ اَمْوَالُكُمْ وَلَا اَوْلَادُكُمْ عَنْ ذِكْرِ اللهِ

**"விசுவாசிகளே! உங்களுடைய பொருட்களும் பிள்ளைகளும் இறைவனுடைய நினைவை விட்டும் உங்களை (இதர விஷயங்களில்) திருப்பி விடவேண்டாம்"**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறியிருப்பதால் நாம் இவ்வுலகில் எத்தனை காலம் ஜீவித்திருந்த போதிலும் சந்தேகத்திற்கிடமின்றி ஒருநாள் இரவிலோ அல்லது பகலிலோ நாம் சேர்த்து வைத்துள்ள செல்வங்களனைத்தையும் துறந்து நமது தேகமும் அழிந்து இறந்துபோய் விடுவோம் என்பதை யோசித்துப் பார்ப்போமாயின் தற்போது நாம் அனுபவித்துக் கொண்டுள்ள சுகங்களனைத்தும் சூரியனை கண்ட பனியைப்போல ஒரே வினாடியில் நம்மை விட்டும் அகன்றுவிடும் என்பது மட்டும் நிச்சயம்.

இது பொதுவாக எல்லோருமே தெரிந்துள்ள ஓர் விசயமாயினும் நம்மில் பெரும்போலோர் இதைப்பற்றி கொஞ்சங்கூட எண்ணிப்பார்க்காது மறதியில் ஆழ்ந்திருப்பதால், நாம் இன்னும் வெகு காலத்திற்கு உயிரோடு இருப்போமென்னும் எண்ணமும் நமது உள்ளத்தில் மிகைத்துப் போயிருப்பதால் இந்த தேகத்திற்குரிய வாழ்க்கையை நம்பி மோசம் போய் கொண்டிருக்கிறோம். தினந்தோறும் குறைந்தபட்சம் மூன்று முறையாவது நாம் நமது மரணத்தை பற்றி சிந்திப்போமாயின் உலகின் பக்கமாக உள்ளம் அதிகமாகத் திரும்பாது. இதை நாம் ஒரு உதாரணத்தின் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

ஒரு நீதிபதி ஒருவனை பத்து வருடங்களுக்குப் பின் சிரச்சேதம் செய்ய வேண்டுமென தீர்ப்பளிக்கிறாரென்று வைத்துக் கொள்வோம். அதைகேட்கும்அவனும் நமக்குத்தான் இன்னும் நீண்டநாள் தவணை இருக்கிறதே என்றெண்ணி கவலைப்படாது இருப்பானா எனில், கண்டிப்பாக கவலைப்படத்தான் செய்வான். அதற்காக அவன் தனக்குத் தரப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல்கோர்ட்டில் அப்பீலும் செய்து எப்படியாவது தனக்குத் தரப்பட்ட தண்டனையிலிருந்து தப்புவதற்குரிய வழியைத் தேடுவான்.

இவ்வாறே நாம் ஒவ்வொருவரும் இறந்து போவோமென்னும் விசயத்தில் சந்தேகமின்றி இருந்தாலும், அதற்குரிய கால அளவு எவ்வளவு என்பதை தெரியாமலும், அதை மாற்றி அமைப்பதற்குரிய மேல்கோர்ட் என்ற ஒன்று இல்லாதிருப்பதாலும் இதையெல்லாம் மறந்து சதா உலக சுகத்தை தேடியலைவது ஒருவனை வழிகேட்டுக்கும் நரகத்திற்கும் உரியவனாக ஆக்கிவிட்டது.

மேலும் ஒருவன் உலக சுகத்திலே மூழ்கிப் போவதற்குக் காரணம், காமஇச்சை தான் என்பதும் தெரியவருவதால் அது சம்பந்தமாக நமக்குள் காணப்படும் சில குணங்களை நாம் இப்போது கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதுபற்றி இறைவன் தனது வேதத்தில்....

قُلْ لِلْمُؤْمِنِيْنَ يَغُضُّوا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوا فُرُوجَهُمْ ذَالِكَ اَزْكٰى لَهُمْ

**"(முஹம்மதே!) தீமைக்குரிய பார்வைகளை விட்டு கண்களை சுருக்கிக் கொள்ளுமாறும், தமது வெட்கஸ்தலங்களை பேணிக் கொள்ளுமாறும் விசுவாசிகளுக்கு நீர் கூறுவீராக. அது அவர்களுக்கு மிகவும் தூய்மையானத(ஒழுக்கம)ாக இருக்கும்."**

என்பதாகக் கூறுகிறான். விசயம் இவ்வாறிருக்க நமக்கு மத்தியில் சில மீசை முளைத்த விடலைகள் தனியாக வீதியில் போய் கொண்டிருக்கும்போது, கூன் விழுந்த கிழவிகள் யாரேனம் வருவதைக் கண்டால் உடனே முகத்தை திருப்பிக் கொள்கின்றனர். அதேநேரம் தமது நண்பர்களோடு செல்லும்போதுஇ வழியில் இளம்பெண்கள் யாராவதுத வருவதைக் கண்டால் தமது நண்பர்கள் தம்மை கேவலமாக நினைத்து விடுவார்களே என்பதற்காக ஜாடையாக ஓரக் கண்களால் அப்பெண்களை பார்த்துவிட்டு சூபிய்யாக்களை போல தலையை குனிந்து கொண்டு செல்வார்கள். ஆனால் இவர்கள் மணமுடிக்க தடை செய்யப்பட்ட சகோதரிகள் மட்டும் எத்தனைதான் அழகாக இருந்தாலும் அவர்களை பார்க்கும்போது மட்டும் அவர்களுக்குள் காமஇச்சை எழாதிருப்பதற்குக் காரணம், உள்ளம் மார்க்கச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதேயாகும் என்று கூறுவர்.

அவ்வாறாயின் இந்த இடத்தில் மார்க்கச் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட உள்ளம், அன்னியப் பெண்களை பார்க்கும்போது மட்டும் கட்டுப்பட மறுப்பதற்குரிய காரணமென்ன என்பதை நாம் யோசித்தால், முந்தியதில் மார்க்கச் சட்டத்திற்குரிய கட்டளையை மீறினால் தனது குடும்ப கௌரவத்திற்கு பங்கம் ஏற்பட்டு மானம் பறிபோய் விடும் என்ற அச்சமும், பிந்தியதில் மார்க்கச் சட்டத்தை மீறினால் அடுத்தவருடைய கௌரவத்திற்குத் தான் பங்கம் ஏற்படுமேயன்றி அதனால் தனக்கு எவ்வித நஷ்டமும் நேராது என்னும் தீய எண்ணம் உள்ளத்தில் உறைந்திருப்பதேயாகும் எனத் தெரியவருகிறது. இந்நிலையில் இறைவன் தனது வேதத்தில் என்ன கூறுகிறான் என்பதை இவர்கள் கொஞ்சங்கூட யோசித்துப் பார்ப்பதில்லை. இறைவன் என்ன கூறுகிறான் என்பதை பாருங்கள்...............

اَلَمْ يَعْلَمْ بِاَنَّ اللّٰهَ يَرٰى

**"திடனாக இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவர்கள் அறியவில்லையா?"**

இந்த வசனத்தை நாம் சற்று ஆழமாக கவனிப்போமாயின், ஒருவன் தனியாக நடக்கும்போதோ அல்லது தனது நண்பர்களோடு நடக்கும்போதோ, இத்தனை ஏன்? சகல நிலைகளிலும் இறைவன் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்னும் ஏகத்துவத்திற்குரிய விசுவாசம் அவனுடைய உள்ளத்தில் பூரணமாக இருக்குமாயின் தனது நண்பர்களுக்கு அஞ்சுபவன் சகல பிரபஞ்சத்திற்கும் அதிபதியான இறைவனுக்கு ஒருபோதும் அஞ்சாமல் இருக்கவே முடியாதென்பதை திண்ணமாகச் சொல்லலாம்.

மேலும் காமவெறி கொண்டு தவறான உறவைத்தேடி போய் கொண்டிருக்கும் ஒருவன், தான் செய்யப்போகும் காரியம் இறை கட்டளைக்கு முற்றிலும் மாற்றமானது என்பதை தெரிந்துதான் வைத்திருக்கிறான். அப்படி இருந்தும் முடிவில் அவன் அதை செய்துதான் முடிக்கிறான். இப்படிப்பட்டவனை ஒரு சந்தர்ப்பத்தில், அதிலும் குறிப்பாக ஒரு பெண்ணின் மீது அவன் மோகம்கொண்டு அவளை நெருங்கும்போது, அவனது நண்பர்களில் ஒருவன் அவனைக் கண்டு, நண்பா! இவளிடம் பல்வேறு வகையான தொற்று நோய்கள் இருக்கின்றன. சென்றவாரம் கூட ஒருவன் இவளோடு உறவு கொண்டதால் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கே அவனுடைய ஆண்குறி அறுத்தெடுக்கப்பட்டு இப்போது அவன் இறக்கும் தருவாயில் இருக்கிறானென்று சொன்னால் அப்போதே அவனுடைய மோகமெல்லாம் வடிந்து தேகம் நடுநடுங்க உள்ளம் பதற அவளைவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிவிடுவான் என்பதில் ஐயமில்லை.

இதுபோன்றே இன்னொரு சந்தர்ப்பத்தில் அவன் ஒருபெண்ணை அணுகி அவளோடு உறவுகொள்ள நெருங்கும்போது, அவளுடைய கணவன் அதை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது தெரியவந்தால் அப்போதும் அவனுடைய மோகமெல்லாம் தணிந்து தேகம் நடுநடுங்க ஓட்டம் பிடிப்பான் என்பதிலும் சந்தேகமில்லை.

மேற்கண்ட இரு சந்தர்ப்பங்களிலும் அவன் தவறான உறவை விட்டு விலகியதற்கு காரணம், அவனுடைய நண்பன் கூறியதில் அவனுக்கு ஏற்பட்ட நம்பிக்கையும், அப்பெண்ணுடைய கணவனை பற்றிய அச்சமுமே காரணமாகும். எனவே இறைவனால் தடை செய்யப்பட்ட காரியத்தை செய்தால் நாம் நாசமாகி நரகத்திற்கு உரியவனாகி விடுவோமென்னும் அச்சமும், அத்துடன் நமது ஒவ்வொரு அசைவையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்னும் முறாகபாவுடைய அறிவும்இ நாம் எங்கே இருந்தாலும் இறைவனை விட்டும் தனித்திருக்கவில்லை என்னும் மஃரிபாவுடைய விசுவாசமும் அவனுக்குள் இருந்தால் அவன் விபச்சாரத்திற்குரிய பாவத்திற்கு ஆளாகியே இருக்க மாட்டான் என்பது மட்டும் நிச்சயம்.

அதேநேரம் இப்படிப்பட்டோர் மேற்காணும் தீயநடத்தை உடையோராக இருக்கும் நிலையில் தொழுவோராகவும், நோன்பு நோற்போராகவும் இருந்தால் அந்த நோன்பை நோற்போராகவும் இருந்தால் அந்த நோன்பை நோற்றுள்ள நிலையில் தாகம் ஏற்பட்டால் யாருக்கும் தெரியாமல் சிறிது தண்ணீரை அருந்தி தமது தாகத்தை தீர்த்துக் கொள்ள சம்மதிப்பதில்லை. ஏன் அவ்வாறு செய்யக்கூடாதெனக் கேட்கப்பட்டால் அதற்கவன், இறைவன் நமது செயல்கள் அனைத்தையும்

பார்த்துக் கொண்டிருப்பதால் நாம் அவ்வாறு செய்யக் கூடாதென மஃரிபா பேசுகிறான். பாருங்கள்! இவன் செய்யும் நல்ல காரியங்களை மட்டும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றும் அதேநேரம் இவன் செய்யும் பாவத்தை மட்டும் இறைவன் பார்க்க வில்லை என்றும் விசுவாசம் கொண்டிருக்கிறான் போலும். இப்படிப்பட்டோர் தமது ஈமானுடைய கதியை தாமே நோட்டமிட்டு உணர வேண்டும். இதைப் பற்றி இறவன் தனது வேதத்தில்,...

وَهُوَ مَعَكُمْ اَيْنَمَا كُنْتُمْ

**"நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்"**

எனக் கூறியிருப்பதை உற்றுணர்ந்து தமது ஈமானைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதைக் குறித்து...............

اَلْاِيْمَانُ بَيْنَ الْخَوْفِ وَالرَّجَآءِ

**"ஈமான் (விசுவாசம்) அச்சத்திற்கும் ஆதரவுக்கும் மத்தியில் இருக்கிறது"** என்றும்...............

اِضْمَنُوْالِيْ سِتًّا مِنْ اَنْفُسِكُمْ اَضْمَنْ لَكُمُ الْجَنَّةَ اُصْدُقُوْا اِذَا حَدَّثْتُمْ وَاَوْفُوْا اِذَا وَعَدْتُّمْ وَاَدُّوْا مَا اُئْتُمِنْتُمْ وَاحْفَظُوْا فُرُوْجَكُمْ وَغُضُّوْا اَبْصَارَكُمْ وَكُفُّوْا اَيْدِيَكُمْ

**"நீங்கள் உங்களில் ஆறு விசயங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு சுவர்க்கத்தைக் குறித்து பொறுப்பேற்கிறேன்.** 1. **பேசினால் உண்மையை மட்டும் பேசுங்கள்.** 2. **வாக்கு கொடுத்தால் அதனை நிறைவேற்றுங்கள்** 3. **அமானிதத்தை பேணிக் கொள்ளுங்கள்.** 4. **உங்களின் வெட்கஸ்தலங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.** 5. **உங்களின் பார்வையை ஹராமானதை (விலக்கப்பட்டவற்றை)விட்டும் சுருக்கிக் கொள்ளுங்கள்** 6. **உங்களின் கைகளை (களவு, துன்புறுத்தல் போன்றவைகளை விட்டும்) விலக்கிக் கொள்ளுங்கள்"** என்றும் கூறியுள்ளனர். ஆதலால் மேற்காணும் விசயங்களை ஆய்ந்தறிந்து ஏகத்துவத்திற்குரிய அறிவைப் பெற்று ஈமானை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**நப்ஸின் இச்சைக்காக பிரார்த்தித்தல்**

இஸ்லாமியர்களாகிய நாம் நம்மீது கடமையாக்கப்பட்ட தொழுகைகளில் சிலவற்றை மட்டும் நிறைவேற்றி விட்டு மேலே நீலநிறமாகத் தோன்றும் வானமென்னும் வெட்டவெளியை நோக்கி இரு கைகளையும் ஏந்தி, சுவர்க்கத்திற்குப் போய் அங்கேயும் நம்மிடமுள்ள மிருகக் குணமாகிய

போகஇச்சை மற்றும் உண்ணும் இச்சையை அனுபவிக்க வேண்டுமென்னும் சிற்றின்பக் கருத்தையே உள்ளத்தில் வைத்துக் கொண்டு, இறைவா! எனக்கு சுவர்க்கத்தில் ஆயிரக்கணக்கான ஹூருல்ஈன் பெண்களையும், நல்ல உணவையும், பானங்களையும், உடைகளையும், மாளிகைகளையும் அருள்புரிவாயாக என்றும், இவ்வாறே நான் உலகிலிருந்த போது அனுபவித்த பொருட்களையெல்லாம் அங்கேயும் எனக்குத் தந்தருள்வாயாக என்றும் கேட்கிறோம்.

தன்னை ஆண் மகனென்று சொல்லிக் கொள்பவர் இவ்வாறு பிரார்த்தனை செய்வதுதான் சரியானதென்று கூறுவாராயின், இவ்வாறே ஒரு பெண்ணும் பிரார்த்தனை செய்யும்போது, தமக்கு அழகான கணவன்மார்கள் வேண்டுமெனக் கேட்பதையும் நியாயமென்றே கூறவேண்டிவரும். இப்படி ஒருபெண் பிரார்த்தனை செய்வது அவளுடைய கணவனுக்குத் தெரியவந்தால் அவன் அவள்மீது ஆத்திரமடைந்து, அடியே! வேசி! சுவர்க்கத்திற்குப் போய் மாப்பிள்ளை பிடிக்கவா பிரார்த்தனை செய்கிறாய். மிருகமே! இத்தகைய கேவலமான ஒன்றை கேட்பதற்குப் பெயர்தான் பிரார்த்தனையா? மூதேவியே! எனக்கு நீ மனைவியாக இருப்பதை இன்னும் நான் பொறுத்துக் கொண்டிருந்தால் பாவியாகி விடுவேன். இப்போதே உன்னை விவாகவிலக்குச் செய்வதற்காக காஜியிடம் போகிறேன் பார் என்று ஒரே பாய்ச்சலாகப் பாய்வான் என்பதில் சந்தேகமில்லை.

இனி இவ்வுலகில் ஒரு பெண்ணை மணக்க விரும்பும் ஒரு ஆணும், இவ்வாறே ஒரு ஆணை மணக்க விரும்பும் ஒரு பெண்ணும் இதனை தமது பெற்றோரிடம் கூட சொல்வதற்கு வெட்கப்படும் நிலையில், அதையே இறைவனிடம் கேட்பதென்பது ஆச்சரியமான ஒன்றுதான். மேலும் இப்படிப்பட்ட பிரார்த்தனைகளை கேட்பதற்குக் காரணம் என்னவெனில், இவைகளின் எதார்த்தத்தை உணராதிருப்பதேயாகும். இதனாலேயே அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்....

أَكْثَرُ أَهْلُ الْجَنَّةِ الْبُلْهُ

**“சுவர்க்கவாதிகளில் பெரும்பான்மையோர் மந்தபுத்தி உடையவராகவே இருக்கின்றனர்“** என்றும்.........

اَلْأَحْمَقُ مَنِ اتَّبَعَ نَفْسَهُ هَوَاهَا وَتَمَنَّى عَلَى اللهِ.

**“யார் தமது நப்ஸின் இச்சையை பின்பற்றி இறைவன் மீது ஆதரவு வைக்கிறாரோ அவர் மாபெரும் மடையராகும்“** என்றும் குறிப்பிடுகின்றனர்.

மேலும் நல்லறிவுடையோர் இதில் கவனிக்க வேண்டிய விசயம் யாதெனில், உணவு, குடிப்பு, உடை, போகம் போன்ற இவையனைத்தும் தேகத்திற்கு உரியவையாகும். இதில் தேகம் என்பது இறப்பின் மூலம் நம்மை விட்டும் பிரிந்து மண்ணில் புதைக்கப்பட்டு அதன்பின் மண், தண்ணீர்,

காற்று, நெருப்பு என்னும் பௌதீகங்களாக திரும்பி விடுமாதலால், அப்போது மேற்காணும் சுகங்களையெல்லாம் தேகம் அனுபவிப்பதற்கு வழியில்லாது போய்விடும். இதையறியாது மனோ இச்சையை பின்பற்றி இறைவனிடம் ஆதரவு வைப்பதால் தான் இத்தகையோரை மாபெரும் மடையரென்று நபிமொழியில் கூறப்பட்டது.

இவ்வாறே நம்மில் பெரும்பாலேர் இறந்து தமது தேகத்தை இழந்து அர்வாஹாக மாறிப் போனவருடைய பெயரால் பாத்திஹா ஓதி அவர் உலகிலிருந்த போது எந்தெந்த பொருட்களின் மீது பிரியம் வைத்திருந்தாரோ அவற்றையெல்லாம் அவருக்கு அனுப்பி அனுபவிக்கச் செய்வதாக எண்ணிக் கொண்டு உணவுஇ பானம் போன்றவற்றை தயாரித்து தங்களின் இச்சைக்கே தாம் விருந்தளித்:துக் கொள்ளும் விநோதத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேநேரம் வாசலில் நின்று பசிப்பிணியால் கதறும் ஏழைகளை விரட்டியடிப்பது விந்தைதான்.

**ஐம்புலனை அடக்குதல்**

இதயத்தின் உள்வாசல் திறப்பதற்கு ஐம்புலன் என்னும் உணர்வுகளின் தாக்கத்தை விட்டும் நீங்குதல் மிகவும் அவசியமாகும். உள்ளத்தில் தோன்றும் பல்வேறு வகையான எண்ணங்களை விட்டும் உள்ளத்தை ஒருமுகப்படுத்துதல் என்பது அத்தனை லேசான காரியமல்ல. இது மிகப்பெரும் பிரயாசையை கொண்டு மட்டுமே வாய்க்கிறது. அத்துடன் இதில் ஏற்படும் சிரமத்தை கருதி இதை விட்டு விடுவதற்கும் வழியில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட தகுதியை பெறுவதில்தான் ஒருவனுடைய ஈடேற்றத்திற்குரிய பாதையே அமைந்துள்ளது. இந்த நிலையினை பெறுவதற்காகத்தான் ஞானவான்களாகிய மகான்களெல்லாம் கணக்கில்லாத கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தனர். இவ்விசயத்தில் நமது கண்ணின் மணியான குத்பு நாயகம் குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் செய்யித் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது பிள்ளைகளுக்கு செய்துள்ள உபதேசம் யாதெனில்...

ஞானவான்களுக்கு என எட்டுவகை குணங்கள் உள்ளன. அவை, 1. நன்கொடை கொடுத்தல் 2. கழா கத்ரை (விதியை) ஏற்றுக் கொள்ளல் 3. எந்தநோய் வந்தாலும் அதை பொறுமையோடு சகித்துக் கொள்ளல் 4. எப்படிப்பட்ட கஷ்டத்திலும் பொறுமையை கைவிடாதிருத்தல் 5. பரதேசியாக இருத்தல் 6. கம்பளி உடுத்துதல் 7. முகம் நோக்கியவாறு செல்லுதல் 8. வறுமையை அதிகமாக அனுபவித்தல் போன்றவைகளாகும். ஆதலால் நீங்களும் இதேபோல நடந்து கொள்ளுங்களென்று கூறினர்.

எனவே இறைவனுடைய திருச்சந்திப்பை விரும்புவோர் தமது வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட விஷயங்கள் ஏதேனும் நிகழுமாயின் அவற்றை பொறுமையோடு அனுபவிக்க வேண்டும். காரணம், உலக இன்பங்களை அனுபவிப்பதற்குக் கூட நாம் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

அதாவது, பொருளீட்டுவதற்காக தனது குடும்பத்தையும் சொந்தபந்தங்களையும் ஏன்! தன் பிறந்த மண்ணை கூட பிரிந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் சென்று சிலர் வர்த்தகம் செய்தும், சிலர் மூட்டை சுமந்தும், சிலர் வண்டியிழுத்தும் பொருளீட்டுகின்றனர்.

அவ்வாறு தேடியதில் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் கிடைத்தால் அதில் ஒரு ரூபாயை மட்டும் தனது உணவு மற்றும் இதர தேவைகளுக்காக போதுமாக்கிக் கொண்டு மீதமுள்ள ஒரு ரூபாயை பத்திரப்படுத்தி வருகின்றனர்.

அவ்வாறின்றி கிடைத்த இரண்டு ரூபாயையும் செலவு செய்து உலக சுகத்தை அனுபவிக்காமல் ஒரு ரூபாயில் மட்டும் தனது தேவைகளை சிரமத்தோடு முடித்துக் கொள்வதற்கு காரணம், ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்த்து வைத்தால் பின்னர் தனது சொந்த ஊருக்கு செல்லும்போது அங்கே மற்றவர்களின் தயவை எதிர்பார்க்காமல் தனது குடும்பத்தோடு நிம்மதியாக வாழலாமே என்னும் எண்ணமேயாகும்.

காரியம் அவ்வாறு நடைபெற்றாலும் கூட சில நாட்களுக்குள் சேர்த்து வைத்த அத்தொகை முழுவதும் தீர்ந்து போய் விடுகிறது. இதில் பயணம் சென்று பொருளீட்டாதவர்களும் அல்லது பொருளீட்டியும் அதை சேர்த்து வைக்காது செலவழித்து விட்டவர்களும் மீண்டும் தமது சொந்த நாட்டுக்குச் செல்ல வேண்டுமென நினைக்கும் போது பணமில்லாது கடன் வாங்கிக் கொண்டு போய் சேருவதையும், அவ்வாறு போய் சேர்ந்தாலும் அங்கே உணவுக்குக் கூட வழியில்லாது கஷ்டப்படுவதும்இ செல்வந்தர்களை கண்டால் அவர்களிடம் உதவி தேடுவதும் அவ்வப்போது நடந்து கொண்டுதானிருக்கிறது. ஆதலால் முக்தி என்னும் சாதனமானது என்றுமே அழியாத நித்தியமான ஒன்றாக இருப்பதால் அதை பெறுவதற்கும நாம் கண்டிப்பாக கஷ்டப்பட்டுதானாக வேண்டும். இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.....

**ஓடியலைந்துமிவ் வையக முற்றும் உழன்றுழன்றுந்**

**தேடி யெடுத்த திரவியம் யாவையும் செத்தபின்பு**

**நாடி யெடுப்பது முண்டோ மறந்து நடக்கு நெஞ்சே**

**வாடி யிருந்தறஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே!**

என்றும்…...

**உற்றாரிருந் தென்ன பெற்றா ரிருந்தென் னுனக்குதவி**

**சற்றா யினுமிலை சொன்னேன் சொன்னேனிது சத்தியமாய்**

**செத்தாலும் வைத்தடி வாங்காம னிற்கிற் ஜெயம் பெறலாங்**

**கற்றார் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே!**

என்றும் கூறியுள்ளனர். எனவே மனிதன் உலக சம்பந்தமான இச்சைகளை விட்டும் நீங்கி மறுமையின் பாக்கியத்தை தேட முயற்சி செய்ய வேண்டும். இன்னும்.....

رَبُّ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ لَآ اِلٰهَ اِلَّا هُوَ فَاتَّخِذْهُ وَكِيْلًا

**"கிழக்கு மேற்கின் இரட்சகனாகிய அவனையன்றி வேறு நாயன் இல்லையாதலால் அவனையே வக்கீலாக பிடித்துக் கொள்வீராக"**

என்பதாக இறைவனும் தனது வேதத்தில் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இந்த வசனம் "**முஜாஹததா**" என்னும் முயற்சியை குறித்த வசனமாக இருப்பதால் ஒவ்வொருவரும் தமது ஐம்புலனை கொண்டு கிடைக்கும் சுகத்தை விட மறுமையின் இன்பத்தை பெற முயற்சிக்க வேண்டும். இதில் யார் அப்பாதையில் ஈடுபட்டு பூரணமடைகிறாரோ அவர்களைத்தான் "**வலி**" என்றும் "**குத்பு**" என்றும் அவர்களில் வெளிப்படும் நிலைகளை கராமத் (அற்புதம்) என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் நாம் வலிமார்களின் விலாயத்தின் மீதும், அவர்களில் வெளிப்படும் கராமத்துகளின் மீதும் விசுவாசம் கொள்வதும் அவசியமாகும்.

**உலகப் பற்றை நீக்கி உணவில் நம்பிக்கை வைத்தல்**

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

**"உங்களுக்குப் பிரியமானதை செலவழிக்காத வரை நீங்கள் முக்தியை பெற மாட்டீர்கள்"** என்றும்...........

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ وَتَبَتَّلْ اِلَيْهِ تَبْتِيْلًا

**"நீ உனது ரட்சகனுடைய திருநாமத்தையே நினைப்பாயாக. மேலும் சர்வத்தையும் விட்டொழித்து அவன் பக்கம் வருவாயாக"** என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். விசயம் இவ்வாறிருக்க நம்மில் பெரும்பாலோர் இதனை ஆய்ந்தறியாது தமது மனோ இச்சைகளுக்கே அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். அது மட்டுமின்றி நமது இறப்புக்குப்பின் நம்முடைய சந்ததிகள் உண்பதற்கு உணவுகூட இல்லாமல் மற்றவர்களிடம் கையேந்தும் நிலைக்கு ஆளாகிவிடுவார்களோ என்றெண்ணி அவர்களுக்காக இரவுபகல் பாராது பணத்தை தேடி வைப்பதிலேயே சதா உழன்று கொண்டு இருக்கிறோம். இதை சற்று ஆழமாகக் கவனிப்போனமாயின் இது நமது மதியீனமாக இருப்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஏனெனில்.............

وَمَا مِنْ دَآبَّةٍ فِى الْاَرْضِ اِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا

**“ஊர்ந்து திரியும் பிராணிகளில் உலகில் ஒன்றுமேயில்லை. அதனுடைய ஆகாரம் இறைவனிடமிருந்தே ஒழிய.“**

என்பதாக இறைவன் கூறுகிறான். இவ்விசயத்தில் மிருக வர்க்கங்கள், பறவை இனம், ஊர்வன போன்றவைகளுக்குள்ள நம்பிக்கை கூட நம்மில் பெரும்பாலோருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

எவ்வாறெனில், அவை குட்டிகளையும், குஞ்சுகளையும் ஈன்று அதன்பின் தாமே சுயமாக தமது விரோதிகளின் தீங்கிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், இரைதேடவும் பக்குவம் பெறும்வரை அவைகளின் தாய் அவற்றை பாதுகாத்து வருகின்றன. உதாரணமாக கோழி பட்சி இனங்களில் ஒன்றாகும். அது தனது குஞ்சுகள் சிசுவாக இருக்கும்வரை அவைகளுக்கு உணவைத் தேடிக் கொடுக்கிறது. இந்நிலையில் பருந்து, கீரி, பூனை போன்றவைகள் அக்குஞ்சுகளை துன்புறுத்த முயன்றால் உடனே அவைகள் மீது ஆவேசம் கொண்டு பாய்ந்து சண்டையிட்டு தனது குஞ்சுகளை தன்னுடைய சிறகுக்குள் பொத்திப் பாதுகாக்கிறது.

அதன்பின் சிறிது காலம்கழித்து அக்குஞ்சுகள் வளர்ந்து பெரிதாகி தமது விரோதிகளிடமிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், சுயமாக தம்முடைய இரையைத் தேடிக் கொள்வதற்குமுரிய பக்குவத்தை அடைந்து விட்டால் தாய்ப்பறவை அக்குஞ்சுகளை தன்னருகே வரவிடாமல் தானே அவைகளை துரத்தி அடித்துவிட்டு தனது சொந்த காரியத்திற்குரிய முயற்சியில் அது ஈடுபட்டு விடுகிறது.

இதுபோன்றே மற்ற பட்சி இனங்களையும், மிருக வர்க்கங்களையும், ஊர்ந்து திரியும் பிராணிகளையும் நாம் நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் விஷயம் இவ்வாறே இருப்பதை தெரிந்து கொள்ளலாம். ஆக இவையனைத்தும் மேற்கண்ட இறைவசன்தின் மீது இத்தனை நம்பிக்கையோடு இருக்க, எந்த இனத்திற்காக வேதம் என்ற ஒன்று இறக்கியருளப்பட்டதோ அந்த இனத்தை சார்ந்த மனிதன் மட்டும் தனது சந்ததிகள் தனக்குப் பின்னால் கஷ்டப்படுவார்களே என்றெண்ணி தனது மகன் மகள் மட்டுமின்றி அவர்களின் சந்ததிகளையம் தனது தோளில் தூக்கிச் சுமந்து கொண்டு அவர்களுக்காக பொருள்தேடி வைப்பதில் தனது வாழ்நாள் முழுவதையும் வீணாக்கி விட்டு பின்னர் திடீரென்று ஒருநாள் மரணம்வந்து அவனை பிடிக்கும்போது அதிலிருந்து தப்பிக்க வழி தெரியாமல் பரக்கப் பரக்க விழித்து விழிபிதுங்கி முடிவில் பாவியாகவே இறந்து போகிறான். இதனாலேயே ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**பெண்டு பிள்ளை யென்றே பிதற்றுதல்பொய் யல்லாமற்**

**கண்டபல னொன்று மில்லை கண்ணே ரஹ்மானே!**

எனக் கூறுகின்றனர். மேலும்..........

اَحْبِبْ مَا اَحْبَبْتَ فَاِنَّكَ مُفَارِقُهُ

**“நீ எதை விரும்புகிறாயோ விரும்பிக் கொள். ஆனால் அதை விட்டும் கண்டிப்பாக நீ பிரிந்து விடுபவனாக இருக்கிறாய்“**

என்பதாக ஏந்தல்நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகையால் மேற்கண்டவாறு இறப்பின் இறுதி நேரத்தில் இவன் தனது நிலம், புலம், பொன், வெள்ளி, மனைவி ,மக்கள், சொந்தம், பந்தம் போன்ற அனைத்தையும் விட்டு தனித்துப் போகிறான். இருந்த போதிலும் அத்தருணத்தில் கூட இவனும் இவனுடைய குடும்பத்தாரும் இறைவனை விட்டும் பிரிந்து விடவில்லை. இதைத்தான் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**மண்ணு முயிர்க்கு மறலி வரும் பொழுதில்**

**உனையன்றி யார்தா முளரோ நிராமயமே!**

எனக் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அடுத்து உணவுடைய விஷயத்தில் சந்தேகம் கொள்வதைக் குறித்து....

مَنْ شَكَّ فِي الرِّزْقِ فَقَدْ شَكَّ فِي التَّوْحِيدِ وَمَنْ شَكَّ فِي التَّوْحِيدِ فَقَدْ كَفَرَ بِاللهِ

**“உணவில் சந்தேகப்பட்டவன் ஏகத்துவத்தில் சந்தேகம் கொண்டான். இனி ஏகத்துவத்தில் சந்தேகம் கொண்டவன் சந்தேகமின்றி இறைவனைக் கொண்டு இறை மறுப்பாளனாகி விட்டான்“** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

மேலும் உணவளிக்கும் விஷயத்தில் மேற்காணும் வேதவாக்குப்படி தான் இப்போதும் நடைபெற்றுக் கொண்டுள்ளது என்னும் நம்பிக்கை உள்ளத்தில் நிலைப்படுவதற்குரிய ஓர் ஆதாரம் என்னவெனில், இப்பூமியில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் அதனுடைய தாயைக் கொண்டு பாலூட்டப்படுவதற்கு முன் மலம் கழிப்பதை நாம் பார்க்கலாம். இதனை கட்டுமலம் எனக் கூறுவர். உணவு ஏதும் உட்கொள்ளாது மலம் உற்பத்தியாக வழியில்லையாதலர் அக்குழந்தை தாயின் வயிற்றிலிருக்கும்போதே அங்கே வைத்து அதற்கு உணவு தரப்பட்டுள்ளது என்பதற்கு இதுவே ஆதாரமாகும். இதைப்பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**கெர்ப்பத்தி லெனைக் கிடத்திய முதூட்டுமுனக்**

**கொப்புவமை யாதென் றுரைப்பே நிராமயமே!**

எனக் கூறுகின்றனர். இதேபோல அத்திப்பழத்தை பிளந்து பார்த்தால் அதற்குள் நூற்றுக்கணக்கான புழுக்கள் இருப்பதையும், மாம்பழத்தை பிளந்தால் அதற்குள் வண்டு இருப்பதையும், கல்லுக்குள் தேரை வாழ்ந்து வருவதையும் நம்மில் பெரும்பாலோர் பார்த்திருக்கலாம். இதைப் பற்றியும் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,....

**எல்லார்க் கமுதளிக்கு மியல்புபோல் தேரைகட்கும்**

**கல்லுள் ளமுதளிக்கும் கண்ணே ரஹ்மானே!**

எனக் கூறுகின்றனர்.

ஆக இப்படிப்பட்ட நிலைகளிலெல்லாம் கருணையோடு உணவளித்து காப்பாற்றிய இறைவன் நமக்கு எல்லா நிலைகளிலும் உணவை தந்தே தீருவான் என்னும் நம்பிக்கை மட்டும் இருக்குமாயின் நமதுசந்ததிகளுக்காக நாம் பொருளீட்ட வேண்டுமென்னம் விபரீத எண்ணம் நமக்கு ஏற்பட்டிருக்காது.

மேலும் இறைவன் நம்மீது புரிந்துள்ள அருட்கொடைகள் பற்றி நாம் யோசித்தப் பார்ப்போமாயின் சதா அவனுக்கு நன்றி செலுத்தி அவனது கட்டளைக்கு வழிப்பட்டு நடப்போராகவே நாம் இருந்திருப்போம். எவ்வாறெனில், ஒருவனது வறுமையின் போது ஒரு செல்வந்தன் சில பொருட்களை அவனுக்கு கடனாகவோ அல்லது இனாமாகவோ தந்தால் அவன் தனது இறப்புவரை அவனுக்கு நன்றி செலுத்தவோனாகவும், அவனுடைய நோக்கங்களுக்கு எல்லாம் இசைந்து நடப்போனாகவும் இருப்பான். இவ்வாறு அவன் அவனுக்கு நன்றி செலுத்துவதற்குக் காரணம், அச்செல்வந்தன் அவனுக்கு செய்த உதவியை அவன் தீர்க்கமாக தெரிந்து கொண்டிருப்பதே.

இப்படியெல்லாம் நன்றி செலுத்தும் ஒருவன், இறைவன் தனக்குச் செய்துள்ள எண்ணிலடங்கா உதவிகளுக்கு மட்டும் நன்றி செலுத்தாது அவனது கட்டளைக்கு வழிப்பட்டு நடக்காது இருப்பதற்குக் காரணம், இறைவன் தனக்கு உதவி செய்கிறான் என்பதை வெறுமனே நாவால் மட்டும் சொல்பவனாக – அதே நேரம் உள்ளத்தால் அதனை ஆராய்ந்து உணராதிருப்பதேயாகும்.

மேலும் ஒருவனுடைய விரல் ஒன்றை வெட்டியெடுத்து விட்டு அதற்குப் பதிலாக அதைப் போன்ற ஒரு விரலை செய்து பொருத்துவதற்கு இப்பூமியிலுள்ள அறிவாளிகளெல்லாம் ஒன்றுகூடி யோசித்து அதற்காக கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்தாலும் இயலாதென்பது நமது அறிவுக்கு மறைந்ததல்ல. பின்னும் ஒருவனுடைய விரலை மட்டுமல்ல. ஒரு கொசுவின் இறக்கையை, ஒரு அருகம்புல்லின் நரம்பை கூட இப்பூமியிலுள்ள எவராலும் உருவாக்க முடியாது.

விஷயம் இவ்வாறிருக்க மனிதனுடைய தேக அமைப்பிலும், புலன்களிலும், தத்துவத்திலும், அறிவின் நுட்பத்திலும் எத்தனையோ வகையான விபரிக்க முடியாத பேருதவிகளெயெல்லாம்

இறைவனை கொண்டு நாம் பெற்றுள்ளோம் என்பதை ஒரு சில அறிவாளர்களை தவிர மற்றவர்கள் ஆய்ந்தறியாது இரவுபகலாக உலக சுகத்திலேயே மூழ்கி கிடப்பதற்குக் காரணம், தான் இவ்வுலகுக்கு வந்த நோக்கம் இதுதான் என்பதை இதுவரை தெரிந்து கொள்ளாதிருப்பதேயாகும்.

எனவே இக்குறையை அகற்றுவதற்கு மஃரிபாவுடைய அறிவைப் பெறுவதே இதற்குச் சரியான வழியாகும். ஏனெனில் அவ்வாறு அறிந்து கொண்டால் நமது செயல்பாடுகள் அனைத்தையும் இறைவன் திரையின்றி பார்த்துக் கொண்டிருக்கிறான் என்னும் ஈமான் நமக்கு ஏற்பட்டு விடுமாதலால்இ அத்துடன் மனிதன் தவறான வழியில் செல்லவும் அதுவே தடையாகவும் ஆகிவிடும். மேலும் எவரேனும் இவ்வாறு அறியாமல் வெறுமனே வாய்ஜாலம் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் இறுதியில் அவருடைய காரியமனைத்தும் நாய்பட்ட பாடாகவே முடியும். இதைத்தான் கீழக்கரை கல்வத்து நாயகம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**ஞானமும் கல்வியும் நாழியரிசிக்குள்ளே**

**நாழி யரிசியை நாய்கொண்டு போய்விட்டால்**

**ஞானமுங் கல்வியும் நாய்பட்ட பாடே!**

எனக் கூறுகின்றனர்.

மேலும் பொருள்தேடி புதைத்து வைத்துச் சாவோரின் சந்ததிகளில் அநேகர்இ பிற்காலத்தில் வறுமைக்கு ஆளாகி நிற்பதையும், இவ்வாறே வறுமை நிலையில் இறந்தோரது சந்ததிகளில் அநேகர் பிற்காலத்தில் செல்வந்தர்களாக செல்வச் செழிப்போடு வாழ்ந்து வருவதையும் நம்மில் பெரும்பாலோர் பார்த்தும்கேட்டும் இருக்கலாம். ஆகையால் உணவுடைய விஷயத்தில் நம்பிக்கையற்று தமது சந்ததிகளுக்காக பொருள் தேடி வைக்கும் கொள்கையை விட்டுவிட்டு ஜீவனாம்சத்திற்குத் தேவையான அளவு மட்டும் பொருளை தேடுவரை போதுமாக்கிக் கொண்டு மற்ற நேரங்களில் முக்தியடைவதற்குரிய வழியில் முயற்சி செய்வதே அறிவார்த்தமான செயலாகும்.

**ஜீவனாம்சத்திற்கு போதிய அளவு பொருளை தேடுதல்**

قُلْ اِنْ كَانَ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ وَاِخْوَانُكُمْ وَاَزْوَاجُكُمْ وَعَشِيْرَتُكُمْ وَاَمْوَالُ نِ اقْتَرَفْتُمُوْهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا

وَمَسٰكِنُ تَرْضَوْنَهَاۤ اَحَبَّ اِلَيْكُمْ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَجِهَادٍ فِيْ سَبِيْلِهٖ فَتَرَبَّصُوْا حَتّٰى يَاْتِىَ اللّٰهُ بِاَمْرِهٖ

**“நீங்கள் இறைவனை விட, அவனது ரஸூலை விட, அவனது மார்க்கத்திற்காக போரிடுவதை விட, உங்களது தந்தையரையும், மைந்தர்களையும், வர்த்தகத்திற்குரிய முதலீடுகளையம், பந்துக்களையும் மற்றும் உங்களுக்கு உரியவைகளாக**

**இருப்பவைகளையும் அதிகமதிகம் நேசிப்போராக நீங்கள் இருப்பீர்களாயின் கொஞ்சம் பொறுங்கள். இறைவனுடைய வேதனை வரும். அதை நீங்கள் பார்ப்பீர்கள்“** என்றும்……..

قُتِلَ الْاِنْسَانُ مَا اَكْفَرَهُ مِنْ اَيِّ شَيْءٍ خَلَقَهُ مِنْ نُطْفَةٍ خَلَقَهُ فَقَدَّرَهُ ثُمَّ السَّبِيْلَ يَسَّرَهُ ثُمَّ اَمَاتَهُ فَاَقْبَرَهُ ثُمَّ اِذَا شَآءَ اَنْشَرَهُ

**“மனிதனை சாபமிடப்பட்டது. அவனை எது நன்றி மறக்கச் செய்தது? எதைக் கொண்டு அவனைப் படைத்தான்? விந்தின் மூலம் அவனை படைத்தான். பின்னர் அவனுக்கு (ஒரு கால) அளவை திட்டப்படுத்தினான். அதன்பின் அவன் வெளியாகும் வழியை அவனுக்கு எளிதாக ஆக்கினான். பின்னர் அவனை மரணிக்கச் செய்து அதன்பின் அவனை மண்ணறைக்குள் நுழைத்தான். அதன்பின் அவன் நாடும் போது அவனுக்கு உயிர் கொடுத்து எழுப்புவான்“**

என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இதில் பெரும்பாலோர் இவ்வேத வாக்கியத்தை ஆய்ந்தறிந்து நல்லறிவைப் பெறாமல் தமது தேகத்தை கொழுக்க வைப்பதிலும், கௌரவப் பட்டங்களை பெறுவதிலும் தான் முயன்று வருகின்றனர். இப்படிப்பட்டோர் இறுதியில் கண்டபலன் இதுதான் என்பதை இவருக்கு முன்னால் இறந்து போனோர் தெளிவாகக் கண்டு கொண்டனர்.

மேலும் நாம் பிறந்தது முதல் இதுவரை சாப்பிட்ட உணவு முழுவதையும் ஒன்றாக சேர்த்துப் பார்த்தால் அது ஒரு சிறு மலையைப் போலும், அருந்திய நீர் முழுவதையும் சேர்த்துப் பார்த்தால் அது ஒரு சிறு குளத்தைப் போலவும் இருக்கும். அப்படி இருந்தும் நம்முடைய ஒருஜான் வயிறு இன்னமும் நிறைந்த பாடில்லை. இப்போதும் கூட அது கொதித்துக் கொண்டுதானிருக்கிறது.

இன்னும் அவ்வுணவு மற்றும் குடிப்புக்களை கொண்டும், உடைகளைக் கொண்டும், வேடிக்கை வினோதங்களை கொண்டும் சம்போகத்தை கொண்டும் இதுவரை நாம் அனுபவித்து வந்த சுகங்கள் எல்லாம் இப்போது ஒன்றுமில்லாமலாகி விட்டன. அதேநேரம் அதனால் ஏற்பட்ட பலன்கள் மட்டும் இப்போதும் நமக்குள் ஒளிந்து கொண்டு நம்மை சாய்ப்பதற்குரிய தருணத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டுள்ளன.

மேலும் கொஞ்சம் ஆழமாக சிந்தித்துப் பார்ப்போமாயின் உலக சம்பந்தமான காரியங்களில் நமக்குத் தேவையான மூன்று விஷயங்களை தவிர வேறு எதுவுமே நமக்குச் சொந்தமில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். 1. சரியான அறிவு 2. தேக ஆரோக்கியம் 3. பிறரை எதிர்பாராத நிலை.

இம்மூன்று நிலைகளும் ஒருவருக்கு சரியாக அமைந்திருந்தால் அவர் வேறு எந்தத் தொல்லைகளுக்கும் ஆட்படாது தான் மனிதனாக பிறந்த நோக்கம் இதுதான் என்பதை

ஆய்ந்தறிந்து அதில் பூரணமடைவதற்குரிய வழியை தெடி முயன்று வருவார். அத்துடன் தனது ஜீவனாம்சத்திற்குரிய பொருளை தேட வேண்டிய நிலையிலிருப்போர் மார்க்கத்தின் வரம்பை கடக்காது அனுமதிக்கப்பட்ட முறையில் தமது தகுதிக்குத் தக்கவாறு பொருளை தேடவேண்டும். அவ்வாறு தேடுவதை மார்க்கம் தடை செய்யவில்லை. அதற்கு மாறாக வறுமை மிகைக்குமாயின் அது மனநிம்மதியை கொடுத்து வணக்கத்திலுள்ள உற்சாகத்தை சீர்குலைக்க அதுவே காரணமாகிவிடும். இதனாலேயே....

**தாங்கொனா வறுமை வந்தால் சபைதனிற் செல்ல நாணும்**

**வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர்க் காண நாணும்**

**பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லரோ டினங்கச் செய்யும்**

**ஓங்கிய அறிவுங் குன்றும் உலகெலாம் பழிக்குந்தானே!**

என்றொரு கவிஞர் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும் இத்தகைய தேடலில் இறைவனை மறக்காதிருப்பதே நல்லடியார்களின் லட்சணமாகும். இதனாலேயே இறைவன் வேதத்தில்....

يُسَبِّحُ لَهُ بِالْغُدُوِّ وَالْآصَالِ رِجَالٌ لَّا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللهِ

**"ஆண்கள் தமது இல்லங்களில் இறைவனை காலையிலும்இ மாலையிலும் துதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் எனில், அவர்களுடைய கொடுக்கலும், வாங்கலும் அவர்களை இறைவனுடைய நினைவை விட்டு (இதர விஷயங்களில்) திசை திருப்பி விடாதே அப்படிப்பட்டவர்கள்"** என்பதாகக் கூறுகிறான். மேலும் மனிதனென்னும் பண்பில் ஆண்டியும் சரி. அரசனும் சரி. இருவருமே சமமாகத்தான் இருக்கின்றனர். ஆனால் தகுதியுடைய விஷயத்தில் மட்டும்தான் இருவருக்குமிடையே வித்தியாசம் காணப்படுகிறது. உதாரணமாக அரசனுக்கு ஒருநாளைக்கு ஆயிரம் ரூபாய் தேவையெனில், ஆண்டிக்கு பத்து ரூபாய் இருந்தால்போதும். இவ்வித்தியாசப்படி அவரவர் தத்தம் தமக்குரிய பொருளை தேடுவதில் முயற்சி செய்வார்களாயின் அதைப் பற்றி யாரும் குறைகூற வழியில்லை.

அதற்கு மாற்றமாக அரசர்களும் அரசப் பிரதானிகளும் தமக்குரிய வரம்பை கடந்ததாலேயே யுத்தங்கள் போன்றவை மூளலாயின. இதேபோல பிரஜைகளும் தமக்குரிய வரம்பை கடந்ததால் வம்புகளும், வழக்குகளும் உற்பத்தியாயின. இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் முகம் கொடுத்ததாலேயே தீய குணங்கள் நீங்க வழியில்லாது போயிற்று. இந்நிலையில் ஒவ்வொருவரும் அவரவர் மனசாட்சிக்கு விரோதமின்றி நடந்து வந்தால் அவர்களின் இம்மை மறுமைக்குரிய காரியங்கள் அனைத்தும் புகழுக்குரியவைகளாகி எந்த கோர்ட்டுக்கும், போலீஸுக்கும், துப்பாக்கி, பீரங்கி போன்ற ஆயுதங்களுக்கும் வேலையில்லாது போய்விடும்.

**வரம்பை மீறி உலகை தேடுதல்**

اَلْهٰكُمُ التَّكَاثُرُ حَتّٰى زُرْتُمُ الْمَقَابِرَ

**“நீங்கள் மண்ணறையை சந்திக்கும் வரை (உலகப் பொருட்களை தேடுவதில்) அதிகமான முயற்சியை மேற்கொள்வதானது இறைவனுக்கு வழிப்படுவதை விட்டும் உங்களை பாழாக்கி விட்டது“** என்பதாக இறைவன் அவனது வேதத்தில் குறிப்பிடுகிறான். பார்த்துப் பார்த்துப் பக்குவமாய் வளர்த்து பின்னர் வசமென்றுபெயர்வாங்கி மண்ணிலே கொண்டுபோய் புதைக்கப்பட்ட சரீரத்தை சில நாட்களுக்குப் பின் தோண்டிப் பார்த்தால் அந்த உடல் முழுவதும் சிதைந்து சகிக்கமுடியாத அளவுக்கு நாற்றமெடுத்து புழு பூச்சிகளுக்கு இரையாகிப் போயிருப்பதை பார்க்கலாம். உலக சுகபோகங்களில் அரசன் முதல் ஆண்டிவரை கண்டுகொண்ட பலன் இதுதான் என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்......

**கோத்திர ளாக்கையான பொய்க்கூடு – ஒருவருக்குஞ்**

**சாற்றுக்காகா நாற்றக் கருவாடு சொறி மலமும்**

**மூத்திரமும் ஊற்றி வைத்த ஓடு இடுமடையர்**

**போற்றுதற் கேற்ற சண்டிமாடு**

எனக் கூறுகின்றனர். இக்கவிதையில் கூறப்பட்டுள்ளவாறு மனித தேகமானது சமைத்து உண்ணக்கூடிய கருவாட்டை விடக் கேவலமாக உள்ளது. உதாரணமாக ஒருமீனை கடைவீதிக்கு எடுத்துக் கொண்டு போய் விற்க முயன்று முடியாமல் போய்விட்டால் அம்மீனை பின்னர் சூரிய வெப்பத்தில் காயவைத்து அதன்பின் விற்று விடலாம்.

இதுபோன்றே மனிதன் இறந்தால் அவன் எப்படிப்பட்ட அரசனாக இருந்தாலும் அவனுடைய தேகத்தை ஒரு பைசாவுக்குக் கூட வாங்க யாருமின்றி முடிவில் மண்ணில் கொண்டு போய் தான் புதைக்கப் பார்க்கின்றனர். இதை கவனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு தமக்குரிய அஸலைத் தேடுவதில் முயலுவார்களாயின் அதுவே அவர்களின் மன அமைதிக்குப் போதுமானதாக இருக்கும். அவ்வாறின்றி செத்துப்போன அந்த தேகத்தை விற்க முடியுமாயின் ஒருவனுடைய சொத்தை பங்கு போட்டுக் கொண்ட அவனுடைய பாகஸ்தர்கள் அவனையும் பங்கு போட்டு விற்காமல் விட்டிருக்க மாட்டார்கள்.

எனவே இந்த இடத்தில் நம்மைப்போன்ற பாமரர்களின் தேகமானது கறி சமைக்கக் கூடிய கருவாட்டை விடக் கேவலமானதாகவே இருக்கிறது. இதைப் பற்றி அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்....

دَعُوا الدُّنْيَا لِاَهْلِهَا مَنْ اَخَذَ فَوْقَ مَا يَكْفِيْهِ اَخَذَ حَتْفَهُ وَهُوَ لَا يَشْعُرُ

**“உலகத்தை அதை உடையவர்களிடம் விட்டு விடுங்கள். தனக்குப் போதுமானதற்கு மேல் முயன்றவன் தன்னையறியாமலே தன்னை பாழாக்கிக் கொண்டான்.“**

எனக் கூறுகின்றனர். இந்த நபிமொழியின் கருத்து, உலகை அளவுக்கதிகமாக தேடி இறுதியில் ஏமாற்றமடைகிற காரியத்தை அதற்குரிய வழிகேடர்களிடம் விட்டு விடுங்கள். இதில் யார் தமது குடும்பப் பரிபாலனத்திற்குத் தேவையான அளவுக்குரிய பொருளுள்ளவராக இருந்து அதைக் கொண்டு நிம்மதியடைந்து, தான் மனிதனாக பிறந்த நோக்கம் இதுதான் என்பதை உணர்ந்து மறுமையின் பாக்கியத்தை தேடி பெற்றுக் கொள்ள முயலாது தான் பெயரி செல்வந்தன் என ஜனங்களால் பேசப்படும் பிரயோஜனமற்ற வார்த்தையை கேட்டு சந்தோஷமடைவதற்காக மேலும் மேலும் பொருளை தேடுவானாயின் அவன், தான் என்ன நிலையிலிருக்கிறோம் என்பதை நோட்டமிட்டு உணராமல் தன்னை நரகத்திற்குரியவனாக ஆக்கிக் கொள்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும் ஒருவன் பொருட்செல்வமும், ஜனங்களுக்கு மத்தியில் கௌரவப்பட்டமும், உற்றார் உறவினர்களின் ஆதரவு உடையோனாக இருந்தாலும் முடிவில் அவைகளால் அவனுக்குக் கிடைக்கப் போவது என்ன என்பதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் ஸூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**உற்றா ருறன்முறை யார் சூழ்ந்திருந்தென்ன**

**ஊருட் ஜனங்களெல் லாரும் பணிந்தென்ன**

**பெற்றாரும் பெண்டீரும் பிள்ளை யிருந்தென்ன**

**பேணும் பெருஞ்செல்வ வானவத்தாலலென்ன**

**கத்தன் பிரிந்திடிற் செத்த சவமாச்சு**

**காணாது காணாது கண்ட தெல்லாம்போச்சு**

**எத்தனை பேர்நின்று கூக்குரலிட்டாலும்**

**எட்டாமற் போய்விடுங் கட்டையல்**

**லோ விந்த** –(சூத்திரப் பாவை)

விஷயம் இப்படித்தான் என்பதை நலி பிரபுக்கள் உணர்ந்திருந்தாலும் கூட ஏனோ அவர்கள் தமது மனோ இச்சைக்கு அளவுக்கதிகமாகவே இடம் கொடுத்துவிட்டபடியால் அதைவிட்டும் தப்ப முடியாமல் அதற்கு அடிமையாகி இரவு பகலாக பணம் தேடுவதிலேயே தமது வாழ்க்கையை பாழாக்கி வருகின்றனர். இதனால் ஏற்படப்போகும் விளைவு இதுதான் என்பதை இறைவேதத்திலும் நபிமொழியிலும் கூறப்பட்டுள்ள வாக்கியங்கள் எல்லாம் இப்போது

அவர்களுடைய காதில் கேட்காவிட்டாலும் மரணம் வந்து தான் அதைவிட்டும் தப்ப முடியாது என்னும்போது சக்ராத்தில் சிக்கி உலகில்தான் பாடுபட்டு சேர்த்து வைத்த செல்வத்தால் ஏற்பட்ட பாசமென்னும் கொடிய நெருப்பு அவரது உள்ளத்தில் கொளுந்துவிட்டு எரியும்போது கண்கூடாகக் கண்டு கொள்வார். இதனாலேயே....

كَفٰى بِالْمَوْتِ وَاعِظًا

**"ஜனங்களுக்கு நறபுத்தி போதிக்க மரணம் ஒன்றே போதுமானது"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும் இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.....

**சுத்தத் திருவடியிற் சொக்கி யருள் பெறுமுன்**

**செத்திறந்து போனாலென் செய்வே நிராமயமே!**

என்றும்......

**ஊத்தை பிணமா முடலை யிடிசுவரை**

**ஏற்றபடி விடுதலீனம் நிராமயமே!**

என்றும் கூறுகின்றனர். மேலும் நீ எப்படிப்பட்ட ஆடைகளை உடுத்திக் கொள்ள விரும்பினாலும் உடுத்திக் கொள். ஆனால் நீ கடைசியில் உடுத்தப் போகும் உடை கபன்தான் என்பதை மட்டும் மறந்துவிடாதே. இவ்வாறே நீ எப்படிப்பட்ட வாகனத்தில் சவாரி செய்ய விரும்பினாலும் சவாரி செய்து கொள். ஆனால் நீ கடைசியில் ஏறப்போகும் வாகனம் சவப்பெட்டிதான் என்பதை மட்டும் மறந்து விடாதே! என்றொரு ஞானி கூறுகிறார்.

மேலும் இரண்டு கெஜ நீளமும் அரைகெஜ அகலமும் உள்ள மண்ணில் புதைக்கப்பட போகும் மனிதன், மாளிகை மேல் மாளிகை கட்டி அதில் குடியிருக்க ஆசைப்படுவது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது என்பதையும், நாம் எவ்வாறு ஒருவரது மண்ணறையை பார்த்து தரிசிக்கிறோமோ அதேபோல நமது மண்ணறையையும் இன்னொருவர் தரிசிக்கக் கூடிய நாள் வெகுவிரைவில் வந்தேதீரும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க மறந்துவிடக் கூடாது. இன்னும்,...

**பாடுபட்டுத் தேடி பணத்தை புதைத்து வைக்குங்**

**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்**

**கூடுவிட்டிங் காவிதான் போயினபின் பாரே**

**அனுபவிப்பார் பாவிகாள் அந்தப் பணம்!**

என்றும் ஒரு கவிஞர் கூறியிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**குடும்பப் பற்றுள்ளவன் முடிவில் காணும் பலன்**

நமது தேகத்தில் ஏதாவதொரு பகுதியில் புண் ஒன்று ஏற்பட்டால் அதனுடைய வேதனையை தாங்க முடியாமல் அதற்கு மருத்துவம் செய்ய உடனே முயற்சிக்கிறோம். இதில் அப்புண் தேகத்தின் வெளிப்பகுதியில் இருப்பதால் அதை நமது முகக்கண்களால் பார்க்க முடிகிறது. அதேநேரம் நாம்செய்யும் காரியங்களால் நமது உள்ளத்தில் ஏற்படும் புண்ணை நமது முகக்கண்கால் காண முடியாதிருப்பதால் அது நமது சக்ராத்துடைய நேரத்திலும் அதற்குப் பிறகும் நம்மை என்ன கதிக்கு ஆளாக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளாதிருக்கிறோம்.

அதன்பின் அறிவாளர்களை கொண்டோ அல்லது ஞானவான்களின் நூல்களை கொண்டோ நமக்கு அக்கல்விகள் போதிக்கப்பட்டால் சில நிமிடங்கள் வரை அதைப்பற்றி யோசித்துவிட்டு பின்னர் அதை மறந்தே போய் விடுகிறோம். அத்துடன் அவனது குடும்பத்தாரும் அவன் எப்படிப்பட்ட வழிகேட்டில் இருக்கிறான் என்பதை கண்டு கொள்வதில்லை. எந்த வகையிலேனும்இ அது தடை செய்யப்பட்ட வழியில் இருந்தாலும் சரிதான். பொருளீட்டிக் கொடுத்தால் போதும் என்றெண்ணி அவனை பொன்னொரு தட்டும் பூவொரு தட்டுமாக போற்றிப் புகழுகின்றனர்.

அதன்பின் அவனை மரணம் வந்துபிடித்து அவனுக்கு சக்ராத்து நடக்கும்போதுஇ அவனுடைய தலைமாட்டில் கும்பலாக உட்கார்ந்து கொண்டு, வாப்பா! கலிமா சொல்லுங்கள். தம்பி! கலிமா சொல்லுங்கள் என செத்தவன் காதில் சங்கு ஊதுகின்றனர். இப்படிப்பட்ட போதனைகளையெல்லாம் அவன் தனது புலன்களின் உணர்ச்சியோடு இருந்த காலத்திலேயே போதித்திருந்தால் அது அவனுக்கு முக்தியை கொடுத்திருக்கும். அவ்வாறின்றி ஏமாந்து விட்டபடியால் அவன் சுகஜீவியாக இருந்த காலத்தில் எந்தெந்த பழக்க வழக்கங்களில் இருந்தானோப அதையே கடைசி நேரத்தில் உளறுகுன்றவனாக வழிகேட்டில் இறந்து போகிறான். பிறகு கூட்டமாக கூடி ஒப்பாரி வைத்து அழுகின்றனர்.

இப்படி அழுவோரின் உள் நோக்கத்ததை கொஞ்சம் நாம் கவனித்துப் பார்ப்போமாயின், அநேகமாக அவர்கள் அவனிடம் பெற்றுவந்த அல்லது இனிமேல் பெற்றுக் கொள்ளப்போகும், பிரயோஜனங்கள் எல்லாம் தங்களை விட்டும் பறிபோகப் போகிறதே என்பதை கருதியதாகத்தான் இருக்குமேயன்றி அவனுடைய மறுமையை குறித்த கவலையில் அழுவோர் அரிதாகத்தான் இருப்பர்.

அது எவ்வாறெனில், அவனுடைய குடும்பத்தை சேர்ந்தவர்களிலேயே யாராவது அவனிடம் சில உதவிகளை கேட்டு அதை அவன் நிறைவேற்றித் தராமல் அவர்களுக்கு ஏதேனும் இடையூறு செய்திருந்தால், அவனது மரணத்தை குறித்து அவர்கள் உள்ளுக்குள் சந்தோஷப்பட்டாலும் வெளிப்பார்வைக்கு ஊர்வாய்க்கு பயந்து ஒப்புக்கு மூக்கை சிந்துவோராகத்தான் இருப்பர்.

அதன்பின் எல்லோரும் கூடி ஓலமிட்டு அழுதபின் சந்தூக்கில் தூக்கி வைத்து கல்லறைக்கு கொண்டு போய் புதைத்துவிட்டு பின்னர் அரைநிமிடம் கூட அங்கே தாமதிக்காமல் தமது வீட்டுக்குப் போய் விடுகின்றனர்.

இந்நிலையில் மண்ணறையை நோக்கிச் சென்றவனோ தனக்கும் அவர்களுக்குமிடையே எவ்விதச் சொந்தமும் இல்லாதவனாகி புதைகுழியில், தான் உலகிலிருந்தபோது செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ அனுபவிக்கத் துவங்கி விடுகிறான்.

அதன்பின் மேற்கண்ட இறந்தோனுடைய வாரிசுகள் இறந்தவனுடைய வீட்டில் காலையிலும், மாலையிலும் சாம்பிராணி சட்டி வைக்கப் போனால் அவன் பேயாக வந்து கொள்வானெனப் பயந்து அதற்காக ஒரு வேலைக்காரனை தேடுகின்றனர்.

இனி அவன் யாரையாவது பேயாக வந்து பிடித்துக் கொண்டு வேதனை செய்தால் அதைப் பற்றி பேசுவோரிடம் அவனுடைய குடும்பத்தை சேர்ந்தோர் சண்டையிடத் துவங்கி விடுகின்றனர். இப்படியெல்லாம் ரோஷத்தோடு வரும் அவனுடைய குடும்பத்தார் முன்பே அவனுக்கு ஏகத்துவத்திற்குரிய அறிவை போதித்திருந்தால் இப்படிப்பட்ட வேதனைக்கும், கேவலத்திற்கும் ஆளாக நேர்ந்திருக்காது அல்லவா! இது போன்றே இறந்து போனவனுடைய மனைவி இன்னொருவனை மணந்து அவனோடு சுகபோகங்களை அனுபவிக்கத் துவங்கி விடுகிறாள். இவ்வாறே இறந்து போகும் பெண்ணின் கணவனும் இன்னொருத்தியை மணந்து அவளோடு சுகம் காணத் துவங்கி விடுகிறான்.

இப்படி ஒருவரையொருவர் மறந்து போவதற்குக் காரணம், இவர்கள் ஒருவர்மீது மற்றவர் அன்பு வைத்திருந்தார்கள் என்றாலும் அந்த அன்பு பெரும்பாலும் அவரவர்களின் நோக்கத்தை மட்டும் கருதியதாகவே இருந்ததால் அதை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய ஸ்தானமாக இருந்த தேகம் இப்போது மரணமென்னும் பெயரைக் கொண்டு அழிந்து போய் விட்டதால் தேகத்தின் மீது செலுத்தப்பட்ட அன்பும் இப்போது அழிந்து போய் இன்னொரு தேகத்தின் மீது அன்பு செலுத்தத் துவங்கி விட்டது.

ஆதலால் இப்படிப்பட்ட அன்பெல்லாம் சந்தேகமின்றி மிருகங்களிடம் காணப்படும் அன்புக்கு ஒப்பாகவே இருப்பதால் இந்த அன்பை உண்மையான உள்ளன்பு என நம்பியிருந்தது மோசமாக முடிந்தது. இக்காரணத்தினாலேயே ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.....

**ஜாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்**

**போதும் போதும் போதும் பராபரமே!**

என்றும்......

**பெற்றெடுத்த மாதா பிதாக்களிருந் தாலுமென்னைச்**

**செத்தவுடன் மண்ணில் திணிப்பார் நிராமயமே!**

என்றும் கூறுகின்றனர்.

**அகமியத்திற்குரிய அறிவில் தடைபட்டிருப்பதன் காரணம்**

ஷரீஅத் என்பது சர்வலோக ரட்சகராகிய ஹழ்ரத் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்லாகவும், தரீகத் என்பது அவர்களின் செயலாகவும், ஹகீகத் என்பது அவர்களின் நிலையாகவும், மஃரிபத் என்பது அவர்களின் ஸிர்ராகவும் இருக்கிறது. இவ்வாறு நான்கு பெயர்களை கொண்டு இது பேசப்பட்டாலும் எதார்த்தத்தில் இந்நான்கும் ஒன்றாகவே இருக்கிறது. விஷயம் இவ்வாறிருக்க, சிலர் ஷரீஅத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவைகளை பற்றி சிந்திகாமலேயே இருக்கின்றனர். இது அவர்களின் விளக்கப்பிழையே அன்றி வேறல்ல.

ஏனெனில் பாமரர்களுக்கு துவக்கத்தில் போதிக்கப்படும் கல்வியானது உள்ளமை பொருளுக்கு மேலே இருக்கும் தோலேயன்றி வேறல்லவாதலால், அவர்கள் அதனுடைய உட்பொருளான மணியை அடைய வேண்டியது அவசியமாகும். யார் ஏகத்துவத்திற்குரிய அறிவை பெறவில்லையோ அவர் பாவமன்னிப்பை கொண்டு மன்னிக்கப்படாத இணையை விட்டும் தப்பித்துக் கொண்டதாக சொல்ல முடியாது.

ஒருவன் குழந்தையாக இருக்கும்போது ஏதாவதொரு தவறை செய்தால் அதை காணும் அவனுடைய பெற்றோர் அவனிடம், இது பாவம் இதை செய்யக் கூடாதென்னும், மீறிச் செய்தால் இறைவன் அவனை அடிப்பான் என்றும் கூறுவதுண்டு. அப்போது அக்குழந்தை தனது பெற்றோரை பார்த்து, இறைவன் என்றால் யார்? எனக் கேட்கிறது. அதற்கவர்கள், அவன் நம்மையெல்லாம் படைத்தவன் என்பதாகக் கூறுகின்றனர்.

அதன்பின் அவன் எங்கே இருக்கிறான்? எனக் கேட்கிறது. அதற்கும் அவர்கள், அவன் வானத்தில் இருக்கிறான் என்று கூறுகின்றனர். அதைக் கேட்கும் அவன் பள்ளிக் கூடத்தில் தனது ஆசிரியர் தன்னை அடிப்பதைப் போலவே இறைவன் தன்னை பிரம்பால் அடிப்பானென்றும், அவன் ஒரு மனிதனை போன்றே வானத்தில் அமர்ந்திருக்கிறான் என்றும் எண்ணிக் கொள்கிறான்.

அப்பருவத்தில் அதற்குமேல் இறைவனைப் பற்றி போதித்தால் அதை விளங்கிக் கொள்ளும் சக்தி அவனுக்கு இல்லை என்பதால் அவனுடைய பெற்றோர்களால் அவ்வாறு போதிக்கப்பட்டதேயன்றி மற்றபடி தமது குழந்தைக்கு ஏகத்துவத்திற்குரிய அறிவை சொல்லிக் கொடுக்கக் கூடாது என்பதற்கல்ல.

இதுபோன்றே அக்குழந்தை விளையாடுவதற்காக வீதிக்குச் சென்றால் மாக்காண்டி வருவான், அவன் உன்னை பிடித்துக் கொண்டு போய்விடுவான் என்றெல்லாம் அவனது பெற்றோர்

பயமுறுத்துவதுண்டு. அதைக் கேட்டு அக்குழந்தையும் பயந்து வெளியே போகாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதுமுண்டு.

அதன்பின் அக்குழந்தை வளர்ந்து வாலிபத்தை அடையும்போது, மாக்காண்டி என்பதும், பூச்சாண்டி என்பதும் கட்டுக்கதை என்பதை தெரிந்து கொண்டு அவனும் அவனது பெற்றோர் சென்ற வழியிலேயே அவனுடைய குழந்தை விஷமம் செய்யும்போது அவனே ஒரு இடத்தில் ஒளிந்து கொண்டு, நான் மாக்காண்டி வந்திருக்கிறேன். விஷமம் செய்தால் பிடித்துக் கொண்டு போய் விடுவேன் எனப் பயமுறுத்தி அதனுடைய விஷமத்தை அடக்குகிறான்.

ஆனால் இறைவன் என்னும் மெய்ப்பொருளை அவனது தன்மயம் மற்றும் குணாதிசியங்களின் தரப்பை கொண்டுஅறிந்து கொள்வதில் மட்டும் தனது குழந்தை பருவத்தில் தனக்கு போதிக்கப்பட்ட போதனைக்கேற்ப அம்மெய்ப்பொருளில் இருந்து தன்னை வேறுபடுத்தி பிரித்துப் பார்க்கும் விசுவாசத்தை தான் இப்போதும் அவன் வைத்துக் கொண்டிருக்கிறான். இத்தகைய விபரீதமான விசுவாசத்தை விட்டொழித்து சர்வமும் ஏக பராபரமாகிய மெய்ப்பொருளின் தோற்றமேயன்றி வேறல்ல என்றும் ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளாது தடைபட்டிருப்பதற்கு எண்ணற்ற காரணங்கள் உள்ளன.

அதில் ஒரு காரணமாவது, அல்லாஹ் என்னும் அம்மெய்ப்பொருள் பற்றி பேசப்படும்போது அவன் அருள் புரிந்தான். அவன் கொடுத்தான். அவன் படைத்தான் எனக் கூறப்படுவதில் “அவன்“ என்னும் வாக்கியம் ஆண்பாலை குறிக்கும் வகையில் அமைந்திருப்பதால் அஃது என்னம் இறைவன் ஒரு மனிதனைப் போலவே வானத்தில் இருக்கிறான் என குழந்தை பருவத்தில் போதிக்கப்பட்ட கொள்கை அவனது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து அவ்வேற்றுமைக்குரிய விசுவாசமே அவனுடைய உள்ளத்தில் உறைந்து விட்டது.

இனி இறைவனை அவன் என அழைக்கப்படுவதற்குக் காரணம் அரபி அட்சரத்திலுள்ள “**ஹூ**“ என்னும் வாக்கியத்தின் வெளிப்படையான பொருளை கருதியேயன்றி வேறல்ல. அதேநேரம் ‘**ஹூ**’ என்பதற்குரிய உண்மையான பொருள், அது ஆண் என்றோ அல்லது பெண் என்றோ குறிப்பிட்டுச் சொல்ல முடியாத தன்னைக் கொண்டு தானாக இருக்கும் அதீதமான உள்ளமை பொருள் என்பதாம்.

மேலும் இத்தகையோர் தமது அறியாமையை இத்தோடு நிறுத்திக் கொள்ளாது மேலும்மேலும் அதை அதிகப்படுத்தி தம்மையும் தமது சந்ததிகளையும் இறைவனுக்கு வேறாக அன்னியப்படுத்திக் கொண்டே போகின்றனர். அஃதெப்படி என்றால், எதார்த்தமான அறிவைக் கொண்டுள்ள ஞானவான்களில் யாராவது அந்த அறிவை போதிக்க முன்வந்தால் ஓ! இது நாங்கள் இதற்கு முன் கேட்டிராத அறிவுக்கு மாற்றமான ஒன்றாக இருக்கிறதே என்றும், இது மார்க்கத்திற்கு விரோதமான ஒன்றாக இருக்கிறதே என்றும் ஏற்க மறுத்து அவர்களை துன்புறுத்தி துரத்தியும் விடுகின்றனர். இதன் காரணமாக மற்ற ஞானவான்களும் இவர்களுடைய தொல்லைகளுக்குப் பயந்து தமது வாயை மூடிக் கொள்கின்றனர். இருப்பினும் இதைப் பற்றி இறைவன் தனது வேதத்தில்....

بَلْ كَذَّبُوا بِمَا لَمْ يُحِيطُوا بِعِلْمِهِ وَلَمَّا يَأْتِهِمْ تَأْوِيلُهُ

"**அவர்களுக்கு தெரியாததும், அதன் அத்தாட்சி அவர்களுக்கு வராததுமான விஷயத்தை அவர்கள் பொய்யென்று கூறுகின்றனர்**" என்பதாகக் கூறுகிறான். இதுபோன்றே இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது "**கீமியாயெ ஸஆதத்**" என்னும் நூலில்....

"ஒருவன் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை கோட்பாடுகளை கற்றறிந்து இல்முல் கலாமில் கூறப்பட்டவைகளையும் கற்றறிந்து அதைத் தவிரவேறு கல்விகள் எதுவுமே இல்லையென எண்ணுவானாயின் அவனது விசயத்தில் கல்வி திரையாகிப் போய்விடும்"

என்பதாகக் கூறுகின்றனர். ஆதலால் ஒவ்வொருவரும் மேற்கூறப்பட்ட ஆதாரங்களையும்இ அனுபவங்களையும் கவனித்து ஏகத்துவத்திற்குரிய அறிவைப் பெறுவதற்கு முயல வேண்டும். அத்துடன் இக்கல்வி ஒவ்வொருவர் மீதும் விதிப்படுத்தப்பட்ட கட்டாயமான கடமையுமாகும்.

**சிலர் அறிவை கற்றுக் கொள்ள வெட்கப்படுகின்றனர்**

நமது சமூகத்திலுள்ள சிலர் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்து இதுதான் என்பதை தமது வாலிபப் பருவத்தில் அறிந்து கொள்ளாது போனாலும் கூட ,அவர்கள் பெரியவர்களாகி அவர்களை ஜனங்கள் பணத்திற்காகவோ, அல்லது கௌரவ பட்டத்திற்காகவோ புகழும் காலத்தில், தாங்கள் "**லா இலாஹ இல்லல்லாஹ்**" என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை இதுவரை தெரிந்து கொள்ளாமல் போனது தங்களுக்குத் தெரியவந்தால், இதென்ன சங்கடமாக இருக்கிறதே! நம்மை ஜனங்களெல்லாம் அறிவாளியென மதித்துக் கொண்டுள்ள நிலையில் இப்போது போய் நமக்கு ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் எதார்த்தமான அர்த்தம் தெரியவில்லையென ஞானிகளிடம் போய் கேட்டால் அவர்கள் நம்மை மரியாதை குறைவாகவல்லவா நினைப்பார்கள் என்றெண்ணி இதுவரை நாம் தெரிந்துள்ள அறிவைக் கொண்டு செயலாற்றி வந்தால் போதும். இதற்கு மேலுள்ள காரியங்களுக்காக நாம் இறக்கும்போது நமது சொத்துக்களையெல்லாம் உயில் எழுதி வைப்போமல்லவா?அப்போது நமக்காக ஒவ்வோர் ஆண்டும் கத்தம் பாத்திஹா ஓதி உணவு சமைத்துப் போடுமாறு எழுதி வைத்து விட்டால் அந்த பரக்கத்தைக் கொண்டு நாம் முக்தியடைந்து விடலாம் என்று எண்ணி தமது நோக்கத்திற்குத் தக்கவாறு மார்க்கத்தீர்ப்பும் கொடுத்து வருகின்றனர். இப்படிப்பட்ட எண்ணமெல்லாம் அறவே சந்தேகத்திற்கிடமின்றி வழிகேட்டிற்கு வித்தாக இருப்பதால் சாத்தானுடைய குணமாகிய "**ரியா**" என்னும் புகழாசையை விட்டும் இவர்கள் நீங்க முடியாதென்பதை தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இதைப் பற்றி இறைவனும் அவனுடைய வேதத்தில்...

فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُونَ

"**நீங்கள் அறியாதோராக இருந்தால் அறிந்தோரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்**"

என்றும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

تَعَلَّمُوْا اُمُوْرَ دِيْنَكُمْ وَلَا تَسْتَنْكِفُوْا

**"நீங்கள் உங்களுடைய மார்க்க விசயங்களை கற்றுக் கொள்ளுங்கள். அதற்காக வெட்கப்பட வேண்டாம்"**

என்றும் கூறுகின்றனர்.

**மன இச்சையோடு போராடுவதே மாபெரும் யுத்தம்**

அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

رَجَعْنَا اِلٰى جِهَادِ الْاَصْغَرِ اِلٰى جِهَادِ الْاَكْبَرِ

**"நாம் சிறிய யுத்தத்திலிருந்து பெரிய யுத்தத்தின் பக்கமாக திரும்பியுள்ளோம்."**

என்பதாகக் கூறுகின்றனர். இதனுடைய கருத்து, வெளித்தோற்றத்தில் பார்க்கப்படும் யுத்தங்களெல்லாம் சிறிய யுத்தங்களாகவும், தமது மன இச்சையோடு போராடுவதே மாபெரும் யுத்தமாகும் என்பதாம். ஏனெனில் ஒருவனோடு சண்டைபோட்டு அவனை கொன்று விட்டால் அந்த யுத்தம் அத்தோடு முடிந்து போகக் கூடியதாகவும், அதேநேரம் மனஇச்சையோடு யுத்தம் செய்து ஏதாவதொரு விசயத்தில் அதை நாம் வென்று விட்டாலும் அத்தோடு அந்த யுத்தம் முடிந்து போகாமல் ஒவ்வொரு விசயத்திலும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதாம்.

இதில் ஒவ்வொருவரும் மேற்கூறப்பட்ட கருத்தை கவனித்து செயலாற்ற வேண்டியது அவசியமாதலால் ஜனங்களோடு கலந்து உறவாடுவதில் ஏற்படும் தேவையற்ற காரியங்களையும், வீண் பேச்சுக்களையும் விட்டு தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பேச்சு தேவைக்கு அதிகமானால் அது பல தீமைகளுக்கு வழிவகுத்து விடும். இதனாலேயே அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

مَنْ سَكَتَ سَلِمَ

**"வாய் மூடியவன் பாதுகாக்கப்பட்டான்"** என்பதாகக் கூறுகின்றனர்.

மேலும் ஒவ்வொரு விசயத்தையும் அறிவைக் கொண்டு ஆராய்ந்து அதன்படி நடந்து வந்தால் மட்டுமே அதற்குரிய பலனை பெற்றுக் கொள்ள முடியும். மற்றபடி காதால் கேட்பதை கொண்டும், கண்ணால் காண்பதைக் கொண்டு மட்டும் அதனுடைய பலனை பெற்று விட முடியாது. ஆதலால் இம்முறையை கொண்டு மனோஇச்சையின் நடவடிக்கைகளை

நோட்டமிட்டு நடந்து வந்தால் முடிவில் உள்ளம் ஒரு நிலைப்பட்டு வழிக்கு வந்து விடும். அவ்வாறு வந்து விட்டால் மிகவுயர்ந்த பதவிகளுக்குரிய படித்தரங்களை எல்லாம் அது பெற்றுக் கொள்ளும். இதைப் பற்றி...

يَاأَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ارْجِعِي إِلَى رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً فَادْخُلِي فِي عِبَادِي وَادْخُلِي جَنَّتِي

**"வழிப்பட்ட நப்ஸே! நீ திருப்தி கொண்டதாகவும் திருப்தி கொள்ளப்பட்டதாகவும் உனது நாயனளவில் மீள்வாயாக. மேலும் எனது அடியார்களில் இணைந்து என்னுடைய சுவர்க்கத்தில் நுழைவாயாக"** என்பதாக இறைவன் வேதத்தில் கூறுகிறான்.

இதில் முக்தியடைந்த மகான்கள் எல்லாம் இப்படித்தான் உள்ளத்தை கட்டுப்படுத்தி உயர்ந்த பதவிகளை பெற்றார்கள். ஆதலால் நாமும் அதே வழியை பின்பற்றி நடப்பதை வைராக்கியத்தோடு பிடித்துக் கொள்ள வேண்டும். மேலும் ஆரிபீன்களென்னும் ஞானிகள் தமது அகத்தில் படிப்படியாக கடந்தும் செல்லும் ஞான பூமிகள் எனப்படுபவை ஆறு வகைகளாகும் எனக் கூறுகின்றனர். அவைஇ 1. அஸ்ஸைருலில்லாஹ் 2. அஸ்ஸைரு இலல்லாஹ் 3. அஸ்ஸைரு ஃபில்லாஹ் 4. அஸ்ஸைரு மினல்லாஹ் 5. அஸ்ஸைருபில்லாஹ் 6. அஸ்ஸைரு மஅல்லாஹ் என்பவைகளாகும். இதற்குரிய விபரமானது...

1. அறியாமையை அகற்"றி இறைவனை அறிதல் என்னும் ஞானத்தை அடைய முயல்வதை "**அஸ்ஸைருலில்லாஹ்**" என்றும் 2. ஞானத்திற்குரிய தேர்ச்சியில் யோகசாதனை புரிவரை "**அஸ்ஸைரு இலல்லாஹ்**" என்றும், 3. தியானத்திற்குரிய முயற்சியில் இறைவனில் தனது நினைவு மாய்ந்து போவரை "**அஸ்ஸைரு ஃபில்லாஹ்" என்றும்**, 4. மனிதப்பண்புக்குரிய குணங்கள் மாய்ந்து தனது எதார்த்தத்திற்குரிய நிலையில் நிலைத்து நிற்பதை "**அஸ்ஸைரு மினல்லாஹ்**" என்றும், 5. இறைவனுடைய குணங்கள் மற்றும் நாமங்களை தனதாகக் கொண்டு அதில் நிலைத்து நிற்பதும், அது தனக்குப் பொருந்தியுள்ளதை எண்ணுவதும் "**அஸ்ஸைரு பில்லாஹ்**" என்றும், 6. மேல் உலகிலும் கீழ் உலகிலும் ஆட்சி அதிகாரம் செய்வதை "**அஸ்ஸைரு மஅல்லாஹ்**" என்றும் சொல்லப்படும்.

**உலகம் விசுவாசிக்கு சிறை காபிருக்கு சுவர்க்கம்**

اَلدُّنْيَا سِجْنُ الْمُؤْمِنِيْنَ وَجَنَّةُ الْكَافِرِيْنَ

**"இவ்வுலகம் விசுவாசிகளுக்கு சிறைச்சாலையாகவும், நிராகரிப்போராகிய காபிர்களுக்கு சுவர்க்கமாகவும் இருக்கின்றது"** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நபிமொழியின் கருத்து, தேகபலமும் செல்வச் செழிப்புமுள்ள ஒருவன், தன்னை அடித்தவனை தான் திருப்பி அடிக்கவோ, தன்னை ஏசியவனை திருப்பி ஏசவோ, தனது உள்ளம்

ஆசைப்பட்ட பொருட்களை தான் அனுபவிக்கவோ முடியுமென்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அதேநேரம் ஒருவன் பலவீனமானவனாகவும், வறுமைக்கு உட்பட்டவனாகவும் இருப்பானாயின் அவனால் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்யவோ அனுபவிக்கவோ முடியாது.

ஆகையால் இப்படிப்பட்ட நிலையிலுள்ள ஒருவனை பொறுமையாளர்களை சேர்ந்தவனென்று சொல்ல முடியாது. ஏனெனில் ஒருவேளை இவன் பலம் வாய்ந்தவனாகவும், செல்வந்தவனாகவும் மாறிப்போனால் அப்போதும் முன்னைப் போலவே பொறுமையாளனாக இருப்பானெனச் சொல்ல வழியில்லை. ஆதலால் தேக பலமும் செல்வச் செழிப்புமுள்ள ஒருவன் மேற்கண்ட காரியங்களை செய்யாது பொறுமையோடு இருப்பானாயின் அவனையே இறைவன் அவனுடைய வேதத்தில், இறைவன் பொ'றுமையாளர்களோடு இருக்கிறான்" என்னும் கூற்றுக்கு தகுதியானவன் என்பதாகக் கூறுகிறான்.

இவ்வாறே விபச்சாரம் போன்ற கொடிய தீமையை விட்டும் நீங்கிக் கொண்டதாக நினைத்துக் கொண்டுள்ள ஒருவன், தான் ஒரு அழகான பெண்ணோடு எந்தவித நிர்பந்தமும் இல்லாத ஓரிடத்தில் தனித்திருந்து, விஷயம் அவனைக் கொண்டு முந்தும்போது கூட அவன் இறைவனை அஞ்சி அப்பாவத்தை விட்டும் விலகிக் கொள்வானாயின் அவன் எண்ணிக் கொண்டிருந்ததை போல ஆண்மகன் தான் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறின்றி அவன் விரிக்கும் வலையில் சிக்கிக் கொள்வானாயின் தன்னை விபச்சாரத்தை விட்டும் பாதுகாத்துக் கொண்டதாக அவன் நினைத்துக் கொண்டிருந்தது மனோ இச்சையின் ஏமாற்று வேலையென்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறே ஒருவன் மோகத்தை இழந்தவனாக இருப்பானாயின் அவன் தனது போக இச்சையை அடக்கி விட்டதாகக் கூற முடியாது. ஏனெனில் அடக்குதல் என்பதற்குரிய தத்துவம் அவனில் இருக்கும்போது அதை மீறவிடாமல் அவன் அடக்கினால் அதற்குப் பெயர்தான் அடக்குதல் என்பதாம். ஆக இவையனைத்தையும் கவனித்தால் வயது முதிர்ந்து அவயங்களின் உறுப்புக்களெல்லாம் தளர்ந்து போயுள்ள நிலையிலுள்ள ஒருவனுடைய வணக்கத்தை விட அவயங்களின் உறுப்புக்களும் நன்கு முறுக்கேறிய நிலையிலிருக்கும் ஒருவனுடைய வணக்கம்தான் விரைவான பலனைத் தரும் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே மேற்கண்டவாறு பொறுமையோடும், ஊக்கத்தோடும், நம்பிக்கையோடும் நேர்வழியில் நிலைத்து நின்று வணங்கி வருவதற்கு ஏகத்துவத்தை அறிந்து கொள்வது அவசியமாகும். அவ்வாறு அறிந்து கொண்டதால் தான் விசுவாசிகளெல்லாம் தமது மனோ இச்சையை பின்பற்றி நடக்காது சதா அவனோடு போரிடுவோராக இருந்து வந்தனர்.

இப்படி மனோ இச்சையோடு போரிடுதல் என்பது அவர்கள் முக்தியடையும் வரை நடந்தேயாக வேண்டும். இது மிகவும் கஷ்டமான காரியமாக இருப்பதால்தான் இவ்வுலகை விசுவாசிகளுக்கு சிறைச்சாலை எனக் கூறப்பட்டது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதை தெரிந்த காரணத்தினாலேயே ஹழ்ரத் சுல்தான் இப்"றாஹீம் இப்னு அத்ஹம் ரஹிமஹுல்லாஹ்

அவர்களும்இ ஹாரூன் ரஷீத் பாதுஷா அவர்களின் புதல்வரும் மேலும் பல்வேறு கணக்கில்லாத ஞானிகளும் தத்தம் தமது ராஜரீகத்தையும் உலக சம்பந்தமான சுக போகங்களையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு ஃபகீர்களாக மாறிப்போயினர்.

விஷயம் இவ்வாறிருக்க நம்மிடையே சிலர் இவ்வுலகில் அற்பமானதொரு சுகத்தை கூட விட்டுக் கொடுக்க மனமில்லாத நிலையில் தம்மை அவர்களோடு ஒப்பிட்டு, அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களாகத்தானே இருந்தனர் என்பதாகப் பிதற்றுவது தம்மை உய்த்துணராத காரணமேயாகும். மேலும் ஏகத்துவத்தை அறியாதவர்கள் தமது மனோ இச்சைகளை அடக்கியாள முடியாமல் அதற்கு அடிமையாகி மனம்போன போக்கில் நடப்பது அவர்களுக்கு சுவர்க்கத்தை போன்று தான் இருக்குமாதலால், இதைத்தான் உலகம் இறை நிராகரிப்பாளார்களுக்கு சுவர்க்கமாகும் எனக் கூறப்பட்டதற்குரிய கருத்தாகும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நன்மை தீமை என்பதன் கருத்து**

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது **“கீமியாயெ ஸஆதத்“** என்னும் நூலில் நன்மை தீமை என்பதற்குரிய கருத்தை தெளிவாக நமக்கு சொல்லிக் கொடுக்கின்றனர். அதாவது....

அவர்கள் தமது கரத்தில் ஒன்றுமில்லை என்றும், எல்லாவற்றையும் இறைவன்தான் செய்கிறான் என்றும், யாருக்கு இறைவன் துர்பதவியை விதித்திருக்கிறானோ அவன்தனது முயற்சியை கொண்டெல்லாம் அதை மாற்ற முடியாதென்றும், இதுபோன்றே இறைவன் யாருக்கு நற்பதவியை விதித்திருக்கிறானோ அவன் எவ்வித முயற்சியும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும், தவறாக எண்ணிக் கொண்டு ஏகத்துவத்திற்குரிய எதார்த்தத்தின் கருத்தை அறியாது அதிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். இப்படிப்பட்ட எண்ணமெல்லாம் சுத்த அறிவீனமும், வழிகேடும், வழி கேட்டுக்குமுரிய காரணமுமாகும். இந்நிலையில் இதைக் குறித்த விபரங்களை எல்லாம் நூல்களில் எழுதக்கூடாது. இருப்பினும் பேச்சின் தொடர் இந்த அளவுக்கு இழுத்துக் கொண்டு விட்டதால் அதிலிருந்து கொஞ்சம்போல் பேசுகிறேன்.

வேதனை செய்தல் என்பது நீ ஒரு தீமையை செய்ததால் யாரோ ஒருவர் உன்மீது கோபம் கொண்டு அதை காட்டுவதற்காக உன்னை வேதனை செய்கிறார் என்பதல்ல. இதுபோன்றே நன்மை தருதல் என்பது நீ ஒரு நல்ல காரியத்தை செய்ததால் உன்மீது சந்தோசப்பட்டு அதற்குப் பிரதியாக உனக்குப் பரிசளிக்கிறார் என்பதுமல்ல. இனி இதனுடைய கருத்து, உனது தேகத்தில் ரத்தமோ அல்லது பித்தமோ அல்லது வேறு ஏதாவதொரு தாதோ அதிகரித்து சேஷ்டை செய்தால் அதனால் உனக்கு ஒன்று உண்டாகி உனது தேகத்தின் நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. அதைத்தான் நோய் என்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அதேநேரம் மருந்து மாத்திரை போன்ற பொருட்கள் அந்த சேஷ்டையை அடக்கி விட்டால் அதன்காரணமாக உனது தேகத்தில் வேறொரு நிலைமை உண்டாகிறது. அதை ஆரோக்கியம்



www.sufimanzil.org

என்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். இவ்வாறே உனக்குள் இச்சையும் கோபமும் மிகைத்து அதற்கு நீ உடன்பட்டு விட்டால் அதன் காரணமாக அதிலிருந்து ஒரு நெருப்பு உண்டாகி அது உன்னுடைய உயிருக்குள் கிடக்கும். அதுதான் உனது வேதனைக்கே காரணமாகும். அதைத்தான்...

اَلْغَضَبُ قِطْعَةٌ مِّنَ النَّارِ

**"கோபம் என்பது நெருப்பின் ஒரு பொறியாகும்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்நிலையில் புத்தி என்னும் பிரகாசம் பலமடைந்ததால் இச்சை மற்றும் கோபமென்னும் நெருப்பை அது அணைத்து விடுகிறது. இவ்வாறே விசுவாசத்தின் ஒளியும் நரக நெருப்பை தணித்து விடுகிறது. எந்த அளவுக்கு எனில்....

جُزْيَا مُؤْمِنُ فَاِنَّ نُوْرَكَ اَطْفَانَارِيْ

**"ஓ! விசுவாசியே! போய்விடு. திடனாக உனது ஒளியானது எனது நெருப்பை அணைத்து விட்டது"**

என்று கூறும். இதில் நரகமே விசுவாசத்திடம் முறையிடும்போது இடையில் வேறு பேச்சுக்"கு இடமில்லை. மேலும் மேகமானது காற்றுக்குமுன் நிற்க முடியாமல் ஓட்டம் பிடிப்பதைப் போல நரகம் அப்பேரொளிக்கு முன்னால் நிற்க முடியாமல் ஓட்டம் பிடிக்கும். இவ்வாறே இச்சை என்னும் நெருப்பானது புத்தி என்னும் பிரகாசத்திற்கு முன்னால் தோற்றுப்போய்விடும். அதன்பின் உன்னை வேதனை செய்வதற்கு இன்னொரு இடத்திலிருந்து எந்தவொரு பொருளையும் கொண்டு வரப்போவதில்லை. உன்னிடமுள்ள பொருளைத்தான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்....

اِنَّمَا هِيَ اَعْمَالُكُمْ تُرَدُّ اِلَيْكُمْ

**"இப்பிரதி பலன் உங்களுக்குத் திருப்பப்படுகிற உங்களின் செயல்பாடுகளே அன்றி வேறல்ல"** எனக் கூறியிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆதலால் உனது கோபமும் இச்சையும் நரக நெருப்புக்குக் கருவாக இருக்கின்றன. அது உனக்குள்ளேயே இருக்கிறது. மேலும் நீ இல்முல் யகீன் என்னும் சந்தேகமற்ற ஞானத்தை அடைவாயாயின் அப்போது அதை பார்ப்பாய். இதைப் பற்றி இறைவன் அவனுடைய வேதத்தில்....

كَلَّا لَوْ تَعْلَمُوْنَ عِلْمَ الْيَقِيْنِ لَتَرَوُنَّ الْجَحِيْم

**"அப்படியல்ல. நீங்கள் இல்முல்யகீனை அறிந்தால் கண்டிப்பாக நரகத்தை காண்பீர்கள்"**

எனக் கூறுவதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும். எனவே அறிந்து கொள். விஷமுள்ள பதார்த்தம் மனிதனை நோயுறச் செய்கிறது. அதுதான் அவனை மண்ணறைக்"கும் கொண்டு போகிறது. அவன் நோயுறுவதும் அதன் காரணமாக மண்ணறைக்கு போவதும் அவன்மீது கோபப்பட்டு அவனை யாரும் பழி வாங்குவதல்ல.

இதுபோன்றே பாவமும் இச்சையும் உனது உள்ளத்தை நோயுறச் செய்கின்றன. அந்த நோய்தான் உனக்கு நெருப்பாக மாறும். அந்த நெருப்பு நரக நெருப்பின் இனத்தை சேர்ந்ததாகும். இவ்வுலக நெருப்பை போன்றதல்ல. இனத்தோடு இனம் சேரும் என்னும் விதிப்படி காந்தம் இரும்பை தன்பக்கமாக இழுப்பதை போல நரகம் நகரவாதியை தன்பக்கமாக இழுக்கும். இதையன்றி வேறுயாரும் இடையில் உன்மீது கோபம் கொண்டு உன்னை பழிவாங்குவதில்லை. இதேபோல நன்மையின் விஷயத்தையும் ஊகித்துக் கொள்.

மேற்காணும் விஷயம் ரகசியமான கல்வியைச் சேர்ந்ததாக இருப்பதால் அதை ஆதாரத்துடன் இங்கே சைக்கினை செய்யப்பட்டுள்ளது. நாம் இதற்குமுன் விளங்கிக் கொண்டிருந்த வெளிப்படையான விளக்கத்திற்கும் இப்போது சொல்லப்பட்ட அந்தரங்கமான விளக்கத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்னவென்பதை ஆய்ந்தறிந்து மனோ இச்சைகளை அகற்றி நேர்வழிக்கு நம்மை நாம் உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

**படைகோலக் கருணை**

اِنَّ فِيْ خَلْقِ السَّمٰوَاتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ لَاٰيَاتٍ لِّاُوْلِي الْاَلْبَابِ الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللهَ قِيَامًا وَّقُعُوْدًا

وَّعَلٰى جُنُوْبِهِمْ

**"இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிப்பிலும் இரவு பகலின் வேறுபாட்டிலும் அறிவாளர்களுக்கு மெய்யாகவே அத்தாட்சிகள் உள்ளன. அவர்கள் நின்றிருக்கும் போதும், அமர்ந்திருக்கும் போதும், படுத்திருக்கும்போதும் இறைவனை தியானிப்பார்கள்'** என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறியிருப்பதால் இறைவன் தனது குணப்பண்புகளைக் கொண்டு சிருஷ்டிப் பொருட்களின் மீது அவன் புரிந்துள்ள கருணையை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

எவ்வாறெனில், கருணைக்கடலாகிய இறைவன் நமது தேகத்தை அவன் விரும்பிய தோற்றத்திலும் நிறத்திலும் அளவிலும் படைத்திருப்பதால், இதில் நெட்டையாக இருப்பவர்

குட்டையாகவோ, கருப்பாக இருப்பவர் சிவப்பாகவோ, சிவப்பாக இருப்பவர் கருப்பாகவோ மாற முடியாது.

இவ்வாறே ஒரு தாயின் கர்ப்பத்திலிருந்து குழந்தை ஒன்று பிறந்து வரும்போது அது எல்லா அவயங்களையும் பூரணமாகப் பெற்று பற்கள் மட்டும் முளைக்காமல் பிறந்து, சில மாதங்களுக்குப் பிறகே பற்கள் முளைத்தல் என்பதும் அவனுடைய கருணையைச் சார்ந்த ஓர் விசயமாகவே இருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, பிறக்கும் குழந்தை தனது தாயின் மார்பிலிருந்து பாலை சுவைத்துக் குடிக்க வேண்டியிருப்பதால் தனக்கு அறிவில்லாத அந்நிலையில் மார்பை கடித்து காயப்படுத்தி விடுமாயின் அதன்பின் அக்குழந்தை பாலருந்த முடியாமல் போய்விடும் என்பதோடு அது இறந்து போகவும் நேரிடலாம்.

இதுபோன்றே அப்பருவத்தில் தேகம் ஸ்திரத்தன்மையை பெறுவதற்கு துவக்கத்தில் ஜீரணப்பையின் சக்திக்கு ஏற்றவாறு மிருதுவான உணவே ஊட்டப்பட வேண்டுமாதலால் அவ்வுணவை மென்று சுவைக்கத்தக்க வகையில் துவக்கத்தில் சிறிய பற்களாகவே இறைவன் படைக்கிறான். பின்னர் தேகம் வலுவான ஸ்திரத்தன்மையை அடைந்ததும் முன்பிருந்த சிறிய பற்களையெல்லாம் ஒவ்வொன்றாக விழச் செய்து பெரிய பற்கறை படைக்கிறான்.

இவ்வாறே மீசை தாடி போன்றவற்றை அந்தந்த பருவத்திற்கு ஏற்றவாறு அதாவது, மனிதன் போகத்தை அனுபவிக்கக் கூடிய பருவமான பதினாறு வயதில் மீசையையும், ஞானத்தை உணரக் கூடிய பருவமாகிய இருபது வயதில் தாடியையும் முளைக்கச் செய்கிறான். காரணம் குழந்தை பிறக்கும்போதே தாடி மீசையோடு பிறந்தால் அப்பருவத்தில் அது பார்ப்பதற்கு அவலட்சணமாகத் தெரிவதோடு வெறுப்பையும் ஏற்படுத்த காரணமாகிவிடும். அத்துடன் அப்பருவத்திற்கு தாடி மீசை என்பதும் தேவையற்ற ஒன்றாக இருப்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

அவ்வாறின்றி இறைவன் மனித தேகத்தை அவைகளின் விருப்பத்திற்குத் தக்கவாறு வளர விட்டிருப்பானாயின் ஒவ்வொரு மனிதனுடைய தலையும் ஒரு மடாவைப் போலவும், பற்கள் மண்வெட்டியைப்போலவும், நாக்கு புடலங்காயை போலவும், கைகள் உலக்கையை போலவும், கால்கள் தூண்களைப் போலவும், ரோமங்கள் மரங்களின் வேர்களைப் போலவும் வளர்ந்து பார்ப்பதற்கே அவலட்சணமாகக் காட்சியளிக்கும்.

இதேபோல பறவைகளுக்கு இருப்பதைப் போல மனிதர்களுக்கும் இறக்கைகள் இருந்திருக்குமாயின் தற்போது நடைமுறையிலுள்ள, அதிலும் குறிப்பாக மாதா பிதா என்றும், கணவன் மனைவி என்றும் அமைந்துள்ள கட்டுப்பாடுகள் எதுவுமே இல்லாது போயிருக்கும். மேலும் அரசாங்கம், கோபுரமை, மாளிகை, கப்பல், ரயில், மோட்டார், தந்தி, தபால் போன்றவைகளும் தோன்றியிருக்காது. காரணம் மனிதர்களும் பறவைகளை போல நினைத்த இடங்களுக்கெல்லாம் பறந்து செல்ல முடியுமாதலால், கிடைக்கும் உணவை உண்ணுவார்களாதலால், மிருகங்களைப் போன்று விரும்பியவர்களோடு எல்லாம் உறவு

கொள்வார்களாதலால் இவ்வுலகின் அலங்காரத் தோற்றங்களெல்லாம் இல்லாமல் போய் எங்கே பார்த்தாலும் ஒரே காடு மேடாகவும் பள்ளமுமாகவே இருந்திருக்கும்.

அல்லது மனிதர்களில் காணப்படும் பண்புகளில் ஏதாவதொரு பண்பு மனிதர்களிடம் இல்லாமல் போயிருந்தால் - எவ்வாறெனில், மனிதனில் காணப்படும் பார்வை என்னும் தன்மையோ, அல்லது கேட்கும் தன்மையோ, அல்லதுபேசும் தன்மையோ, அல்லுது போகத்திற்குரிய உறுப்புக்களில் ஸ்பரிச உணர்வோ இல்லாமல் போயிருந்தால் அப்போதும் இவ்வுலகின் அலங்காரமும் மனித வாழ்க்கையின் சுகங்களும் நாசமாகித்தான் போயிருக்கும்.

இவ்வாறே தேக உறுப்புக்களின் அமைப்பை கூட்டியோ குறைத்தோ அல்லது மாற்றியோ அமைக்கப்பட்டிருந்தால் - எவ்வாறெனில், வாய் இருக்க வேண்டிய இடத்தில் மூக்கை வைத்திருந்தால் அப்போதும் மனிதத்தோற்றம் என்பது அவலட்சணமாகவும் வாழ்க்கை சங்கடத்திற்கும் உரியதாகவே ஆகிப் போயிருக்கும். இதுபோலவே கைகளை நீட்டவும், மடக்கவும் முழங்கையில் அமைக்கப்பட்டுள்ள பூட்டு இல்லாமல் போயிருந்தால் மனிதன் உணவை தனது வாய்வரை கொண்டு செல்லவே முடியாது போயிருக்கும். இவ்வாறே கால்களை நீட்டுவதற்கும், மடக்குவதற்கும் முழங்காலில் அமைக்கப்பட்டுள்ள பூட்டு இல்லாமல் போயிருந்தால் மனிதன் நின்று கொண்டேதான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் கீழே அமர்ந்தால் எழுந்திருக்க முடியாது.

இதேபோல நமது பார்வையில் தென்படும் வானத்தை பற்றி நாம் யோசித்துப் பார்ப்போமாயின் நமக்கும் வானத்திற்கும் இடையேயுள்ள தூரம் கிட்டதட்ட ஐநூறு ஆண்டுப் பயணத்திற்குரிய தொலை தூரமாகும் எனக் கூறப்படுகிறது. இதில் ஐநூறு ஆண்டுப் பயணத்திற்குரிய தொலை தூரம் என்பது நமது தலைக்கு மேலே உள்ள திசையை மட்டும் குறித்து சொல்லப்பட்டதா? அல்லது வலம், இடம், முன், பின் ஆகிய எல்லா திசைகளை குறித்தும் சொல்லப்பட்டதா என்பதை நாம் யோசித்தால் எல்லா திசைகளை குறித்தும் சொல்லப்பட்டதாகவே நமக்குத் தெரிகிறது.

அவ்வாறாயின் நாம் கடலின் கரைப்பகுதிக்குச் சென்று நமக்கு முன்னால் தென்படும் வெட்டவெளியை பார்ப்போமாயின் அங்கே நமது கண்பார்வைக்கு எட்டக்கூடிய முடிவில், அதாவது சுமார் பத்துமைல் தொலைவில் வானம் கவிழ்ந்திருப்பதையே போல பார்க்கிறோம். அதன்பின் ஒரு கப்பலில் ஏறி அந்தத் திசையை நோக்கிச் சென்று குறிப்பிட்ட அப்பத்தாவது மைலை அடைவோமாயின் அங்கேயும் வானம் கவிழ்ந்திருப்பதை தான் பார்க்கிறோம். இப்படியே நாம் நமது வாழ்நாள் முழுதும் சென்று கொண்டிருந்தாலும் வானமாக நமது பார்வைக்குத் தென்பட்ட அதே தோற்றத்தை தான் நாம் திரும்பத் திரும்ப பார்க்க வேண்டியுள்ளது. ஒருவேளை வானம் என்பது கண்டித்தலான ஒரு பொருளாக இருந்திருந்தால் அதனுடைய எல்லையை நம்மால் எட்டிப் பிடித்திருக்க முடியும். ஆனால் அது அகண்டப் பொருளாக இருப்பதால் ஆகாய விமானத்தில் சென்று பார்த்தாலும் கூட முன்பு பார்த்த அதே நிலைதான் அங்கேயும் நமக்குத் தென்படும்.

ஆதலால் நம்மை முன், பின், வலம், இடம், மேல், கீழ், உள் ,வெளி என எல்லாத் திசைகளிலும் நீக்கமறச் சூழ்ந்துஇ சர்வ சிருஷ்டிப் பொருட்களும் அதிலேயே இயங்கி அதிலேயே மாய்ந்து அழிந்து போவதற்குரிய ஸ்தானமாக இருக்கும் ஆகாயம் என்னும் **“வெட்ட வெளியில்“** வானமாகத் தோன்றும் நீல வர்ணத்தின் தூரமானது நாம் எங்கே இருந்தாலும் அதே தூரத்திலேயே இருப்பதாகத்தான் நமக்கு எக்காலத்திலும் தென்பட்டுக் கொண்டிருக்கும். அத்துடன் கற்பிதமாகிய அத்தோற்றம், கானல்நீர் கற்பிதமாக தண்ணீரைப் போன்று தோன்றுவதை போல உண்மையில் வானம் என்பது ஒரு கண்டித்தலான பொருளே அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே நாம் முன்பு வானம் என்பதானது பல தட்டுக்களாக அமைக்கப்பட்டுள்ளதென்றும், ஒரு தட்டுக்கும் மற்றொரு தட்டுக்கும் இடையே ஐநூறு வருடத் தொலைதூரம் உள்ளதென்றும், சூரிய, சந்திர, நட்சத்திரம் போன்றவைகளெல்லாம் அந்த வானத்தில் ஒட்டப்பட்டிருப்பதை போல பதிக்கப்பட்டு சுற்றி வருகின்றன என்றும் எண்ணிக் கொண்டிருந்தது தவறு என்றும், சூரிய நட்சத்திரங்கள் போன்ற கிரகங்கள் எல்லாம் கண்டித்தலான ஒரு பொருளை தமக்கு ஆதாரமாகக் கொண்டு அதை பற்றி நிற்காது ஏச பராபர சக்தியை கொண்டே வெட்ட வெளியில் நிலைத்து நின்று சுற்றி வருகின்றன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் வெட்டவெளி என்பது இதுதான் என்பதை விளக்கிக் காட்ட முடியாத ஓர் மாபெரும் ரகசியமாகும். இருப்பினும் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வெட்டவெளியைப் பற்றி கூறியிருக்கும் கவிதைகளில் இரு கவிதைகளை மட்டும் உங்களின் பார்வைக்குத் தருகிறோம்,...

**கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத**

**விண்ணடங்கா வெட்டவெளியே பராபரமே!**

என்றும்,

**பார்த்ததிக் கெங்குமொரு வெளியாகி**

**யென்பராபரப் பிரம வெளியுமாகிப்**

**பற்றுமன வெளியாகி மனவெளி**

**கடந்தமுப் பாழான வெளியுமாகிக்**

**கூர்த்தவறி வத்தனையு மேற்றபடி**

**கொள்ளையே கொண்டநடு வெளியுமாகி**

**கோடான கோடிபல வண்டபகி**

**ரண்டமுங் கொண்டபெரு வெளியுமாகி**

**சேர்த்தநிலை குலையுண்டு போகாது**

**நிலையுண்ட சிற்சத்தி வெளியுமாகி**

**செரியுமொளி புரியவடி யேனுமுமை**

**நம்பினேன் தெளிவுதந் தாளுதற்கே**

**வார்த்தைதப் பாதநாவுள்ளநீர்**

**பின்தொடர வள்ளலிரசூல் வருகவே**

**வளருமரு நிறைகுணங் குடிவாழு**

**மென்னிருகண் முஹ்யித்தீனே**! – என்பதாம்.

இதுபோன்றே பூமியைப் பற்றியும் நாம் கொஞ்சம் யோசிப்போமாயின் பூமியை ஒரு காளைமாடு தனது இரு கொம்புகளாலும் சுமந்து கொண்டிருப்பதாக சிலர் கூறியதுதான் நமது நினைவுக்கு வருகிறது. இதுபற்றி நாம் ஆய்வு செய்தபோது, அக்காளைமாடு எதன்மீது தங்கியுள்ளது என்னும் சந்தேகம் நமக்கு ஏற்பட்டதால் அதை அகற்றிக் கொள்வது அவசியமெனப் பட்டது.

பாருங்கள்! அக்காளைமாடு ஒரு திடப் பொருளாக (MAETRIAL) இருக்குமாயின் அது தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கும் ஒரு திடப்பொருள் தான் அதற்கு ஆதாரமாக இருக்க வேண்டுமெனத்தோன்றுகிறது. அப்படியானால் அவ்விரு பொருட்களும் நிலைத்திருப்பதற்கு அதற்குக் கீழேயும் ஒரு பூமி இருக்க வேண்டும். இப்படியே நாம் யோசித்துக் கொண்டே சென்றால் எல்லாமே காளைமாடு மயமாகிப் போய் நம்மால் எந்தவொரு தீர்மானத்திற்கும் வரமுடியாமலேயே போய்விடும். ஆதலால் பூமியும் எந்தவொரு திடப்பொருளையும் தனக்கு ஆதாரமாகக் கொண்டு நிலைத்திருக்காமல் அதுவும் ஏகபராபர சக்தியை கொண்டே வெட்டவெளியில் நிலைத்துள்ளது என்றுதான் கூற வேண்டியுள்ளது.

எவ்வாறெனில், காந்தம் இரும்பை தன்பக்கமாக இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல என்றுதான் சொல்ல வேண்டும்.அதாவது, காந்தம் இரும்பை பிடித்துக் கொள்ளும் தன்மையை மட்டும்தான் நாம் காந்தத்தில் பார்க்கிறோம். அதேநேரம் அந்த காந்தத்தின் தோற்றம் இதுதான் என்பதை நம்மால் காண முடியவில்லை.

இவ்வாறே மற்ற சிருஷ்டிப் பொருட்களிலும் மனிதனுடைய பிரயோஜனத்தை கருதி இறைவன் கணக்கில்லாத நூதனங்களை எல்லாம் அவைகளில் அமைத்திருக்கிறான். அவையனைத்தையும் விபரிப்பதென்றால் நூல் மிகவும் விரிவாகிவிடுமாதலால் சிலவற்றை மட்டும் உங்களின் விளக்கத்திற்காக வேண்டி இங்கே எடுத்துக் காட்டுகிறோம்.

அதாவது, குதிரையும் மாடும் மிருக இனத்தை சேர்ந்தவைகளாகும். இருப்பினும் அவை ஒவ்வொன்றும் வேறு வேறு காரணங்களுக்காக படைக்கப்பட்டுள்ளன. இதில் மாட்டின் வால்நுனியில் மட்டும் ரோமம் அதிகமாக ஒரு குஞ்சத்தை போல அமைந்திருப்பதால் அதைக்கொண்டு அது தனது தேகத்தில் வந்து அமரும் ஈ, கொசு, பூச்சி போன்றவைகளை வீசி விரட்டியடிக்கிறது. அதேநேரம் குதிரைக்கு அதனுடைய வால் முழுவதும் ரோமமாக இருந்தாலும் கூட அது தனது வாலைக் கொண்டு தனது தேகத்தில் வீசமுடியாத வண்ணம் படைக்கபட்டுள்ளது.

இதற்கு காரணம் என்னவெனில். குதிரை மனிதனை தனது முதுகில் சுமந்து செல்லக்கூடிய பிராணியாக படைக்கப்பட்டிருப்பதாக குதிரை ஒருவனை தனது முதுகில் சுமந்து கொண்டு போய் கொண்டிருக்கும்போது அது தனது வாலை வீசுமாயின் அதனால் மனிதனுக்கு துன்பம் ஏற்படும் என்பதற்காகவே அது தனது வாலை வீசமுடியாதவண்ணம் வால் முழுவதும் ரோமமாகவே படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

இதுபோன்றே ஆண் ஒட்டகத்திற்கு மற்ற மிருகங்களை போல அதனுடைய ஆண்குறறி முன்புறத்தை நோக்கியதாக இல்லாமல் பின்புறத்தை நோக்கி இருக்கும். இந்நிலையில் பெண் ஒட்டகையை அது உறவு கொள்ளும் போதுமட்டும் தனது குறியை அது முன்பக்கமாக தட்டத்தட்ட முன்புறத்தை நோக்கி திரும்பும்வண்ணம் படைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், ஒட்டகத்தின் வயிற்றுப் பகுதியில் மனிதன் தொட்டில்கட்டி அதில் ஏறிச் செல்வதால் அவ்வாறு ஏறிச் சென்று கொண்டிருக்கும்போது சிறுநீர் கழிக்குமாயின் அது மனிதன் மீது விழுந்து அவனை அசுத்தமாக்குவதோடு அதனால் அவனுக்கு கஷ்டமும் ஏற்படும் என்பதால் இவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் இதுபோன்றே கோடானகோடி படைப்புக்களுக்கும் அவைகளின் தன்மைகளுக்கும் தக்கவாறு அவைகளின் மீது கருணை புரியப்பட்டுள்ளது என்பதையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும். எவ்வாறெனில், ஒரு பெண், குழந்தை ஒன்றை பெற்றெடுப்பதென்றால் அதற்காக அவள் எத்தனை வகையான மருந்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டியுள்ளது. அதன்பின் குழந்தை பிறந்ததும் அக்குழந்தையை தூக்கி அதனுடைய தாய் தனது மார்பில் வைத்து பாலூட்டவும் வேண்டியுள்ளது. ஆனால் இதுவே ஒரு மாடாகவோ அல்லது ஆடாகவோ அல்லது வேறு ஏதேனம் ஒரு மிருகமாகவோ இருந்தால் அது ஒரு குட்டியை ஈன்றால் அதற்காக எந்தவொரு மருந்தோ அல்லது மாத்திரையோ அவைகளுக்கு தேவைப்படுவதில்லை. இதுபோலவே அக்குட்டிகளுக்குரிய பால் எங்கே இருக்கிறது என்பதையும் அவைகளுக்கு யாரும் காட்டித்தர வேண்டிய அவசியமும் ஏற்படுவதில்லை.

இவ்வாறே நாயும் பூனையும் குட்டிகளை ஈன்றால் அக்குட்டிகளுக்கு தேகத்தில் பலம் ஏற்படும் வரை அவைகள் தமது கண் கை திறக்கமுடியாவண்ணம் படைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், அவைகளளின் தாய் இரைச தேடுவதற்காக வெளியே எங்காவது சென்று விட்டால் அக்குட்டிகள் தமது இடத்தை விட்டும் வெளியே எங்காவது சென்று தமது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டு விடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். இதுபோன்றே மரங்களில் வாழும் பறவைகளின் குஞ்சுகளும் பிறக்கும்போதே தமது கண்களை திறக்கமுடியாவண்ணமே படைக்கப்பட்டிருப்பதற்கும் இதுதான் காரணமாகும்.

அதேநேரம் கோழியும் வாத்தும் பறவைகளுடைய இனத்தை சேர்ந்ததாக இருந்தாலும் அவைகளுக்குள் மேற்கண்ட பறவைகளுக்குரிய நிலைகளை ஏற்படுத்தாமல் அவைள் முட்டையை விட்டு வெளியே வரும்போதே தமது கண்களை திறந்தவாறு பிறந்து வருவதையும் தமது உணவை தாமே திண்ணக்கூடியதாகவம் படைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் கோழி போன்றவை தமது குஞ்சுகளை விட்டு அகலாது தன்னுடனேயே வைத்துப் பாதுகாக்கும் நிலைதான் இதற்குக் காரணமாகும்...

இதுபோன்றே ஆடு, மாடு, குதிரை போன்றவைகளும் தனது குட்டிகளை விட்டு அகலாது அவைகளுடனேயே இருந்து பாதுகாத்து வருவதால் அவைகளின் குட்டிகளையும் கண்களை மூடிய நிலையில் பிறக்கச் செய்யாது பிறக்கும்போதே கண்களை திறந்த நிலையில் படைக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோல தவாரங்களை குறித்து யோசிப்போமாயின் அவைகளுக்குள் ஒரு நுட்பமான அறிவு இருப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அதாவது, ஒரு தேங்காயையும், மாங்காயையும் எடுத்து மண்ணில் புதைத்து வைத்தால் அதிலிருந்து தென்னை மரமும் மாமரமும் வெளிப்பட்டு ஆயிரக்கணக்கான இலைகளும், காய்களும், கனிகளும் வெளிப்படுகின்றன.

ஒருவேளை அந்த இலைகளும், காய்களும், பூக்களும், பழங்களும் அந்த வித்துக்குள் தான் இருந்ததோ என்று பார்த்தால் விஷயம் அவ்வாறு இல்லை என்பதோடு, மாறாக பௌதீகம் என்னும் மண், தண்ணீர், காற்று, நெருப்பு போன்றவைகள் சிருஷ்டிப் பொருட்களின் வெளிப்பாட்டுக்குரிய காரணப் பொருளாகவும் அவைகளின் சத்துக்களுடைய பரமாணுக்களாகவும் இருப்பதால் தத்தம் தமது இனத்திற்குரிய வித்துக்களை அவை தாவிப்படித்து திடப்பொருளின் உருவங்களாக திரண்டு எழுவதாகவே நமக்குத் தெரியவருகிறது.

மேலும் அவ்வாறு தனது இனத்தை சார்ந்த வித்துக்களை அவைகள் உணர்ந்து தாவிப் பிடிப்பதற்குரிய அதிநுட்பமான அறிவு அப்பரமாணுக்களில் நிறைந்திருப்பதாகவும் நமக்குத் தெரியவருகிறது. இந்நிலையில் அப்பரமாணுக்களை இல்முல்யகீனை உடையவர்களில் சிலர் தமது வெளிப்படையான கண்களை கொண்டு காணவும் செய்கின்றனர். இதனாலேயே மண்ணுடைய அணுக்களின் பங்கு அதிகமாக இருக்கும் கனிகளின் சுவை இலைப்பாகவும், நீருடைய அணுக்களின் பங்கு அதிகமாக இருக்கும் கனிகளின் சுவை இனிப்பாகவும்,

காற்றுடைய அணுக்களின் பங்கு அதிகமாக இருக்கும் கனிகளின் சுவை புளிப்பாகவும், நெருப்புடைய அணுக்களின் பங்கு அதிகமாக இருக்கும் கனிகளின் சுவை கசப்பாகவும் இருக்கின்றன. இதன்பின் ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளும் தமது அழிவை நோக்கித் திரும்பும்போது அவைகளில் உள்ள ஒவ்வொரு அணுவும் அவைகளை விட்டும் தனித்தனியே பிரிந்து தமது அசலோடு போய் சேர்ந்து கொள்கின்றன என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

இத்தனை கருணையை, கிருபையை கணக்கின்றி தனது சிருஷ்டிப் பொருட்களின் மீது அள்ளி அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கும் இறைவன், நமது தேகத்தில் நகம், ரோமம் போன்றவற்றை மட்டும் ஒரு குறிப்பிட்ட அளவோடு கட்டுப்படுத்தி நிறுத்தி விடாமல் தொடர்ந்து வளரச் செய்வதோடு அதைப் பற்றி மார்க்கத்தில் நமக்கு கட்டளையும் இட்டிருப்பதற்கு காரணம், ஒவ்வொருவரும் மார்க்கத்திற்கு எத்தனை தூரம் கட்டுப்பட்டு நடக்கிறார் என்பதை அவர்களே சிந்தித்துப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே எனில் மிகையாகாது.

இவைகளையெல்லாம் நாம் ஆராய்ந்து உணராத காரணத்தினாலேயே நம்மிடையே பெரும்பாலோர் இவ்விஷயத்தில் கூட மார்க்கத்திற்குக் கட்டுப்படாது, தாடி வைத்தேயாக வேண்டுமா? மீசையை கத்தரித்தே தீர வேண்டுமா? என்றெல்லாம் கிண்டலும், கேலியும் பேசுகின்றனர். இனியாவது இவர்கள் இதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். ஆம். மற்ற உறுப்புக்களை போல ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி அவைகளை அகற்றினால் சங்கடத்தை ஏற்படுத்தும்வண்ணம் படைக்கப்பட்டிருந்தால் என்னவாகும் என்பதை இவர்கள் யோசித்திருந்தால் இப்படிப்பட்ட நன்றிகெட்ட கிண்டலும், கேலியும் இவர்களுடைய நாவிலிருந்து வெளிப்பட்டிருக்காது.

இத்தனை நிறைவான தோற்றத்தையும் தேகத்தையும் தத்துவத்தையும் தானே சிருஷ்டித்துக் கொண்டு வந்திருப்பதைப் போல வீரம் பேசும் ஒருவனை ஒரு எறும்பு கடித்து விட்டால்போதும். ஆவென்று அலறுகிறான். தேகத்திலுள்ள ஒரு நரம்பு சுருண்டு கொண்டால் போதும். ஓவென்று ஓலமிடுகிறான். மூளையிலுள்ள ஒரு சல்லி நரம்பு அறுந்து விட்டால் போதும். பைத்தியமாகவே ஆகி விடுகிறான். இந்நிலையில் செல்வத்தை தேடி அதைக் கொண்டு ஆகாரத்தை உண்பவன் தானே தனது பசியை அடக்கி விட்டதாக வல்லமை பேசுகிறான்.

இதுபோன்றே வயிற்றுக்குள் சென்ற உணவை பக்குவப்படுத்தி அதை ரத்தமாகவும், கொழுப்பாகவும், சதையாகவும், மலமாகவும், ஜலமாகவும் மாற்றுவது யாரென்று கேட்டால் பதிலளிக்க வழி தெரியாமல் விழிக்கிறான். இவ்வாறே ஒரு நாளைக்கு மலஜலம் வெளியாகாவிட்டால் வயிறு உப்பிப் போய் வேதனைப்படுகிறான். அல்லது அளவுக்கதிகமாக மடை திறந்ததுபோல் ஓட ஆரம்பித்து விட்டால் நெடுமரம் போல் விழுந்து ஆண்டவனே! ரட்சகனே! என உதவி தேடத் துவங்கி விடுகிறான். ஆனால் இறைவன் என்ன கூறுகிறான் என்று பாருங்கள்...

وَنَفَخْتُ فِيْهِ مِنْ رُّوْحِيْ

**“நான் மனிதனுக்குள் எனது ஆன்மாவிலிருந்து ஆன்மாவை ஊதினேன்“** என வேதத்திலும்....

خَلَقَ اللهُ آدَمَ عَلٰى صُوْرَةِ الرَّحْمَان

**“இறைவன் மனிதனை ரஹ்மானுடைய தோற்றத்தில் படைத்தான்“** என்றும்....

خَلَقَ اللهُ آدَمَ عَلٰى صُوْرَتِهٖ

**“இறைவன் மனிதனை தனதுகோலத்தில் படைத்தான்“**

என்றும் ஹதீதே குத்ஸியில் சொல்லப்பட்டிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் இதுபற்றி நாம் யோசிக்க வேண்டிய விஷயம் யாதெனில், நமது தேகமானது ஒரு குதிரையைப் போலவும், “**ரூஹே இன்சானி**“யா(மனித ஆன்மாவா)னது அதில் சவாரி செய்யும் எஜமானை போலிருக்கிறது. இதில் எஜமானாகிய ரூஹே இன்சானி(மனித ஆன்மா) இந்த பூமிக்கு வந்த நோக்கம் முழுமை பெறும்வரை அதற்கு புலன்களென்னும் வேலையாட்கள் தேவைப்பட்டன. இந்நிலையில் அப்புலன்கள் தங்கியிருப்பதற்கு ஒரு தேகம் தேவைப்பட்டது. இதில் தேகம் உணவு மற்றும் பானங்களை கொண்டு பாதுகாக்கப்பட வேண்டியிருப்பதால் அதற்காக ஒரு தொழிலை செய்து பொருளீட்ட வேண்டியதாயிற்று.

ஆனால் தொழில் செய்வதில் ஏற்பட்ட வேற்றுமை மற்றும் போட்டிகள் காரணமாக ஒருவருக்கொருவர் பொறாமை கொண்டு விவகாரம் செய்வதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இனி விவகாரம் தலைதூக்கியபோது அதை தீர்த்துவைக்க அரசாங்கம் தேவைப்பட்டது. அதன்பின் அரசாங்கத்தை பாதுகாக்க படைகளும், பரிவாரங்களும், கப்பலும், விமானமும், யுத்தத்திற்குரிய தளவாடங்களும், படை வீரர்களும் தேவைப்பட்டன. இதனாலேயே இதைப்பற்றி இறைவன் கூறும்போது,...

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ بِمَا كَسَبَتْ اَيْدِي النَّاسِ

**“மனிதர்களின் கரங்கள் செய்தவற்றை கொண்டு கடலிலும் கரையிலும் குழப்பம் வெளியாகி விட்டது“**

என்பதாகக் கூறுகிறான். எனவே வேற்றுமை என்னும் தோஷத்தால் ஜனித்த இந்நோய்க்கு “**லாஇலாஹ இல்லல்லாஹ்**“ என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை ஆய்ந்தறிய ஒரு காமிலான ஷெய்கிடம் பைஅத்துப் பெற்று மார்க்கத்தின் கட்டளைக்கேற்ப வாழ்ந்து

வருவதே சரியான மருந்தாகும். இதைப் பற்றி ஹழ்ரத் அஷ்ஷாஹ் மௌலா முஹம்மது கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**வேற்றுமை யென்னும் வியாதி பிடித்தோர்க்கு**

**சாற்று மருந்துதான் தௌஹீது –ஏற்ற**

**ஷரீஅத்து பத்தியமாஞ் சார்ந்தறிந்து**

**கொள்வாய் பெரிய வைத்தியனாம் பீர்**

என்பதாகக் கூறுகின்றனர். ஆதலால் இவையனைத்தையும் நாம்ஆழமாக கவனித்து இறைவனை அவனுடைய தன்மயம் மற்றும் குணாதிசியங்களை கொண்டு நோட்டமிட்டு அறிய வேண்டியது நமது கடமையாகும்.

**ஜீவ காருண்யம்**

இவ்வுலகில் பட்டாடை உடுத்தி ஏழைகளை ஏளனம் செய்து ஒய்யாராமாகக் குலுக்கி நடந்து வாகனங்களில் ஏறிச்சுற்றும் இந்த தேகம் இதற்குள் உறைந்துள்ள ஆன்மா என்னும்“ ரூஹே இன்சானி என்பது மட்டும் இதை விட்டும் பிரிந்து விட்டால் அக்கணத்திலேயே அது பிணம் என்னும் பெயருக்கு மாறிப்போய் நாற்றமெடுத்து அதை கொண்டுபோய் மண்ணில் புதைப்பதையும்இ சில நாட்களுக்குப் பின் அக்குழியைத் தோண்டிப் பார்த்தால் அப்பிணம் கூட அங்கே இல்லாதிருப்பதையும் பார்க்கிறோம்.

இதற்குக் காரணம், அந்த தேகத்திற்குச் சொந்தமான “**உஜூத்**“ என்னும் உள்ளமைக்குரிய பொருள் இல்லாமல் போனதால் அந்த தேகத்திற்குரிய மூலப் பொருட்களான மண்“, தண்ணீர்,காற்று, நெருப்பு போன்ற பௌதீகங்கள் தத்தம் தமது அசலை நோக்கித் திரும்பி விட்டதும், தற்போது அந்நான்கு பௌதீகங்களுக்கும் சொந்தமான உஜூத் இப்போது இருக்கிறதாக என்று பார்த்தால் அது இல்லையென்றும், அதனாலேயே அதற்கு மூலமாக இருந்த வறட்சி, சதுப்பு, குளிர்ச்சி, உஷ்ணம் போன்றவை தத்தம் தமது அசலின் பக்கமாகத் திரும்பி விட்டன என்றும், இந்நிலையில் உஜூத் எனக் கூறப்பட்டதன் எதார்த்தம் என்ன என்பதை நாம் கவனித்தால் அவை “**நூரெ முகம்மதிய்யா**“வின் “**மழ்ஹர்**“(தோற்றங்)களாக இருக்கின்றன என்றும், நூருடைய எதார்த்தம் என்ன என்பதை கவனித்தால் அது ஒப்புயர்வற்ற மட்டிட முடியாத தன்மயப் பொருளான வெட்டவெளியாகவே இருக்கிறதென்றும் தெரியவருகிறது. உண்மைநிலை இவ்வாறு இருப்பதாலேயே...

أَنَا مِنْ نُوْرِ اللهِ وَكُلُّ شَيْءٍ مِنْ نُوْرِيْ

**“நான் இறைவனுடைய நூரில் நின்றும் இருக்கிறேன். சிருஷ்டிப் பொருட்கள் அனைத்தும் எனது நூரில் நின்றும் உள்ளன“** என்றும்....

لَاتَدْخُلُ شَوْكَةٌ رَجُلِ اَحَدِكُمْ اِلَّا وَجَدْتُّ اَلَمَهُ

**“ஒருவனுடைய காலில் முள்ளொன்று தைத்தால் அதனுடைய வேதனையை அனுபவிப்பவன் என்னைத் தவிர வேறு யாருமில்லை“**

என்றும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். அற்புதமான இந்த நபிமொழிகளை கொண்டு, சர்வ ஜீவராசிகளும், தனது நாமங்கள் மற்றும் உருவங்களின் காரணமாக வெளவேறாகத் தோன்றினாலும் கூட அவைகளின் எதார்த்தத்தை கவனித்தால் அவையனைத்தும் ஒரே உள்ளமை பொருளுக்குரிய தோற்றங்களாகத் தான் இருக்கின்றன என்பதும் நமக்குத் தெரிய வருகிறது. இப்பேருண்மையை யார் தெரிந்து கொள்கிறாரோ அவர் இம்மண்ணிலுள்ள உயிர்களனைத்தையும் தமது உயிராகவே கண்டு ஒரு எறும்புக்குக் கூட தீங்கு நினைக்காத ஏகத்துவத்திற்குரிய விசுவாசம் என்பது அவருக்குள் வந்து விடும். மேலும் இக்கருத்தை உறுதிப்படுத்தும்வண்ணம்....

قُلْ كُلٌّ مِّنْ عِنْدِ اللهِ

**“(நபியே) எல்லாமே இறைவனில் நின்றுமுள்ளவைதான் என்று சொல்லும்“**

என்னும் வேதவாக்கியத்தையும் விளங்கிக் கொள்வர். அத்துடன் இதே கருத்தை பிரதிபலிக்கும்வண்ணம் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**எவ்வுயிரும் எமதுயிரென் றெண்ணியெண்ணிச்**

**சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே!**

என்றும் கூறுவதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகையால் இந்த ஏகத்துவத்திற்குரிய விசுவாசம் உள்ளத்தில் அழுத்தமாகி சகல சிருஷ்டிப் பொருட்களும் தனது அந்தரங்கமாகிய ஒரே மெய்ப்பொருளின் தோற்றம்தான் என்னும் உறுதி ஏற்பட்டு அவைகளுக்கு உதவி செய்யும்வண்ணம் எவரது சுபாவம் மாறிப் போகுமோ அவரை ஆரிப் என்றும் இத்தன்மைக்கு ஜீவகாருண்யம் என்றும் சொல்லப்படும்.

இப்படிப்பட்டோரை துஷ்ட மிருகங்களோ. ஜந்துக்களோ துன்புறுத்தாது. மாறாக. அவைகள் அவர்களுடைய கட்டளைக்கு வழிப்பட்டு நடக்கும். இதனால்தான் இறைநேசர்களுக்கு துஷ்ட மிருகங்களும். ஜந்துக்களும் வழிப்பட்டு ஊழியம் செய்யக் கூடியவைகளாக இ'ருக்கின்றன. ஆகையால் தீவிரமாக முயற்சி செய்து பாடுபடுவதன் மூலம் யார் இறையருளைக் கொண்டு உயர்ந்த பதவியை அடைகிறாரோ அவர் வார்த்தைகளால் விபரிக்க முடியாத பாக்கியங்களை எல்லாம் பெற்று இவ்வுலக சுகங்களை வெறுத்து ஒதுங்கக் கூடியவராகி விடுவார்.

மேற்காணும் இவ்விளக்கங்களை கொண்டு தேகத்தின் ஆராய்ச்சி என்பது இதுதான் என்றும். ஜீவகாருண்யம் என்பது இதுதான் என்றும் அறிவாளர்கள் அறிந்து கொள்வர்.

மேலும் இத்தேகம் தனது விருப்பத்திற்குத் தக்கவாறு எந்தவொரு காரியத்தையும் செய்வதற்குக்கூட சக்தியற்றதாகத்தான் இருக்கிறதென்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். உதாரணமாக. செல்வந்தர்களுடைய இல்லத் திருமணங்களின் போது மேளதாளத்துடன் ஊர்வலம் சுற்றி வரும் அந்த ஊர்வலத்திற்கு முன்னால் மயிலைப் போலவும். மாட்டைப் போலவும் ஒரு உருவம் வருவதை நம்மிலே பெரும்பாலோர் பார்த்திருக்கலாம்.

அது என்னவெனில். மூங்கில் சட்டங்களை கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு பொம்மையை மனிதன் செய்து அதை கயிற்றால் பிணைத்து அதற்குமேல் பல்வேறு வர்ணங்களை தீட்டி அதற்குள்ளே அவன் ஒளிந்து கொண்டு ஆடுவதை நாம் பார்த்திருக்கலாம். இதில் நாம் சிறுவர்களாக இருக்கும்போது அந்த உருவம் சுயமாக தானே ஆடுகிறது என்பதாக நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் பின்னர் நமது குழந்தை பருவம் நம்மை விட்டும் அகன்று நாம் வாலிபப் பருவத்தை அடைந்தபோது நமக்குள் பிரகாசிக்கத் துவங்கிய நமது அறிவு, அந்த உருவத்தை நன்றாக உற்றுப்பார். பூமியின் மட்டத்திலிருந்து சுமார் இரண்டரை அடி உயரத்தில் மனிதனுடைய கால் தெரிகிறதல்லவா?

அப்படியானால் இந்த பொம்மை தானாக ஆடவில்லை. அதற்குள் ஒரு மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான். அதை நாம்தான் இத்தனை காலமும் தெரிந்து கொள்ளவில்லை. இப்போதாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைத்து அவ்வுருவத்தை பின்தொடர்ந்து சென்று அவன் பார்க்கும்போதுஇ அதற்குள்ளிருந்து ஒரு மனிதன் வெளிப்பட்டு அந்த உருவத்தை கீழே தள்ளிவிடுவதை பார்க்கிறான். அவ்வாறாயின் இத்தனை நேரமும் அந்த உருவத்தை ஆட்டி வைத்தது மனிதன்தான் என்றும், அந்த உருவத்திற்கென்று சுயமான எந்தத் தத்துவமும் இல்லை என்பதையும் தெரிந்து கொள்கிறான்.

இதுபோன்று தான் மனிதனுடைய தேகமும் ஹக்காகிய இறைவனைக் கொண்டு ஆட்டுவிக்கப்படுகிற ஒரு பொம்மையாகவே இருக்கிறதென்னும் ரகசியத்தை நாம் உய்த்துணர வேண்டும். ஏனெனில், நமது தேகமும் சிவப்பு அல்லது கறுப்பு நிறமுள்ள தோல், இறைச்சி, எலும்பு, நரம்பு, சதை, ஜவ்வு போன்றவைகளால் பின்னப்பட்டுள்ள ஒரு பொம்மையாகத்தான் இருக்கிறது.

**ஆராய்ச்சியின் மகிமை**

تفَكَّرُ سَاعَةٍ خَيْرٌ مِنْ عِبَادَةِ أَلْفِ سَنَةٍ

**“ஒரு வினாடி நேரம் ஆய்வு செய்தல் ஆயிரம் வருடத்திய வணக்கத்தைவிட மேலானது“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவிலுகின்றனர். இதனால் ஒருவனுக்கு ஆயிரம் ஆண்டுகள் வரை வாழும் ஆயுள் கொடுக்கப்பட்டு அவன் தனது அந்தரங்கம் இதுதான் என்பதை ஆராய்ந்து உணராமலேயே அவனுடைய வாழ்நாள் முழுவதும் அவன் வணங்கினாலும் அதைக் கொண்டு அவனால் எந்தப் பலனையும் பெற்றுக் கொள்ள முடியாதென்றும். அதைவிட ஒரு வினாடி நேரம் ஆராய்ச்சி செய்து தன்னை நோட்டமிட்டுப் பார்ப்பது அதிகமான பலனைக் கொடுக்குமென்றும் நமக்குத் தெரியவருகிறது. ஆகையால் யார் இம்முறையை பின்பற்றி நடக்கிறாரோ அவரே நேர்வழியை அறிந்து முக்தியைப் பெறுவார்.

பாருங்கள்! இவ்"வுலகக் காரியங்களை நடத்துவதற்குக் கூட ஆராய்ச்சி தேவை என்பதை நாம் தெரிந்துதான் வைத்திருக்கிறோம். அதாவது ஒருவன் தனது உற்றார், உறவினர் ,பெற்றோர் போன்றோரை நேசித்து அவர்களுக்குத் தக்கவாறு நடந்து கொள்வதற்கும், விரோதிகளின் சூழ்ச்சியை விட்டுத் தப்புவதற்கும் ஆராய்ச்சியின் அறிவே காரணமாகும். அவ்வாறின்றி ஆராய்ச்சி செய்யாது போனால் இக்காரியங்கள் அவனை அழிவென்னும் படுகுழியில் கொண்டுபோய் தள்ளிவிடும். இவ்வாறே மறுமை சம்பந்தமான விசயத்திலும் நாம் ஆராய்ச்சி செய்யாது போனால் இம்மனிதப்பிறவி முக்தியை பெற்றுக் கொள்ள வழியின்றி பாழாகிப் போய்விடும். ஆதலால் மஃரிபாவுடைய ஞானத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வழியில் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

**தனது அறியாமையை உணரும் வழி**

நம்மிலலே சிலரிடம், இறைவனென்ற ஒருவன் இருக்கிறான் என்பதாக நம்பிக்கை கொண்டுள்ளீரே! அவனுடைய இருப்பு எப்படிப்பட்டதென்று விசுவாசம் கொண்டுள்ளீர்? எனக் கேட்டால் அதற்கவர், அவன் சர்வ பரிபூரணனாக இருக்கிறான் என்றுதான் விசுவாசம் கொண்டுள்ளேன் என்பதாகக் கூறுவார். அப்படியானால் அவனுடைய சர்வ பரிபூரணத்தில் அவனல்லாத வேறு பொருள் ஏதேனும் அவனோடு கலந்திருக்க முடியுமா? எனக் கேட்டால், முடியாதென்று தான் கூறுவர்.

அப்படியானால் நீர் ஒரு பொருளாக இருப்பதாக எப்படி எண்ணிக் கொண்டிருக்கிறீர்? நீர் இருக்கும் ஸ்தானத்தில் இறைவன் எப்படி இருக்கிறான்? அல்லது அந்த ஸ்தானத்திலும் அவன் சர்வ பரிபூரணனாகத்தான் இருக்கிறான் எனில், அந்நிலையில் நீர் என்னும் பொருள் எங்கே? அல்லது நீர்தான் இருக்கிறீரென்று சொல்லப்பட்டால் அந்த ஸ்தானத்தில் இறைவன் இல்லையென்னும் அர்த்தம் ஏற்படுவதால், அவன் பரிபூரணனாக இருக்கிறான் என்னும் ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்திற்கு தோஷமல்லவா வந்து சேருகிறது? எனக் கேட்டால் அதற்கு பதில் சொல்லத் தெரியாமல் தயங்குவார் என்பதில் அறவே சந்தேகமில்லை.

இந்த ஸ்தானத்தில் இறைவன் சர்வ பரிபூரணனாக இருக்கிறான் என தனது நாவைக் கொண்டு சொன்ன வார்த்தையை, தன்னால் ஆதாரப்படுத்த முடியாமல் போனதற்குக் காரணம், **"லா இலாஹ இல்லல்லாஹ்"** என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவை காதால் கேட்டு அதனுடைய உண்மையான அர்த்தமும் கருத்தும் இதுதான் என்பதை உள்"ளத்தைக் கொண்டு

ஆராய்ந்து அறியாமல் போனதேயாகும். இதனாலேயே காயல்பட்டினம் உமர் வலியுல்லாஹ் அவர்கள்,...

فَأَيْنَ أَنَا إِذَا أَنْتَا بِذَاتِيْ دَائِمًا كُنْتَا

فَمَا بِنْتُ وَلَا بِنْتَا وَلَا تَأْبِيْنَنَا اللهُ

**"சதா நீ எப்போதும் உனது தன்மயத்தை கொண்டு இருக்கும்போது, நீ என்றபோது நான் என்பது எங்கே? (இல்லை) நீ (என்னை விட்டு) பிரியவில்லை. நமக்கிடையே நான் நீ என்னும் பிரிவுமில்லை** என்றும், ஹழ்ரத் ஷாஹ் மௌலா முஹம்மது கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.....

**உள்ளது தாத்தது தானே – அதை**

**உற்றுமே பார்க்க ஹுமூரது தானே**

**உள்ளும் புறமது தானே – மிக**

**வோங்குத் துவக்க முடிவது தானே!**

எனக் கூறியிருப்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் ஒருவன் இன்னொருவனை பார்த்து அவனுடைய பெயரை சொல்லி அழைப்பதானது, அவனுடைய தேகத்தை சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது. அத்துடன் ஆணென்றும், பெண்ணென்றும் கூறப்படுவதும், இவ்வாறே எல்லா சிருஷ்டிப் பொருட்களுக்கும் ஒரு பெயர் குறியீடாக ஆக்கப்படுவதற்கும் அவைகளின் தேகமே காரணமாக இருக்கிறது. இதில் உலகமென்னும் இப்பூமியில் வந்து பிறப்பதற்கு முன்பே நாம் நூரே முஹம்மதிய்யாவாக இருந்து அதன்பின்தான் இப்பூமிக்கு ஒரு தேகத்தோடு வந்து பிறந்திருக்கிறோம்.

இனி மரணமடைந்தால் இந்த தேகம் பிணமென்னும் பெயரை பெற்றுக் கொள்ளுமாதலால்" நாம் இப்பூமியில் வந்து பிறப்பதற்கு முன்பும் இருந்தோம். இவ்வாறே இப்பூமியில் வந்து பிறந்தபின் மரணமென்னும் பெயரைக் கொண்டு சவமென்னும் பெயரை பெற்றோம். இந்நிலையில் நமது தோற்றம் என்பது என்ன? நாம் ஆணா? பெண்ணா? ஆணுமல்ல. பெண்ணுமல்ல எனில், ஆணென்றும் பெண்ணென்றும் சொல்லமுடியாத அந்தப் பொருள் எது? இந்த ஆய்வுமுறை மனிதனுக்கு மட்டும் உரியதா? அல்லது எல்லா படைப்புக்களுக்கும் உரியதா?

இதுபோன்றே மனிதனாகிய நாம் நமது தேகத்தோடு உயிரோடிருக்கும் காலத்தில் இந்த தேகத்தின் உள்ளே இருக்கிறோமா? அல்லது தண்ணீரை குடம் சூழ்ந்திருப்பதைப் போல இந்த

தேகத்தை நாம் சூழ்ந்திருக்கிறோமா? அல்லது மாவம் சீனியும் கலந்திருப்பதைப்போல தேகத்தில் நாம் கலந்திருக்கிறோமா? இப்படியெல்லாம் நாம் நம்மை குறித்து யோசித்துப் பார்ப்போமாயின் எவ்விதத் தீர்மானத்திற்கும் வர முடியாமல் நமது புத்தியே மயங்குகிறது.

இருப்பினும் எந்தவிதமான நிறமோ அல்லது குறிப்போ அல்லது ஒப்புவமையோ சொல்ல முடியாதது இறைவனுடைய தோற்றம் ஒன்றுதான் என்றும், எல்“லா படைப்புகளின் தோற்றங்களும் பௌதீகப் பொருட்களான மண், தண்“ணீர், காற்று, நெருப்பு போன்றவைகளின் இணைப்புக்குரிய தன்மைகளாகவே இருப்பதால் அவைகள் தனித்தனியே பிரிந்து தத்தம் தமது அசலை நோக்கி திரும்பி விடுமாயின் தேகம் சரீரம் என்னும் தோற்றங்களெல்லாம் இல்லாமல் போய்விடும் என்றும், இந்த ஆராய்ச்சி முறை எல்லா படைப்புக்களுக்கும் உரியதாகவே இருக்கிறதென்றும், இதில் மனிதன் மட்டும் மற்ற படைப்புக்களை விட மேலானவனாக இருப்பதற்குக் காரணம், அவன் ஒரு அமானிதத்தை சுமந்துக் கொண்டு முக்தியடைவதற்குரிய துறையை நோக்கி வந்திருப்பதேயாகும் என்பதும் நமக்குத் தெரியவருகிறது. அது எவ்வாறெனில்.....

اِنَّا عَرَضْنَا الْاَمَانَةَ عَلَى السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَالْجِبَالِ فَاَبَيْنَ اَنْ يَّحْمِلْنَهَا وَاَشْفَقْنَ مِنْهَا وَحَمَلَهَا الْاِنْسَانُ اِنَّهٗ كَانَ

ظَلُوْمًا جَهُوْلًا

**“நாம் நமது அமானிதத்தை வானம்இ பூமி மற்றும் மலைகள் மீது எடுத்துக் காட்டியபோது அவைகள் அதனை சுமந்“து கொள்வதை விட்“டும் விலகிக் கொண்டன. ஆனால் மனிதன் அதனை சுமந்து கொண்டான். (அதன் காரணமாக) அவன் வரம்பு மீறுபவனாகவும் அறியாமைவாதியாகவும் ஆகிவிட்டான்.“**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான். இவ்வசனத்தில் வரம்பு மீறுபவன் என்றும், அறியாமைவாதி என்றும் கூறப்பட்டிருப்பதன் கருத்து யார் இறைவனுடைய ஏவல் மற்றும் விலக்கல்களை மறந்து மனம்போன போக்கில் நடந்து குற்றவாளியாகிறாரோ அவனைத்தான் இந்த வசனம் குறிக்கிறதேயன்றி இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்டு நடந்து முக்தியடைந்த இறைநேசர்களை குறிக்காதெனத் தெரியவருகிறது.

அது எவ்வாறெனில், ஒரு தந்தை தனது இருபிள்ளைகளையும் அழைத்து அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரம் ரூபாயை கொடுத்து அவர்களைத் தனித்தனியே தொழில் செய்யுமாறு சொன்னதில், ஒருவன் அப்பணத்தைக் கொண்டு நியாயமான வழியில் தெரில் செய்து லாபமீட்ட மற்றவனோ தன்னிடம் தரப்பட்ட பணத்தை தவறான வழியில் செலவு செய்து பணம் முழுவதையும் இழந்து நோயாளியாகவும் ஆகிவிடுவானாயின் பிந்தியவனை வரம்பு கடந்தவன் என்றும் அறியாமைவாதி என்றும் கூறுவது போலென்று சொல்லலாம்.

ஆதலால் மேற்கூறப்பட்ட முறையில் ஒருவன் தன்னை நோட்டமிட்டுப் பார்ப்பானாயின், அவன் தனது அசல் பூர்வீகம் இன்னதென்பதை **“லாஇலாஹ இல்லல்லாஹ்“** என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்தை உணராத காரணத்தினாலேயே “துவிதம்“ என்னும் கொள்கையில் சிக்கி தேடிக்கொண்ட நஷ்டம் இது என்பதையும் தெரிந்து கொள்வான்.

**சுவர்க்கம் நரகம் என்பதன் ரகசியம்.**

ஒவ்வொரு மனித தேகக் கூற்றிலும் எண்ணிலடங்கா குணங்கள் உள்ளன. அவையனைத்தையும் விபரிப்பதென்றால் நூல்மிகவும் பெரிதாகிவிடும். ஆதலால் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது **“கீமியாயெ ஸஆதத்“** என்னும் நூலில் மனிதனில் அமைந்துள்ள குணங்களை நான்கு வகையாக பிரித்துக் கூறியிருப்பதை இங்கே உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

1.வானவர்களின் குணம். 2. சாத்தானின் குணம். 3. மேய்கிற மிருகத்தின் குணம். 4 துஷ்ட மிருகத்தின் குணம். இந்நான்கு குணங்களும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அமைந்துள்ளது என்பதற்குரிய ஆதாரம் என்னவெனில், நமக்குள் நல்ல காரியங்களை தேடுவதும், தீய காரியங்களை வட்டு ஒதுங்குவதும், இறைவனுக்கும் அவனது திருத்தூதருக்கும் வழிப்படுவதுமான குணங்கள் இருப்பதால் அவற்றை கொண்டு வானவர்களின் தொழிலை செய்கிறோம்.

இதுபோன்றே கோள் சொல்லுதல், புறம் பேசுதல், கலகம் செய்தல், நம்பிக்கை மோசம் செய்தல், பெருமை அடித்தல் போன்ற குணங்கள் இருப்பதால் அவைகளால் சாத்தானின் தொழிலை செய்கிறோம். இவ்வாறே ஊண், இச்சை, போகஇச்சை, அதிகமான உறக்கம் போன்ற குணங்கள் இருப்பதால் அவைகளால் மேய்கிற மிருகத்தின் தொழிலை செய்கிறோம். இதேபோல கோபத்தின் காரணமாக நாம் நமது கரத்தாலும், நாவாலும், ஜனங்களை துன்புறுத்துவதால் துஷ்ட மிருகங்களின் தொழிலை செய்கிறோம்.

இந்நான்கு வகை குணங்களில் மனிதகுணம் என்பது வானவர்களின் குணமேயன்றி மற்ற குணங்களல்ல. ஆதலால் இந்த மூவகை குணங்களையும் நீக்கும் வண்ணம் கடுமையாக பாடுபடுவோமாயின் அவற்றை விட்டும் நீங்கி இறை தரிசனையை பெறுவதற்குரிய தகுதியை பெறலாம். இல்லையேல் நரகத்தை விட்டும் நம்மால் தப்பவே முடியாது.

இதனாலேயே.....

فَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَّرَهُ وَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَّرَهُ

**“ஒருவன் அணுவளவு நன்மை செய்தாலும் அதை அவன் கண்டு கொள்வான். இவ்வாறே ஒருவன் அணுவளவு தீமை செய்தாலும் அதையும் அவன் கண்டு கொள்வான்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறியிருப்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் இந்த வசனத்தின் கருத்து, மேய்கிற மிருகம், துஷ்டமிருகம், சாத்தானுடைய குணம் போன்றவைகளை எடுத்து நடந்து அதனால் ஆசை, கோபம், மோசம் போன்ற செயல்களில் சிக்கிக் கொள்வது மனிதனை தாழ்ந்த நிலைக்கு கொண்டு போய்விடும் என்பதையும், அவ்"வாறின்றி வானவர்களின் குணத்தை எடுத்து நடந்து இறைவனுக்கு வழிப்பட்டு மிருககுணம், சாத்தானுடைய குணம் போன்றவைகளில் சிக்காது அவற்றுக்கு தன்னை எஜமானாக ஆக்கிக் கொள்வது மனிதனை உயர்ந்த படித்தரத்திற்கு இட்டுச் செல்லும் என்பதாம். இதைப் பற்றி இறைவனும் தனது வேதத்தில்.....

يَوْمَ لَا يَنْفَعُ مَالٌ وَّلَا بَنُوْنَ اِلَّا مَنْ اَتَى اللّٰهَ بِقَلْبٍ سَلِيْمٍ

**"இறுதி நாளில் இறைவனிடம் பரிசுத்தமான உள்ளத்தை கொண்டு வந்தவர்களைத் தவிர, பொருளோ பிள்ளைகளோ அவர்களுக்கு எவ்விதப் பிரயோஜனத்தையும் கொடுக்காது"** என்பதாகக் கூறுகிறான்.

இனி சுவர்க்க நரகத்தைக் குறித்து மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள கருத்து யாதெனில், அதை விளக்குவதற்கு இங்கே ஒரு உவமானம் தேவைப்படுகிறது. அதாவது, ஒரு சிறுவன் வெயிலில் நின்று விளையாடிக் கொண்டிருந்தால் அதை காணும் அவனுடைய பெற்றோர், மகனே! வெயில் அதிகமாக இருப்பதால் அது உனது தேகத்தை சுருக்கிவிடும். ஆதலால் விளையாடுவதை விட்டு விட்டு வீட்டுக்கு வா என்று அழைக்கிறான். தந்தையின் குரலைக் கேட்கும் மகனோ விளையாட்டில் தனக்குள்ள இன்பத்தை விட்டும் நீங்க மனமின்றி தந்தையின் அழைப்புக்கு செவி சாய்க்காது விளையாட்டிலேயே லயித்திருக்கிறான்.

ஒருவேளை பயமுறுத்தினால் வந்து விடுவானென நினைக்கும் பெற்றோர். நீ வராவிட்டால் உன்னை பிரம்பால் அடிப்பேனென பயமுறுத்தி அவனை வீட்டுக்கு அழைத்து வருவதுண்டு. அல்லது பயமுறுத்துவதற்குப் பதிலாக ஆசைகாட்டியும் அழைத்து வருவதுண்டு.

அது எவ்வாறெனில், மகனே! நீ விளையாடிக் கொண்"டுள்ள பந்து நல்லதாக இல்லை. நான் கடைவீதியிலிருந்து நல்ல பந்து ஒன்றை உனக்காக வாங்கி வந்திருக்கிறேன். நீ வீட்டுக்கு வந்தால் அதை உனக்குத் தருவேனென்று சொன்னால் அதைக் கேட்கும் அச்சிறுவன் விளையாடுவதை விட்டு:விட்டு வீட்டுக்கு வந்து விடுவதுண்டு. அதன்பின் அவனது பெற்றோர் அவனோடு அன்பாகப் பேசி அவனுடைய தேகத்தை கழுவி சுத்தப்படுத்தி அழகான ஆடைகளளை அணியச் செய்து நல்ல உணவையும் குடிப்பையும் கொடுத்தால் அதை அவன் அருந்தி சந்தோஷமாக இருந்து விடுகிறான்.

இந்நிலையில் அவனுடைய பெற்றோர் அவன்மீது கொண்டுள்ள அன்பினால், அவனுக்காக தயாரித்து வைத்துள்ள நிஃமத்துக்களை பற்றி முன்பே அவனிடம் கூறியிருந்தால் அவன் விளையாடுவதை விட்டு விட்டு வீட்டு வந்திருக்க மாட்டான் என்பதை அவர்கள் தெரிந்து

வைத்திருந்ததால், அவனுடைய உள்ளம் எதை தழுவியதாக இருந்ததோ அதைப் பற்றி அவனுக்கு ஆசைகாட்டியோ அல்லது எதைக் கண்டு அவன் அஞ்சுவானோ அதைப்பற்றி அவனை பயமுறுத்தியோ தங்களின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வாறின்றி விளையாடிக் கொண்டுளுள அவனை நோக்கி, மகனே! நீ இந்த பந்து விளையாட்டை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்தால் உனக்கு ஒரு அழகான பெண்ணை திருமணம் செய்து வைப்பேன். அவளோடு நீ சந்தோஷமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டிருந்தால் அதை கேட்கம் அச்சிறுவன், பெண் என்பவளும் நம்மைப் போலவே ஒரு மனிதப் பிறவியாக இருப்பதால் அவளிடம் நமக்கென்ன சந்தோஷம் இருக்க முடியும்? நமக்கு பந்தில் தான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது என்றெண்ணி எனக்கு பெண் வேண்டாம். பந்தும்கோலியும் தான் வேண்டுமென்று கூறியிருப்பான் என்பதில் அறவே சந்தேகமில்லை.

அதன்பின் சிலகாலம் சென்று அவனுக்குள் வாலிபம் பூத்துக் குலுங்கி ஒரு பெண்ணை மணந்து அவளோடு சுகத்தை அனுபவிக்கும் போது, தமது தந்தை முன்னர் கூறியது அவனுக்கு நினைவுக்கு வருமாயின் தனது குழந்தை பருவத்தில் அச்சுகத்தை உணரக்கூடிய பக்குவம் தனக்கு இல்லாமல் போனதற்குக் காரணம், தான் வாலிபத்தை அடையாதிருந்ததே என்பதை தெரிந்து கொள்கிறான்.

இதுபோன்றே இறைவனும் தன்னுடைய நல்லடியார்களுக்கென தயார் செய்து வைத்துள்ள நிஃமத்துகளை பற்றி சொன்னால் பாமரர்களாகிய ஜனங்களின் புத்தி அதை விளங்கிக் கொள்ளாது என்பதால் அதை விளங்கிக் கொள்ளும் வகையில் சுவர்க்கத்தை பற்றியும், நரகத்தைப் பற்றியும் சொல்லிக் காட்டுகிறான். இதைத்தான் இறைவன் ஹதீதே குத்ஸியில்.....

أُعِدَّتْ لِعِبَادِيَ الصَّالِحِيْنَ مَا لَا عَيْنٌ رَاَتْ وَلَا اُذُنٌ سَمِعَتْ وَلَا خَطَرَ عَلٰى قَلْبِ بَشَرٍ

**“எனது நல்லடியார்களுக்கு எந்தக் கண்ணும் கண்டிராத எந்தச் செவியும் கேட்டிராத எந்த மனிதனின் உள்ளத்திலும் தோன்றியிராத நிஃமத்துக்களையெல்லாம் அவர்களுக்காக சித்தப்படுத்தப்பட்டுள்ளன“** என்பதாகக் கூறுகிறான்.

விஷயம் இவ்வாறு இருப்பதாலேயே மஃரிபாவுடைய அறிவைக் குறித்து ஆய்வு செய்து உண்மையை உணர்ந்து கொண்ட ஞானிகளெல்லாம் உலக சுகத்தையும், வெளிரங்கத்தில் பேசப்படும் சுவர்க்கத்தினுடைய சுகபோகங்களையும் விரும்பாது இறைதரிசனையை மட்டுமே பெற்றுக் கொள்வதற்காக பாடுபட்டனர். இன்னும்...

اَلدُّنْيَا حَرَامٌ عَلٰى اَهْلِ الْاٰخِرَةِ وَالْاٰخِرَةُ حَرَامٌ عَلٰى اَهْلِ الدُّنْيَا وَهُمَا حَرَامَانِ

**“உலகத்தை உடையோர் மீது மறுமை விலக்கப்பட்டதாகவும், மறுமையை உடையோர் மீது உலகம் விலக்கப்பட்டதாகவும் இருக்கிறது“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழியின் உண்மையான கருத்தை நாம் சிந்திப்போமாயின், யார் உலக சுகபோகங்களை அனுபவிப்பதில் முயற்சி செய்கிறாரோ அவர் சுவர்க்கத்துடைய இன்பங்களை அனுபவிக்க முடியாதென்றும், யார் சுவர்க்கத்துடைய இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர் உலகசுகபோகங்களை அனுபவிக்க முடியாதென்றும், இவ்வாறே யார் இறைதரிசனையை பெற்று முக்தியடைய வேண்டுமெனப் பாடுபடுகிறாரோ அவர் உலக சுகபோகங்களையும் சுவர்க்கத்தின் இன்பங்களையும் அனுபவிக்க விரும்பமாட்டார் என்பதும் நமக்குத் தெரிய வருகிறது.

இதில் இறைதரிசனையை பெற்று முக்தியடைவதில் எந்த வகையான இன்பங்களையும் அனுபவிக்கக்கூடிய நிலைகள் என்பது அறவே இல்லையெனக் கருதிவிடக் கூடாது. இப்படி நினைப்பது பேதபுத்தியாகும். ஏனெனில் அந்த இன்பம்தான் மற்ற இன்பங்கள் அனைத்தையும் விட மிக மிகப் பெரியதாகவும், அந்த இன்பம் சிற்றறிவைக் கொண்டு புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருப்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதனாலேயே இறைவன் தாவூத் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹி அறிவித்ததாக நபிமொழியில் கூறப்பட்டுள்ள செய்தி யாதெனில்....

يَا دَاوُدُ مَنْ اَظْلَمَ مِمَّنْ عَبَدَنِيْ لِجَنَّةٍ اَوْلِنَارٍ اِنَّمَا خَلَقْتُ النَّارَ سِياطًا اَسُوْطُ بِهِ عِبَادِيْ وَاَسُوْقُهُمْ اِلٰى خِدْمَتِيْ

وَخَلَقْتُ الْجَنَّةَ مُوْصِلًا لِعِبَادِيْ يُوْصِلُهُمْ اِلٰى جِوَارِيْ وَقُرْبِيْ يَا دَاوُدُ اَنَا اللّٰهُ لَا اِلٰهَ اِلَّا اَنَا فَمَنْ اَحَبَّنِيْ وَخَافَ عَذَابِيْ

فَلَمْ يَعْرِفْنِيْ حَقَّ مَعْرِفَتِيْ

**“தாவூதே! சுவர்க்கத்தை ஆசைப்பட்டோ, அல்லது நரகத்தை பார்த்தோ என்னை வணங்குவோனை விட அநியாயக்காரன் யார் இருக்கிறான்? ஏனெனில் நான் நரகைப் படைத்தது எனது அடியார்களை எதைக்கொண்டு அடித்து எனக்கு வழிப்படும் பாதைக்கு அவர்களை இழுப்“பேனோ அப்படிப்பட்ட ஒரு சாட்டையாக அது இருக்கிறது. இவ்வாறே சுவர்க்கத்தை படைத்தது அது எனது அடியார்களை என் சுமீபத்தளவிலும், எனது சமீபத்தளவிலும் இணைத்து வைக்கக்கூடியெ ஒன்றாக இருக்கிறது. எனவே தாவூதே! என்னைத் தவிர வேறொரு நாயன் இல்லையே அப்படிப்பட்ட நாயனாக நான் இருக்கிறேன். ஆகையால் யார் எனது தண்டனையை அஞ்சுவதோடு என்னை நேசித்துக் கொண்டும் இருக்கிறாதோன அவன் என்னை அறிய வேண்டிய முறைப்படி அறியவில்லை“** என்று கூறுகிறான்.

மேற்கண்ட நபிமொழியில் சுவர்க்கத்தை ஆசைப்பட்டோ அல்லது நரகத்தை பயந்தோ என்னை வணங்குபவன் அநியாயக்காரனெனக் கூறப்பட்டதற்குரிய உவமையானது, ஒரு தந்தை தனது மகனை அழைத்து ஒரு காரியத்தை செய்யுமாறு சொல்ல, மகனோ தந்தையின் கட்டளைக்கு

வழிப்பட்டு நடந்தால் தனக்கு சன்மானம் கிடைக்குமென ஆசைப்பட்“டோ ஒருவேளை வழிப்பட்டு நடக்காவிட்டால் தண்டனை கிடைக்குமெனப் பயந்தோ வழிப்பட்டு நடப்பானாயின் அவன் பிறந்தது முதல் பார்க்காத நன்றிகெட்ட ஒரு அநியாயக்காரனாகத்தான் அவன் இருக்கிறான் எனக் கூறப்படுவதைப் போன்றுதான் இதுவுமென்று சொல்ல வேண்டும்.

இனி இறை தண்டனையை குறித்து அஞ்சுவதோடு அவனை நேசிக்கவும் செய்பவன் இறைவனை அறியவேண்டிய முறைப்படி அறியவில்லை எனக்கூறப்பட்டதற்குரிய உவமையானதுஇ ஒரு அரசன் தனது பிரஜைகள் மீது நிறைவான அன்புவைத்து அவர்கள் நல்லொழுக்கத்தை கடைபிடித்து உயர்ந்த பதவிகளையெல்லாம் பெற வேண்டுமென எண்ணி அதற்காக சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அதை எல்லோரும் கடைபித்து வர வேண்டுமென்றும் இல்லையேல் அரச தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் கட்டளையிட்டு தனது பிரஜைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு, ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**பார்க்கப் பலவிதமாய் பல்லுயிருக் குள்ளிருந்தும்**

**ஆர்க்கும் தெரியாம லானாய் பராபரமே!**

எனக் கூறியிருப்பதை போல அரசனே தன்னை மறைத்துக் கொண்டு பல்வேறு வணண உடைகளை கொண்டு வேடமணிந்து அவர்களுடனேயே கலந்து உறவாடிக் கொண்டிருப்பதை அப்பிரஜைகள் உற்றுணர்ந்து அரசனை விளங்கி விசுவாசம் கொள்ளமல் தமது பேத்தியின் காரணமாக அரசன் தூரத்தில்தானே இருக்கிறான் என எண்ணிக் கொண்டு அவனுடைய தண்டனை என்னும் ஒரு வாக்கியத்தை மட்டும் காதால் கேட்டதற்காக அரசனை பயந்து விசுவாசிப்பதாகச் சொல்பவர் அரசனை அறியவேண்டிய முறைப்படி அறிந்து அவனை உள்ளன்போடு விசுவாசிக்காமல் போனதை போலன்று சொல்லலாம்.

அதேநேரம் இத்தகையோர் வணங்கும் வணக்கத்திற்கு நரகத்தின் பயமும், சுவர்க்கத்தின் ஆசையுமே காரணமாக இருப்பதால் இது நன்றிகெட்டத்தனமாகவே இருக்கிறதென்று தான் சொல்ல வேண்டும். காரணம் இறைவன் சுவர்க்கத்தையும், நரகத்தையும் படைக்காது தனது கட்டளைகளை மட்டும் விதிப்படுத்தி இருந்தால் நாம் அதற்கு வழிப்பட்டு நடந்திருப்போமென நம்புவதற்கு அறவே இடமில்லை. இதனாலேயே...

فَمَنْ كَانَ يَرْجُوْا لِقَاءَ رَبِّهٖ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖٓ اَحَدًا

**“ஒருவர் தமது இரட்சகனுடைய தரிசனையை ஆசிக்கின்றவராக இருந்தால் அவர் இணக்கமான நல்ல காரியங்களை செய்வாராக. அத்துடன் தனது ரட்சகனுடைய வணக்கத்தில் அவர் வேறு எதையும் இணைக்காதவராகவும் இருப்பாராக“** என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான்.

மேற்காணும் இறைவாக்குப்படி நாம் வணங்கும் வணக்கங்களில் இறைவனுடைய தரிசனையைத் தவிர வேறு எந்த எண்ணமும் இறைவனை தேடுவோருக்குள் இருக்கக் கூடாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனாலேயே...

اَوَّلُ الدِّيْنِ مَعْرِفَةُ الله

**"மார்க்கத்தில் முதன்மையானது இறைவனை அறிவதாகும்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். எனவே மார்க்கத்தின் எதார்த்தம் என்ன என்பதை ஆராய்ந்தறிய வேண்டியது நமது கடமையாகும். காரணம் அவ்வாறு அறியாவிட்டால் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்குரிய வழியை நம்மால் ஒருபோதும் தெரிந்து கொள்ளவே முடியாது. இதனாலேயே...

قَدْ اَفْلَحَ مَنْ تَزَكّٰى

**யார் தூய்மையடைந்தாரோ அவரே ஜெயமடைந்தார்**

என்பதாக இறைவன் கூறுகிறான். யார் சுவர்க்கத்தின் சுகத்திற்கும் நரக தண்டனைக்கும் முன்னுரிமை கொடுக்காது, உண்மையாக இறைதரிசனையை மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனப் பாடுபடுகிறாரோ அவருக்கு மற்றவர் யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே அந்த வழிக்குரிய ரகசியத்தை இறைவனே சொல்லிக் கொடுப்பான் .எப்படித் தெரியுமா?

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

**"நம்மைத் தேடி யார் முயற்சிசெய்கிறார்களோ அவர்களை நாம் நம்முடைய பாதையில் செலுத்துவோம்"**

என்பதாக இறைவனே கூறுகிறான். இவ்வசனத்தில் முயற்சி செய்தல் என்பதன் கருத்து, புலன்களின் இச்சைகளை விட்டொழித்தல் என்பதேயாகும். ஆதலால் இந்தவழியில் சாதனையோடு பாடுபட வேண்டுமாயின் அதற்குமுன் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை அறிய வேண்டியது மிக மிக அவசியமாகும். ஏனெனில்....

لَا يَقْبَلُ اللهُ تَعَالٰى عِبَادَةَ عَبْدٍ كُلَّهَا بِغَيْرِ مَعْرِفَةِ اللهِ وَاِنْ كَانَ فِي الْعِبَادَةِ اَلْفَ سَنَةٍ

**"இறைவனை அறிய வேண்டிய முறைப்படி அறியாமல் வணங்கும் ஒரு அடியானுடைய வணக்கங்களை இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டான் .அவன் ஆயிரம் ஆண்டுகள்வரை வணங்கினாலும் சரியே!"**

என்பதாக இறைவன் ஹதீதே குத்ஸியில் கூறுகிறான். மேலும் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது “**கீமியாயெ ஸஆதத்**“ என்னும் நூலில்,...

“பெரும்பான்மையோர் நன்கு யோசிப்பார்களாயின் அவர்கள் தமது மனோ இச்சைக்கு வழிப்பட்டவர்களாக இருப்பதை நாம் பார்க்கலாம். உண்மையில் இத்தகையோரின் நிலைமையை யாதெனில், இவர்கள் வெளித்தோற்றத்தில் மனிதர்களை போல தோன்றினாலும் மறுமையில் இவர்களின் சாயம் வெளுத்துப் போய்விடும். எவ்வாறெனில், எவருக்குள் ஆசையும், இச்சையும் மிகைத்திருந்ததோ அவன் தன்னை பன்றியின் உருவத்தில் காண்பான். இதன் காரணமாகவே ஓநாயை கனவில் கண்டால் அதற்குப் பலன் அவன் அசுத்தமானவன் எனக் கூறப்படுகிறது. காரணம் உறக்கமானது மரணத்திற்குரிய அறிகுறியாகும். உறக்கத்தின்போது அவன் இவ்வுலகின் தொடர்பை எல்லாம் அறுத்தெறிந்து கொண்டு விடுவதால் அகத்தில் மறைந்துள்ள தோற்றம் அவனுக்கு கனவில் வெளியாயிற்று. இவ்வாறே ஒவ்வொருவரும் தமது அந்தரங்கத்தில் எந்த மாதிரியான தோற்றத்தில் இருக்கிறார்களோ அதை அவர்கள் தமது உறக்கத்தில் காண்பார்கள்.“ என்பதாகக் கூறுகின்றனர். மேலும் இந்த ரகசியத்தை குறித்து சைக்கினையாக...

وَلَوْتَرٰىٓ اِذِ الْمُجْرِمُوْنَ نَاكِسُوْا رُءُوْسِهِمْ عِنْدَ رَبِّهِمْ

“**பாவிகள் ஒருபோது தமது இரட்சகனுடைய சமூகத்தில் தலை கவிழ்ந்தவர்களாக இருப்பதை நீர் காண்பீர்**“ என்றும்....

كَلَّا لَوْ تَعْلَمُوْنَ عِلْمَ الْيَقِيْنِ لَتَرَوُنَّ الْجَحِيْمَ ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ الْيَقِيْنِ

“**அவ்வாறல்ல. உங்களுக்கு இல்முல்யகீன் இருக்குமாயின் நீங்கள் நரகத்தை பார்ப்பீர்கள். அதுவும் கண்கூடாகப் பார்ப்பீர்கள்**“

என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இதில் முந்தைய வசனத்தல், பாவம் செய்தவர்கள் தமது ரட்சகனுடைய சமூகத்தில் தலை கவிழ்ந்தவர்களாக இருப்பதை ஒருபோது நீர் காண்பீர் எனக் கூறப்பட்டதன் எதார்த்தத்தை இல்முல் யகீனுடைய அறிவைப் பெற்றுள்ள அறிவாளர்கள் கூர்ந்து கவனிப்பார்களாயின் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளின் இருப்புத்தன்மையும் முகம் கவிழ்ந்ததாகவே படைக்கப்பட்டிருப்பதன் ரகசியம் இதுதான் என்பதையும்,மனிதத் தோற்றத்தின் இருப்பு மட்டும் முகம் நிமிர்ந்ததாக படைக்கப்பட்டிருப்பதன் ரகசியம் இதுதான் என்பதையும் தெரிந்து கொள்வார்கள்.

அடுத்து இரண்டாவது வசனத்தில், உங்களுக்கு இல்முல்யகீன் இருக்குமாயின் நரகத்தை பார்ப்பீர்கள் என்றும், அதுவும் கண்கூடாகப் பார்ப்பீர்கள் என்றும், கூறப்பட்டிருப்பதன் உண்மையான கருத்தை தெரிந்து கொள்ளாத வரை நமது உள்ளம் திகைப்பை விட்டும்

நீங்காது. காரணம் நீங்கள் கண்கூடாகப் பார்ப்பீர்கள் எனக் கூறப்பட்டுள்ள வாக்கியம் திடுக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதால் என்க.

எனவே மேற்கூறப்பட்ட ஆதாரங்களின் கருத்தை ஆராய்ந்தறிந்து நம'து செயல்பாடுகள் அனைத்தும் எப்படிப்பட்ட குணத்தின் மீது அமைந்துள்ளது என்பதை ஆழமாகக் கவனித்து உணர வேண்டும். எவ்வாறெனில், நம்மில் பொய் பேசுவதும், புறம் கூறுவதும், மோசம் செய்வதும், ஜனங்களிடையே சண்டை மூட்டுவதுமான குணங்கள் மிகைத்திருப்பதால் நமது அந்தரங்கத் தோற்றம் சாத்தானுடைய உருவத்தில் இருக்கிதென்றும், கோபம் மிகைத்திருந்தால் நமது அந்தரங்கத் தோற்றம் புலி மற்றும் ஓநாய் போன்ற துஷ்ட மிருகங்களின் உருவத்தில் இருக்கிறதென்றும்,பொறாமை மிகைத்திருந்தால் நாய், பாம்பு, தேள் போன்றவைகளின் உருவத்தில் இருக்கிறதென்றும், தந்திரம் மிகைத்திருந்தால் நரியுடைய உருவத்தில் இருக்கிறதென்றும், வஞ்சகம் மிகைத்திருந்தால் யானையின் உருவத்தில் இருக்கிறதென்றும், மடத்தனம் மிகைத்திருந்தால் கழுதையின் உருவத்தில் இருக்கிறதென்றும், விபச்சாரம், ஆண்புணர்ச்சி, அசுத்தத்தை விரும்புதல், வெட்கமின்மை, போன்ற குணங்கள் மிகைத்திருந்தால் பன்றியின் உருவத்தில் இருக்கிறதென்றும், உலகசுகபோகங்களை தேடும் குணம் மிகைத்திருந்தால் எறும்புடைய உருவத்தில் இருக்கிறதென்றும், நன்றிகெட்டதன்மை மிகைத்திருந்தால் குதிரையின் உருவத்தில் இருக்கிறதென்றும், இறைவனுக்கும் அவனது தூதருக்கும் வழிப்பட்டு நடத்தலும், அறிவைத் தேடலும், தீயகாரியங்களை விட்டு விலகலும், ஜனங்களுக்கு உபகாரம் செய்வதுமாகிய குணங்கள் மிகைத்திருந்தால் இறைதரிசனைக்கு தகுதிபெறும் வானவருடைய உருவத்தில் இருக்கிறதென்றும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனாலேயே...

وَفِيٓ أَنفُسِكُمۡۚ أَفَلَا تُبۡصِرُونَ

**"உங்களின் உள்ளத்திலேயே இருக்கிறது. அதை நீங்கள் பார்க்கவில்லையா?"**

என இறைவன் கேட்கிறான். இதன் கருத்து: நீங்கள் இறந்தால் பெறப்போகும் உங்களின் பதவிகளை நீங்கள் தெரிந்து கொள்வதற்கு உங்களின் செயல்பாடுகளே அதற்குப் போதிய ஆதாரமாக இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? என்பதாகும்.

மேலும் நாம் நமது செயல்பாடுகளை ஆராய்ந்தறிய வேண்டிய முறை எவ்வாறெனில்,நாம் ஒருவருடைய பொருளை அபகரிக்க எண்ணும்போது நமது மனசாட்சியை கொஞ்சம் உற்று நோக்குவோமாயின் அஃது அவ்வாறு செய்யக் கூடாதென மறுக்கிறது. அதற்கு நாம் கட்டுப்பட்டால் வானவரின் குணத்தை உடையவராகிறோம். எந்த குணத்தின் மீது நமது செயல் நிகழ்கிறதோ அக்குணத்தின் சக்தி அக்கணமே நமது உள்ளத்தில் உறைந்து விடுகிறது. அதுஅப்போது நமக்குத் தெரியாது. இருப்பினும் அந்த சக்தி நமது இறப்புக்குரிய நேரத்திலும் இறுதி நாளிலும் நம்மை தனது தோற்றதர்தின் பக்கமாகத் திருப்பி அக்குணத்தின் செயலையே நம்மிடமிருந்து வெளிப்படுத்தும். இதில் இறுதிநாள் என்பது வெகுதொலைவில் இருப்பதாக நாம்

எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் உண்மையை உற்றுநோக்கினால், ஒவ்வொருவரின் இறப்பும் அவரது மறுமைக்குரிய துவக்கம்தான். இதுதான் உண்மை என்பதை அடுத்து சொல்லப்படப் போகும் விபரங்களை கொண்டு நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இதுபற்றி அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்....

مَنْ مَاتَ فَقَدْ قَامَتْ قِيَامَهُ

**"எப்போது இறக்கிறாரோ அப்போதே அவருடைய மறுமை நிலையாகி விட்டது"**

எனக்கூறியுள்ள வாக்கியத்தை கொண்டு அறிவுள்ளோர் தெரிந்து கொள்ளக் கூடும். இதனாலேயே....

يُحْشَرُ النَّاسُ يَوْمَ الْقِيَامَةِ عَلٰى نِيَّاتِهِمْ

**"இறுதிநாளில் மனிதர்களை அவர்களுடைய எண்ணத்திற்கேற்பவே எழுப்பப்படும்."**

என்பதாகவும் ஏந்தல் நபியவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழியை விளங்கிக் கொள்ள சில ஆதாரங்கள் வேண்டும். அதாவது, உலகில் சாத்தானுடைய குணத்தையே தனதாகக் கொண்டு அக்குணம் மிகைத்துள்ள நிலையில் இறப்பவன், தான் இறந்தபின் சாத்தானுடைய தோற்றத்தில் வெளியாகி, உலகிலுள்ள மனிதர்களிடம் தாவி அவர்களுக்கு பல கெடுதிகளை செய்து கொண்டிருப்பான். இந்த இடத்தில் அவனால் துன்புறுத்தப்படுபவர் தனது உறவினரென்றோ, அன்னியரென்றோ வித்தியாசம் எதுவும் பார்க்க மாட்டான். யார் இறைவனை மறந்து வழிகேட்டில் இருக்கிறாரோ அவரிடம் தாவி அவரை வேதனை செய்வான்.

இதுபோன்றே இதர மிருகக் குணங்கள் மிகைத்துள்ள நிலையில் இறப்போனுடைய கதியையும் அறிவாளர்கள் ஆய்ந்தறிந்து கொள்க. ஏனெனில் இவ்விசயத்தை இதற்கு மேல் நூல்களில் விபரிக்கக் கூடாது.

மேலும் மார்க்கத்தில் கூறப்பட்டுள்ளவாறு இறந்தோரை எழுப்பி கேள்வி கணக்கு கேட்டு அவரவர் நன்மை தீமைக்குத் தக்கவாறு தீர்ப்பளித்து சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ அனுப்பப்படும். நாளாகிய இறுதிநாள் என்பது இன்னும் வராதிருக்க, இறைவனுடைய ஏவலுக்கும், விலக்கலுக்கும் கட்டுப்பட்டு நடந்து முக்தியடைந்த இறைநேசர்கள் மட்டும் எல்லா உலகங்களிலும் ஆட்சி செய்து கொண்டு மனிதர்களுக்கு இம்மை மறுமைக்குரிய காரியங்களில் உதவியும் செய்து வருவதன் காரணமென்ன? என்னும் ரகசியத்தையும், வழிகேட்டில் இறந்தவன் சாத்தானுடைய தோற்றமெடுத்து உலகில் வெளிப்பட்டு மனிதர்களை துன்புறுத்தி வருவதற்குரிய காரணமென்ன? என்னும் ரகசியத்தையும் ஆய்ந்தறிந்து உணர வேண்டியது

அவசியமாகும். மேலும் தக்கலை பீர் முகம்மது அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது ஞானப்பால் என்னும் நூலில்....

**பிறப்புட னிறப்பு மில்லை பிசகது தானுமில்லை**

**திறப்புக ழனைத்து மொன்றாய் நின்றது நிறைந்த ஜோதி**

**சிறப்புள வமுதமூட்டித் திருப்பதஞ் சேர்க்கும் ஞானத்**

**திறப்புக ளறிந்த பேர்க்குத் திறவுகோல் குருவதாமே!**

என்னும், ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**சென்மந்த தொலைத்தடிமை சின்மயமாய் நின்றிடவும்**

**கன்மந் தொலைத்தருள்வாய் கண்ணே பராபரமே!**

என்றும், ஹழ்ரத் ஷாஹ் மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது இர்ஃபானுஸ்ஸபா என்னும் நூலில்....

**படியாசை விட்டு நரகுக்குத் திடனாக அவ்வாசை**

**நீங்கு மட்டு மிந்நரகத் தேகம் விடா!**

என்றும் கூறியிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் ஸாலிஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஒட்டகமும், உஸைா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கழுதையும், இஸ்மாயீல் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஆடும், அஸ்ஹாபுல் கஹ்ஃபுகளின் நாயும், மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கைத்தடியும் சுவர்க்கத்திற்கு செல்லும் என்பதாக வேதத்தில் கூறப்பட்டிருப்பதன் ரகசியத்தை பற்றியும் ஆராய்ந்து பார்த்தபோது அவைகளெல்லாம் இவ்வகை கல்வியைச் சார்ந்த சைக்கினை என்றே நமக்குத் தெரியவருகிறது.

அது எவ்வாறெனில், மேற்கூறப்பட்ட ஒட்டகையும், ஆடும், நாயும் சுவர்க்கத்தில் அவைகளுடைய சொந்த உருவத்திலேயே உண்டு உலவும் எனில், அந்நிலையில் அவைகள் தமது மனவேதனையை விட்டும் நீங்க வழியில்லாது போய்விடும் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், அவை ஒவ்வொன்றும் வெளவேறு இனத்தைச் சார்ந்தவைகளாக இருப்பதால் ஒன்று இன்னொன்றை நேசித்து வாழுதல் என்பது இயலாது. இதில் கைத்தடியும் சுவர்க்கம் செல்லும் எனக் கூறப்பட்டிருப்பதால் அதற்கு உணவோ குடிப்போ எதுவும் அவசியமில்லை என்னும்போது அது சுவர்க்கத்தின் சுகபோகங்களை எப்படி அனுபவிக்க முடியும்? அதுமட்டுமா? சுவர்க்கத்திற்கு செல்லும் மனிதர்கள் அனைவரும் வாலிபர்களாக மாற்றப்பட்ட பின்னரே சுவர்க்கத்திற்கு செல்வார்கள் என நபிமொழியில் கூறப்பட்டுள்ளதால் மேற்கண்ட கழுதை, ஆடு, நாய், ஒட்டகம், கைத்தடி போன்றவை அவைகளுடைய அசல்

தோற்றத்திலேயே சுவர்க்கதிற்கு செல்லும் எனக் கூற வாய்ப்பில்லை. ஆதலால் அவைகளும் சுவர்க்கத்திற்குச் செல்லும் எனக் கூறப்பட்டிருப்பதன் தாத்பரியம் என்ன என்பதையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும்.

மேலும் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தனது பூர்வீகம் எது என்பதை அறிந்து கொள்வதற்காகவே தோற்றமெடுத்து வந்திருப்பதால் அந்த ரகசியத்தைஅறியும் பொருட்டு: புலன்கள்என்னும் தூதர்களை மனிதனுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் யார் அக்காரியங்களை நிறைவாக செய்து முடித்துக் கொண்டு செல்லவில்லையோ அவர் இறுதிநாளின் கேள்வி கணக்குக்கு பதிலளிக்க முடியாது போய்விடும் என்பது மட்டும் திண்ணம்.

விஷயம் இவ்வாறு இருப்பதால் பிறப்பிலேயே குருடராய், செவிடராய், ஊமையாய் பிறந்தவர் தனது பூர்வீகம் இன்னதென்பதை புலன்"களைக்கொண்டு அறியமுடியாவிட்டாலும் அவர்களும் கேள்வி கணக்கை விட்டுத் தப்ப முடியாதென மார்க்கத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், புலன்களை முழுமையாகப் பெற்று வந்தவனிடம் கேட்கப்படுவதை போலவே புலன்களில் குறையுள்ளவனாகப் பிறந்தவனிடமும் கேள்வி கணக்குக் கேட்பது நியாயமா? என்பதாம். இதைப்பற்றி நாம் யோசித்துப் பார்ப்போமாயின் நியாயமல்ல எனக் கூற வழியில்லை என்னும் முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

ஏனெனில் அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய இறைவன் நீதவான்களுக்கெல்லாம் நீதவானாக இருப்பதால் பரிசுத்தமான அவனுடைய திருச்சமூகத்தில் நீதத்திற்கு புறம்பானது என்பது நடைபெறுவதற்கு அறவே வழியில்லை. ஆதலால் இதிலுள்ள நீதத்திற்குரிய ரகசியமென்ன என்பதையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும்.

மேலும் ஒருவன் நூறு ஆண்டுகள் வரை ஜீவித்திருந்து மனிதர்களின் பார்வையில் அவன் நல்லவனாகத் தென்பட்ட போதிலும் அவனுடைய இறப்பிற்குப் பின் அவன் நல்லவன் என்றோ அல்லது தீயவன் என்றோ அறுதியிட்டுச் சொல்ல முடியாதென்றும், இவ்வாறே வேறொருவன் கணக்கில்லாத பாவங்களை செய்த நிலையில் அவன் தனது வாலிப வயதை எட்டுவதற்கு முன்பே இறந்துவிடுவானாயின் அவனை சுவர்க்கவாதி என்றும் மார்க்கத்தில் கூறப்பட்டுள்ளதற்குரிய காரணமென்ன என்பதையும் நாம் சிந்தித்துணர வேண்டும்.

மேலும் இறை நம்பிக்கையாளர்கள் ஜீவகாருண்யத்தை கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்காக செல்வோர் தையலில்லாத ஆடையை கட்டியது முதல் ஹஜ்ஜை முடிக்கும்வரை எந்தவொரு உயிரையும் துன்புறுத்தக் கூடாது என்றும், கொல்லக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம், பரிசுத்த இஸ்லாமாகிய கஃபாவுக்குச் சென்று புண்ணியம் தேடுவதில் எவ்விதத் தோஷமும் நேர்ந்து விடக் கூடாதென்பதற்காகவே. அப்படி இருந்தும் ஹஜ்ஜுக்குரிய கடமையை முடித்ததும் ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு ஆடு ,மாடு, ஒட்டகம்

போன்ற பிராணிகளை அறுத்து பலியிட வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டுள்ளது. இப்படிப் பலி கொடுப்பது அப்பிராணிகளுக்குச் செய்யும் பேருதவியாகும் எனில் அது மிகையாகாது.

ஆனால் அந்த உதவி எந்த முறையில் நடைபெறுகிறது என்னும் ரகசியத்தை பாமரர்களின் பேதபுத்தி புரிந்து கொள்ள முடியாதிருப்பதால் அப்பிராணிகளை வதைப்பதாகவே அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இக்கருத்தை ஆதாரமாகக் கொண்டே நாம் உண்ணக்கூடிய பிராணிகளையும், பறவைகளையும் தக்பீர் சொல்லி அறுக்க வேண்டுமென மார்க்கத்தில் கட்டளையிடப்பட்டுள்ளது. இந்த ரகசியத்தை புரிந்து கொள்ளாது நாவுடைய ருசிக்காக கண்டவர்களிடமெல்லாம் கத்தியை கொடுத்து அவற்றை கொன்று தின்று நமது தொப்பைகளை நாம் நிரப்பி வருகிறோம். இனி இதனுடைய எதார்த்தத்தை பார்க்கும்போது தக்பீர் சொல்லப்படாவிட்டால் அக்கரியம் கொலையாகவே முடியுமென்றுதான் கூற வேண்டியுள்ளது. காரணம், மேற்கூறப்பட்ட விசயத்தில் ஒருக்கால் அப்பிராணிகளை குர்பானி (பலி) கொடுப்பது அங்கேயுள்ள ஜனங்களின் பசியை போக்குவதற்காகத்தான் எனக் கூறப்பட்டால் இது மிக மிகத் தவறான ஒன்றென்றே நாம் கூறுவோம். காரணம், மனிதர்களின் பசியை போக்க எத்தனையோ வகையான தானியங்களும் கனி வர்க்கங்களும் இருக்க,அவற்றை பற்றியெல்லாம் கூறாது பிராணிகளை அறுக்க வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டதற்குரிய காரணமென்ன?

மேலும் குர்பானி (பலி) கொடுப்பதற்காக அறுக்கப்பட்ட பிராணிகளின் இறைச்சியை ஜனங்களுக்குத் தேவையான அளவு பங்கிட்டு முடித்தபின், மீதமாக இருப்பதை கொண்டுபோய் மண்ணில் புதைக்க வேண்டிய சூழ்நிலையிலும் கூட எவரேனும் குர்பானி கொடுக்காதிருந்தால் அவரும் ஒரு பிராணியை குர்பானி(பலி) கொடுத்தேயாக வேண்டுமென கட்டளையிடப்பட்டிருப்பதற்குரிய காரணமென்ன? என்பவைகளை எல்லாம் யோசித்துப் பார்த்தபோது , அப்பிராணிகளுக்கு உபகாரம் செய்வதற்குரிய ரகசியம் அதற்குள் மறைந்திருப்பதாலேயே அவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

ஆதலால் அந்த ரகசியம் என்னவென்பதை, ஆய்ந்தறிவதோடு குர்பானி என்னும் அரபி வாக்கியத்திற்கு தமிழில் **“சமீபமாக்கி வைத்தல்“** என அர்த்தம் வருவதால், எதில் எதை சமீபமாக்குதல் என்னும் ரகசியத்தையும் நாம் தெரிந்து கொள்ள முயலவேண்டும்.மேலும் ஹழ்ரத் முஹ்யித்தீன் ஃபகீர் ஆலிம் ஆரிப் பில்லாஹ் என்பார் தமது **“தரீகுல் ஜன்னா“** என்னும் நூலில், இறுதிநாளில் விசுவாசிகள் நிர்வாணிகளாகவும், விருத்தசேதனம் செய்யப்படாதவர்களாகவும் எழுந்து வருவார்கள் என கூறப்பட்டிருப்பதன் ரகசியம் என்ன என்பதையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும்.

பின்னும் மனிதர்களில் சுவர்க்கத்திற்குச் செல்வோர் அனைவரையும் வாலிபர்களாக மாற்றப்படும் என்பதாக நபிமொழியில் கூறப்பட்டுள்ளதன் பொருள் யாதெனில்இ சுவர்க்கம் என்பது சுகத்தை அனுபவிக்கக் கூடிய இடமாக இருப்பதால் அங்கே பெரியவர்களும் சிறுவர்களும் கலந்திருந்தால் சிறுவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டிய சங்கடத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும். இதை கருத்தில் கொண்டே அனைவரையும் வாலிபர்களாக மாற்றப்படும் எனக் கூறப்பட்டதா? அல்லது வாலிபத்தில் தான் சுகங்களை

முறையாக அனுபவிக்கமுடியுமாதலால் ஹூருல்ஈன் போன்ற பெண்களோடு சுகத்தைத அனுபவிப்பதற்காக அவ்வாறு மாற்றப்படும் என்பது கருத்தா? மேலும் சுவர்க்கம் என்பது பேரின்பத்திற்குரிய இடமா? அல்லது சிற்றின்பத்திற்குரிய இடமா? பேரின்பத்திற்குரிய இடமெனில், வயதை மாற்றியமைக்க வேண்டிய அவசியமென்ன? அல்லது சிற்றின்பத்திற்குரிய இடமெனில், சுவர்க்கத்தை சிற்றின்பத்திற்குரிய இடம் என்று சொல்லலாமா? சொல்ல முடியாதெனில், சிற்றின்பத்திற்குரிய கருத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டு ஹூருல்ஈன் போன்ற பெண்களை அடையத் தேடுகின்ற சுவர்க்கம் எங்கே இருக்கிறது? இவ்வாறே பேரின்பத்திற்குரிய சுவர்க்கம் எங்கே இருக்கிறது? இதைப் பற்றி இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது **"கீமியாயெ சஆதத்"** என்னும் நூலில்...

**"இறைவனுடைய ஜமால் என்னும் பேரழகை தரிசிப்பதற்குரிய இன்பத்தை ஒருவர் பெற்றுக் கொள்வாராயின் ஒருவினாடி நேரம் கூட அவரால் அதை தரிசிக்காமல் இருக்க முடியாது. காரணம் அந்த அழகை தரிசிப்பதே அவருக்கு சுவர்க்கமாகும். இனி எந்த சுவர்க்கத்தில் கண்ணும் வெட்க உறுப்புகளுக்கும் வயிற்றுக்கும் பிரயோஜனமுண்டோ அந்த சுவர்க்கம் அவருக்கு அற்பமாகத் தோன்றும்"**

என சுவர்க்கத்தை இரு வகையாகப் பிரித்துக் கூறியிருப்பதன் ரகசியமென்ன? மேற்கூறப்பட்டவாறு சுவர்க்கவாதிகளை வாலிபர்களாக மாற்றி சுவர்க்கத்தில் செலுத்தப்படும் எனக் கூறப்பட்டதில் இருவகை சுவர்க்க்கத்தில் எந்தவகை சுவர்க்கத்தில் செலுத்தப்படும்? என்பதையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும். மேலும் இந்த அறிவை குறித்து இறைவன் தனது வேதத்தில் சைக்கினையாக...

كَمَا بَدَأْنَا أَوَّلَ خَلْقٍ نُعِيدُهُ. كَمَا بَدَأَكُمْ تَعُودُونَ. اَللّٰهُ يَبْدَأُ الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ

**"படைப்புக்களை நாம் துவக்கத்தில் படைத்ததைப் போலவே பின்னர் அவைகளை நாம் மீள வைப்போம். அவன் துவக்கத்தில் படைத்ததைப் போலவே நீங்கள் மீளுவீர்கள். இறைவன் எத்தகையவன் எனில்,படைப்புக்களை துவக்கத்தில் படைத்து பின்னர் அவைகளை மீள வைப்பானே அப்படிப்பட்டவன்"** என்றும்...

وَمَا نَحْنُ بِمَسْبُوقِينَ عَلَىٰ أَنْ نُبَدِّلَ أَمْثَالَكُمْ وَنُنْشِئَ

**"உங்களை போன்றோரை மாற்றி நீங்கள் அறியாதவண்ணம் உங்களை மாற்றியமைக்க நாம் இயலாதவர்களல்ல"** என்றும்...

"உலகிலுள்ள மிருக வர்க்கங்களும், ஊர்வனவும், இரு இறக்கைகளைக் கொண்டு பறக்கக் கூடிய பறவைகளும் உங்களைப் போன்ற கூட்டங்களே அன்றி வேறல்ல"

என்றும் கூறியுள்ள வாக்கியங்களின் கருத்தையும் நாம் ஆய்ந்தறிந்து வெளிப்படையாக போதிக்கப்பட்ட அறிவிலிருந்து அந்தரங்கமான அறிவின் ரகசியம் இன்னதென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். விஷயம் இவ்வாறு இருப்பதாலேயே...

وَاَمَّا مَنْ خَافَ مَقَامَ رَبِّهٖ وَنَهَى النَّفْسَ عَنِ الْهَوٰي فَاِنَّ الْجَنَّةَ هِيَ الْمَأْوٰي

**“யார் தனது ரட்சகனுடைய சமூகத்தை பயந்து (தீய)இச்சைகளை விட்டும் தனது உள்ளத்தை விலக்கினானோ அவன் தங்குமிடம் சுவர்க்கமாகும்“**

என்பதாக இறைவன் தன் வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்தில் தனது ரட்சகனுடைய சமூகத்தைப் பயந்து (தீய) இச்சைகளை அகற்றியவனே சுவர்க்கத்திற்கு உரியவன் என்னும் கருத்து தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால் சுவர்க்கத்திற்குப் போய் உண்டு, உடுத்தி ஹூருல்ஈன் என்னும் பெண்களோடு சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்னும் (சிற்றின்ப) இச்சைகளை உள்ளத்தில் வைத்துக் கொண்டு வணங்குவதற்கு என்ன வழியிருக்கிறது? என்பதை பற்றியும் நாம் ஆழ்ந்து நோட்டமிட்ட போது சுவர்க்கம் என்பதற்குரிய சரியான கருத்து இறைவனுடைய தரிசனையை பெற்று அதில் நாம் முக்தியடைவதே என்றும், பாமரர்களாகிய மனிதர்கள் எந்த சுவர்க்கத்தை எஎதிர்பார்த்து வணங்கிக் கொண்டிருக்கிறார்களோ, அது முக்திக்குரிய சாதனமாகிய இறைதரிசனை அல்ல என்றும், இந்நிலையில் யார் இறைதரிசனையை மட்டும் எதிர்பார்த்து வணங்குகிறானோ அவன் வேறு எந்த இச்சைகளையும் தேடாதிருக்க வேண்டியது அவன்மீது கடமையாகும் என்றும் தெரியவருகிறது. ஆதலால் மேற்கண்ட ஆதாரங்களைக் கொண்டு...

اَلْعَاقِلُ بِالْاِشَارَةِ

**“அறிவுடையோருக்கு சைக்கினையே போதுமாகும்“**

என்னும் ஞானவான்களின் கருத்துக்கேற்ப தெளிந்த அறிவுடையோர் இவைகளின் ரகசியம் இன்னதென்பதை ஆய்ந்தறிந்து நரகமென்னும் குகைக்குள் சிக்கித் தாங்கமுடியாத வேதனைக்கு ஆளாகாது இறைவனுடைய தரிசனை என்னும் முக்தி சாதனமாகிய வெட்டவெளியில் ஐக்கியமடையக் கூடிய வழியை பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

*தொடர் இரண்டாம் பகுதியில்.....*